PUBLIC LIBRARY
JAFFNA

23/4/2012

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam ඒංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 07 | 2014 ஏப்ரல் 01 – 14 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 266



மாட்டிக்கிட்டு முழிக்குமா மு.கா.? 05



ஒரு கல்லில் இரண்டு குருவிகள் 07

ஓர் இனத்திற்கு மாத்திரம் சொந்தமானதல்ல 13



## எகிப்தில் ஒரே நாளில் 529 பேருக்கு மரண தண்டனை



பொதுமக்கள் கடும் கண்டனம்

தீர்ப்பை கைவிடுமாறு

ஒபாமா கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி முஹம்மது முர்ஸியின் ஆதரவாளர்கள் 529 பேருக்கு மரண தண்டனை விதித்து எகிப்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் எகிப்தில் பெரும் பதட்டம் ஏற்பட்டுள்ளது. கலவரத்தை ஏற்படுத்தியது தொடர்பாக 545 பேர் → 17

## ஜெனீவா பிரேரணை நிறைவேற்றம்

# இலங்கைக்கு எதிராக எந்தவொரு முஸ்லிம் நாடும் இல்லை

12 இல் 5 முஸ்லிம் நாடுகளின் ஆதரவு

இலங்கைக்கு முஸ்லிம் நாடுகள் குறித்த இனிப்பான செய்திதான்

-பஷீர் அலி

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை வெற்றி பெற்றுள்ளது. இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் இத்தீர்மானத்தை ஆதரித்திருந்த 23 நாடுகளில் எந்தவொரு முஸ்லிம் நாடும் இடம்பெறவில்லை. அதேவேளை, அமெரிக்க தீர்மானத்தை எதிர்த்து இலங்கைக்கு சார்பாக வாக்களித்த 12 நாடுகளில் 5 நாடுகள் முஸ்லிம் நாடுகளாகும். மேலும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகித்த 12 நாடுகளிலும் 5 நாடுகள் முஸ்லிம் நாடுகளாகும்.

குறித்த பிரேரணையில் பல முஸ்லிம் நாடுகளே தமக்கு கைகொடுக்கும் என இலங்கை அரசாங்கம் → 16

## இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் மதத் தலைவர்கள் இந்நாட்டை பாதுகாத்தனர்



ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸா நாயக்க

சஜாத் முஹம்மத்

அரசாங்கம் அண்மைக்காலமாக சிங்கள முஸ்லிம் சமூகங்களுக்கிடையே இன மோதலை உருவாக்க இனவாத குழுக்களை உருவாக்கியுள்ளது. அரசாங்கத்தின் தேவை இந்நாட்டின் குழப்பந்தான். இந்நிலைமை ஏற்படாமல் நாம் நாட்டை பாதுகாக்க முயற்சிக்கின்றோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் மதத் தலைவர்கள் பள்ளிவாசல்களினூடாக மக்களுக்கு அறிவூட்டி, முஸ்லிம் மக்களை சரியாக வழிநடத்தி பிரச்சினைகள் ஏற்படாமல் இந்நாட்டை பாதுகாத்தனர். தேசிய சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து பிரிவினர்களுக்கும் சம அந்தஸ்தை வழங்கவேண்டும். இந்நாட்டின் ஓர் இனம், மதம், கலாசாரம் இன்னுமோர் இனத்தைவிட மேலானது என்று கூறி இந்நாட்டில் தேசிய சமாதானத்தை ஏற்டுத்த முடியாது.

(இதன் தொடர்ச்சியை நேர்காணலில் காணலாம்)

## ஹிஜாபுக்கு நீதிமன்றம் நாடிய மாணவி அதிபர் உட்பட 7 பேருக்கு அழைப்பாணை

பாடசாலைக்கு ஹிஜாப் அணிந்து வரக்கூடாது என்று நாவல - ஜனாதிபதி வித்தியாலய அதிபரால் விடுக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து அப்பாடசாலையின் மாணவியான பாத்திமா ஹகீனா (11 வயது) தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகள் 7 பேருக்கும் அழைப்பாணை அனுப்புமாறு உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

இந்த மனு நீதியரசர்களான சந்திரா ஏக்கநாயக்க, பிரியசத் டெப் மற்றும் ரோஹினி மாரசிங்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. → 17

## பிலிப்பைன்ஸில் முடிவுக்கு வந்த 17 வருட இஸ்லாமிய போராட்டம்

கடந்த 1972 ஆம் ஆண்டு முதல் தெற்கு பிலிப்பைன்ஸில் முஸ்லிம் போராட்டக்குழுவான மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கும் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் இடையே இடம்பெற்று வந்த பாரிய உள்நாட்டு யுத்தத்தில் 120000 பேர் கொல்லப்பட்டனர். இதனை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணித்தலைவர் அல் ஹாஜ் முராத் இப்ராஹிம் தலைமையில் பிலிப்பைன்ஸ் அரச அதிகாரிகள் முன்னிலையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் புதைக்கப்பட்டுள்ள மர்ம பிரதேசம்

### இனி எலும்புக்கூடுகள் தோண்டப்படும்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பிரதேசத்தில் 12.07.1990 அன்று விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டு மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் இடங்களை, காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். → 16



ஜனாதிபதிக்கு நல்லாசி வேண்டி கொட்பிடிய ஜுமுஆ பள்ளிவாசலில் இடம்பெற்ற விசேட வைபவத்தில் ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மை மட்டுமன்றி அரசுக்கு விசுவாசமற்றோரும் ஒடுக்கப்படுகிறார்கள்



வட மாகாணசபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின்

இலங்கையில் தற்போதுள்ள பிரச்சினை தமிழ்ர்களின் பிரச்சினையாக மட்டும் அடையாளப்படுத்த முடியாது அது இந்நாட்டில் ஒடுக்கப்படுகின்ற எல்லா மக்களினதும் பிரச்சினையாகவே மாறிவிட்டிருக்கிறது. சிறுபான்மை சமூகங்கள் ஒடுக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. இப்போது ஆளுந்தரப்பிற்கு விசுவாசமில்லாத அனைத்து மக்களும் ஒடுக்கப்படுகிறார்கள்; வன்முறை கொண்டு அடக்கப்படுகிறார்கள் என வட மாகாணசபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் தெரிவித்தார். தமிழ் மக்களுக்கான நீதியான தீர்வைக் கோரி மன்னார் மாவட்ட → 16



## முஸ்லிம்கள் மீள்குடியேறுவது தேசத்துரோகம்

### பிதற்றித் திரியும் பொதுபல சேனா

வில்பத்துவில் இருந்து மன்னார் வரையில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் முஸ்லிம் குடியேற்றங்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டு வடக்கிலும் முஸ்லிம் ஆதிக்கத்தை பரப்பச் செய்து சிங்கள, தமிழ் மக்களை → 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Generated by Foxit PDF Creator © Foxit Software
http://www.foxitsoftware.com For evaluation only.



### அனைத்து சமூகங்களினதும் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய

# உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றின் மூலமே சர்வதேச தலையீடுகளை தவிர்க்க முடியும்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) இன் ஊடக அறிக்கை

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் சர்வதேச தலையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவா? என்ற வாதப் பிரதிவாதங்கள் தற்போது உச்ச நிலைக்குச் சென்றிருக்கின்றன.

இச்சூழ்நிலையில், தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தற்காலிக வழிவகைகளைத் தேடுவதை விடுத்து பிரச்சினைகளின் அனைத்துப் பரிமாணங்களையும் கவனத்திற்கொண்டு முழுமையான நிரந்தரத் தீர்வினை நோக்கி நகர வேண்டியது ஒரு தேசிய கடமையாக மாறியிருக்கிறது.

இந்த வகையில், சமூகங்களிடையே மீளிணக்கத்தையும் நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டியது அடிப்படைத் தேவையாக உள்ளது. உண்மைகள் கண்டறியப்பட்டு பரஸ்பரம் தவறுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பரஸ்பரம் மன்னிக்கக் கூடிய சுழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டு அர்த்தபூர்வமான மீளிணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த பல தசாப்தங்களாக நிலவிவரும் இன முரண்பாடுகளினால் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்கள் அனைத்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றன.

வன்முறை, பயங்கரவாதம், படுகொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை, மனித உரிமை மீறல்கள், காணாமல் போதல், இனச் சுத்திகரிப்பு, சொத்துக்கள் அழிப்பு, ஆட்கடத்தல், சூறையாடல், கப்பம், நில ஆக்கிரமிப்பு மற்றும் வாழ்வாதார இழப்புகள் என இப்பாதிப்புகள் நீண்டு செல்கின்றன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தற்போதைய நிலையில், இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நீதியும் நிவாரணமும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். சமூக நீதியை நிலை நிறுத்தல் என்ற அனைவரினதும் கடமைப் பாட்டினது அடிப்படை அம்சமாக இது அமைந்துள்ளது.

இந்நாட்டில் இன முரண்பாடு சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தோன்றிய, தீர்க்கப்படாத நீண்டகால பிரச்சினையாகும்.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க, அனைவரது அரசியல் அபிலாஷைகளையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வின் மூலமே இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்து, நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும்.

எனவே, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய, அனைத்து சமூகங்களினதும் நியாயமான அபிலாஷைகளை புத்தி செய்யத்தக்க, அரசத புரவமான தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அது போலவே வெளித் தலையீடுகளை கையாள்வதற்கான, சமநிலையான புதிய அணுகுமுறை ஒன்றும் அவசியப்படுகிறது.

சுதந்திரத்தைத் தொடர்ந்து மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள், இன முரண்பாட்டுக்கான அரசியல் காரணிகளை உரிய காலத்தில் கவனத்தில் எடுக்கவில்லை. அவை உரியமுறையில் தீர்க்காமல் விட்டு வைக்கப்பட்டன. இந்நிலையே நாட்டை வன்முறைக்கும் பயங்கரவாதத்திற்கும் கொடிய யுத்தத்திற்கும் இட்டுச் செல்ல வழி வகுத்தது.

உள்நாட்டில் நியாயமான தீர்வு அடையப்படாத நிலையில், உள்நாட்டுப் பொறிமுறைகளிலும் தீர்வு முயற்சிகளிலும் இருந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் படிப்படியாக தளரத் தொடங்கின. இந்நிலை பிராந்திய அரசுகளினதும் சர்வதேச சமூகத்தினதும் தலையீடுகளுக்கு வழிகோலியது. இத்தலையீடுகள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாகவே காணப்பட்டு வருவதோடு அதன் தாக்கமும் அளவும் படிப்படியாக அதிகரித்தே வந்திருக்கின்றன.

பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் எந்தவொரு தரப்பும் திருப்திப்படும்படியான விளைவுகளை இதுவரை ஏற்படுத்தவில்லை. சர்வதேச தலையீடுகள் பற்றிய ஏனைய நாட்டு அனுபவங்களும் அவதானங்களுங் கூட இதனையே நிரூபிக்கின்றன.

எனவேதான், கடந்தகால உள்நாட்டு, வெளிநாட்டு அனுபவங்களின் அடிப்படையில் சர்வதேச தலையீடுகளைக் கையாள்வதற்கான சமநிலையான புதிய அணுகுமுறை ஒன்று அவசியப்படுகிறது.

மேலும், இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு தொடர்பிலும் சமூகங்களிடையே மீளிணக்கத்தைக் கட்டியெழுப்பவும் அரசாங்கம் மேற்கொண்ட உள்நாட்டுப் பொறிமுறைகளின் மீது, மக்களும் சர்வதேச சமூகமும் படிப்படியாக நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் ஊடாக எட்டப்பட்ட அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகள் உதாசீனப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டன. கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக பெறப்பட்ட பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படாது இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையிலும் அரசியல் உறுதிப்பாட்டிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மேலும், யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் சிறுபான்மையினர் மீதான நெருக்குவாரங்களும் அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன.

➜ 17


# Mercy Education Complex

மூன்றாம் நிலை மற்றும். தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC P13/0039) பதிவு செய்யப்பட்ட (NVQ L - 3) அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஆகும்.

## தொழிற் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்தல் - 2014/2015

GCE சாதரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
வாழ்க்கையில் நம்பிக்கையிழக்க வேண்டாம்.
சமூகத்தில் ஒழுக்க விழுமியங்கள் கொண்ட நற்பிரஜையாக தலை நிமிர்ந்து வாழவும்,
சுயதொழில் ஒன்றைக் கற்று சொந்தக் காலில் நிற்கவும்,
இதோ! கடந்த நான்கு ஆண்டுகளாக (NVQ L – 3) தகைமையுடன் பல நூறு சிறந்த தொழிநுட்பவியலாளர்களை உருவாக்கிய மேர்சி தொழிற்பயிற்சி நிலையம் - (Mercy Vocational Training Centre), உங்களையும் பயிற்றுவிக்கத் தயாராக உள்ளது.

**Diploma Courses**

- Electrical (Power) House, Industrial, 3 phases wiring, & House hold Appliances Repair
- Welding –(Arc, Gas, Spot, Tig, Mig)
- Plumbing – Domestic & Industrial, Water Pump Repairing
- Refrigeration & Air Conditioning (Refrigerator, Window A/C, Package, Chiller & Auto A/C)

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் யாவும் ஒரு வருடகால முழுநேர வதிவிடப் பயிற்சி நெறிகளுடன். 6 மாதகால வெளிக்களப் பயிற்சி நெறியினையும் (Industrial) கொண்டதாகும்.

இப் பயிற்சி நெறிகளைப் பின்பற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாமே தயாரித்துப் பூரணப்படுத்திய (Bio Data) விண்ணப்பங்களை 2014 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக. சுயவிலாசமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட காகித உறையுடன் சேர்த்து. "Director ,Mercy.V.T.C P.O Box 01, Madurankuli-ya" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது கைப்பக்க மேல் மூலையில் "தொழிற்பயிற்சி நெறி – 2014" என எழுதப்படுதல் வேண்டும்.

**தகைமைகள்:**
GCE சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் நான்கு பாடங்களில் சித்திய டைந்திருப்பதுடன். Electrical (Power), Refrigeration & Air Conditioning ஆகிய கற்கை நெறிகளைப் பின்பற்ற விரும்புபவர்கள் கட்டாயம் கணிதம் அல்லது விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை: (17,18,19 ) வயது 1994.04.31 க்கும் 1997.04.31 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

**கட்டணம்:**
உணவு. தங்குமிடம், மற்றும் பயிற்சி நெறிச் செலவுகள் என்பவற்றுக்கான சலுகைக் கட்டணமாக மாதாந்தம் ரூபா 5000/= அறவிடப்படும்.
தந்தை உயிருடன் இல்லாத அநாதை விண்ணப்பதாரர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: Office: 032-2268401/2 / Irfan Sir 0777 640680/Rizaan Sir 077 5716717)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு பிளவுபடக் கூடாது என்பதற்காகவே வட முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை

ஏ.எஸ்.எம். ஜாவித்



நாடு பிளவுபடக் கூடாது என்பதற்காகவே வட மாகாண முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. ஆனால் இன்று யுத்தம் நிறைவுற்று சமாதானக் காற்றை சுவாசிக்கலாம் என்ற வேளையில் சமயத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாதம், மிக வேதனை அளிக்கின்றது. பொதுபலசேனா உள்ளிட்ட சில இனவாதக் குழுக்களின் செயற்பாடுகளே இதற்கு முக்கிய காரணமாகும்.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாத செயற்பாடுகளை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டி அவற்றை தடைசெய்ய நாம் முழு முயற்சிகளையும் எடுத்துக்கொண்டே இருக்கின்றோம். நாம் ஜனாதிபதியை நம்பியிருக்கின்றோம். காரணம், இந்த அரசாங்கம் உறுதியானதுடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால் அரசுடன் இருந்துதான் எமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்படவில்லை. யுத்தத்தில் முஸ்லிம்கள் ஈடுபடாத போதிலும் இன்று இனவாதிகள் முஸ்லிம்கள் விடயத்தில் தேவையற்ற விதத்தில் மூக்கை நுழைக்கின்றனர். குறிப்பாக அபாயா, ஹலால், வர்த்தகம் என ஒவ்வொரு விடயத்திலும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். இச்செயற்பாடுகளை நிறுத்தவும் அவை இடம்பெறாதிருப்பதற்குமான நடவடிக்கைகளை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டி முன்னின்று செயற்படுகின்றோம்.

**முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்படவில்லை.**

**சிறுபான்மை மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை.**

சிறுபான்மை மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. பொலிஸாரும் மதஸ்தலங்கள் மீது தேவையற்ற தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தாம் நினைத்தமாதிரி நடந்து கொள்கின்றனர். கிறேண்ட்பாஸில் பௌத்த தீவிரவாதிகள் பள்ளியை உடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தனர். இதற்காகவே நான் பொலிஸ் மா அதிபரை பதவி விலகச் சொன்னேன் இது எமது சமூகத்தின் நலன் கருதியே செய்தேன்.

# தென்னாபிரிக்க பாடத்திட்டத்தில் தமிழ்

தென்னாபிரிக்காவில் உள்ள அரச பாடசாலைகளில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, குஜராத்தி, உருது ஆகிய இந்திய மொழிகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மொழிகள் முதற்கட்டமாக கவாசுலு நடால் மாகாணத்தில் மூன்றாவது மொழிப் பாடமாக கற்பிக்கப்படவுள்ளது.

தென்னாபிரிக்க பாடசாலைகளில் இந்த மொழிப் பாடங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற பாடத் திட்டங்களாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி



இவ்வருடம் க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களது பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று ஜமாஅத்தே இஸ்லாமி நாம்புளுவ மன்றத்தின் ஏற்பாட்டில் நாம்புளுவ பாபுஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வளவாளராக ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் நிஸ்ராப் (நளீமி) கலந்து கொண்டார்.

# ஹக்கீமுக்கு இறைவனின் தண்டனை கிடைக்கும்

## அடித்துச் சொல்லுகிறார் அப்துல் காதர் எம்.பி.



**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றியுள்ள தலைவர்.**

அரசாங்கத்தின் சகல வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு, நாட்டுக்கு எதிராக ஜெனீவாவில் அறிக்கை வழங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை அல்லாஹ் தண்டிப்பான் என பிரதி அமைச்சர் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் பிரச்சினை இருந்தால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். அதனை விடுத்து ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச அமைப்புக்களுக்கு அறிக்கை வழங்குவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்தவொரு விடயத்தையும் செவிமடுக்கக் கூடிய நன்றியுள்ள தலைவர். ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு வேறு எவரிடமும் தீர்விருக்காது. புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போருக்கு முஸ்லிம் நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. ஜெனீவா தீர்மானத்தை தோற்கடிக்கவும் இந்த முஸ்லிம் நாடுகள் ஆதரவளிக்கும். அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் எதிராக செயற்படுவோரை இறைவன் தண்டிப்பான் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


After O/L **இர்பானிய்யா அரபு, இஸ்லாமிய கலாபீடம்**

**கெகுணகொல்ல, குருநாகல்**

5 வருட கற்கைநெறி 9 வது அனுமதி

**2014 - 2015**

**புதிய மாணவர் அனுமதி**

**வெளிவாரிப் பட்டப்படிப்புடன் கூடிய ஷரீஆ கற்கைநெறி**

- இஸ்லாமிய ஷரீஆ துறையில் தெளிவு
- வெளிவாரி கலைமாணிப் பட்டப்படிப்பு (A/L, BA)
- அரபு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகள்
- அல் ஆலிம் பகுதி 1, 2
- கணினி கற்கைநெறி

தகைமை:
- அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல்
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த. (உ/த) கலைப்பிரிவில் கற்பதற்கான தகைமையைப் பெற்றிருத்தல்
- 18 வயதுக்குட்பட்ட முஸ்லிம் ஆண் மாணவராக இருத்தல்

- இவை அனைத்தும் பூரண இஸ்லாமிய சூழலில் 05 வருடத்தினுள் போதிக்கப்படும்
- கற்கைநெறியின் முடிவில் இஸ்லாமிய கலை மற்றும் அரபு மொழியில் உயர்தர சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பு:
குறித்த தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் O/L Result, NIC, BC

நேர்முகப் பரீட்சை
2014 மே19 மற்றும் 25 ஆகிய இரு தினங்களிலும் காலை 9.00 மணி முதல் நடைபெறும்

மேலதிக விபரங்களுக்கு:
037-2247616, 0774242500, 0714841055



# தன்வீர் அகடெமி

சிங்கள மொழியில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களிலிருந்து ஆலிம்களை உருவாக்கும் முன்னோடி உயர் கலாபீடமான தன்வீர் அகடமியின் புது மாணவர்கள் இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் தற்போது நடை பெறுகிறது.

தகைமைகள்
- க.பொ.த. சா/த பரீட்சைக்கு 2012 அல்லது 2013ஆம் ஆண்டு சிங்கள மொழியினூடாக தோற்றியிருத்தல்.
- சிறந்த தேகாரோக்கியத்துடன் இருத்தல்.

கால எல்லை
- இக் கற்கை நெறியானது ஐந்து வருட வதிவிட முழு நேர கற்கை நெறியாகும்.

இலவசம்
- இப் பாடநெறியை தொடரும் உங்களுக்கு......

✓ அறபு, சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நிபுணத்துவம்.
✓ க.பொ.த. உ/த பரீட்சைக்கு தயார்படுத்தல்.
✓ அல்ஆலிம் பரீட்சைகளுக்கு தயார்படுத்தல்.
✓ தர்மாச்சார்ய பரீட்சைக்கு தயார்படுத்தல்.
✓ தகவல் தொழில் நுட்பம்.
✓ தொழில் மற்றும் உயர் கல்விக்கான வழிகாட்டல்.

**போன்றவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.**

கவனிக்கவும்:- விடுதி மற்றும் உணவு வசதிகளுக்காக குறித்த் ஒரு தொகைப் பணம் அறவிடப்படும்.

Contact:THE PRINCIPAL,
TANWEER ACADEMY, MINHATH MAWATHA,
THIHARIYA.

தொலைபேசி: 033 2297371, 077 3763830, 071 6143725


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர்: 13 இதழ்: 07 ஏப்ரல் 1-14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு– 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜெனீவாவினால் முடியுமா?

2009 இல் முடிவடைந்த முப்பதாண்டு சிவில் யுத்தத்திற்கான விதையை 1956 இல் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் நட்டியது. 1972 இல் ஸ்ரீமாவோ அரசாங்கம் தனிச் சிங்கள அரசியல் யாப்பொன்றை முதலாம் குடியரசு யாப்பு என்ற பெயரில் கொண்டு வந்ததும் இனிமேல் அரசுடன் பேசுவதில் அர்த்தமில்லை எனக் கண்ட வடக்கு- கிழக்குத் தமிழ் சமூகம், 1975 இல் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை வெளியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானதும் தனித் தமிழ் ஈழமே தீர்வென்று முடிவு செய்ததும் அந்த மாநாட்டில்தான். பல அரசாங்கங்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்து ஆயுதக் கலாசாரம் தோன்றி ஈற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலம் வாய்ந்த ஆயுதக்குழுவாக மாறி யுத்தமாக வெடித்தது. இந்தியாவின் தலையீட்டில் 13 ஆவது சீர்திருத்தம் மாகாணசபை முறை வந்ததெல்லாம் நாம் அறிந்ததே. 1976 - 2009 வரை நடைபெற்ற யுத்தம் பிரபாகரன் கொலையுடன் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. யுத்தத்துக்கு இலங்கைக்கு ஆதரவு வழங்கிய நாடுகளே இன்று யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் வகை கூறல் நிறைவேற்றப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டி சர்வதேச மனித உரிமைப் பேரவையில் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றின. 2011, 2012 இல் நிறைவேற்ற கூறப்பட்ட பிரேரணையின் அடுத்த கட்டமாக கால எல்லை குறிப்பிட்ட விசாரணைகள் பொறிமுறை முன்வைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் இலங்கை வெற்றி பெற்றதை சகித்துக்கொள்ளாத ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையின் முன்னேற்றத்தைத் தடுக்கவே ஜெனீவாவில் பிரேரணை கொண்டு வந்ததாகவும் அதற்கு ஆதரவு வழங்கும் உலக நாடுகளும் சரி, எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டணியும் சரி தேசத் துரோகிகள், நாட்டுப் பற்றற்றவர்கள் என்றே அரசாங்கம் கூறுகின்றது. ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, தேச ஹித்தேசி, ஜாதிக வியாபாரம் போன்ற அரசியல் அமைப்புகளும் சிங்கள ராவய, பொதுபலசேனா, ராவனா பலகாய போன்ற இனவாத அமைப்புகளும் அரசாங்கத்தின் செயற்பாட்டை சரிகாணும் நிலையில், அண்மைக்காலமாக சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் நிகழ்வுகளும் ஜெனீவாப் பிரேரணையில் முக்கிய உள்ளடக்கமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

7000 பில்லியன் ரூபா கடனில் வாடும் ஒரு நாடு என்ற வகையிலும் அத்தியவசிய உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், இயந்திரங்கள், உடுதுணிகள், கட்டடப் பொருட்கள் என்ற அனைத்தும் இறக்குமதி செய்யப்படும் ஒரு நாடு என்ற வகையிலும் ஏற்றுமதிக்காக ஐரோப்பிய சமூகத்தையே பெரும்பாலும் நம்பியிருக்கும் நிலையிலும் ஐ.நா. வையும் அமெரிக்கா, பிரித்தானியா உட்பட்ட மேலைத்தேச சமூகத்தையும் பகைத்துக்கொண்டு கருமமாற்றுவது எந்தளவு புத்திசாதுரியமானது என்ற கேள்விக்கு அரசாங்கம் விரைவில் விடை காண வேண்டியிருக்கும். மனித உரிமைகள் ஆணையத்தின் பிரேரணையை, அதன் உள்ளடக்கத்தைப் புறக்கணிப்பதும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்குச் சவால் விடுவதும் ஒரு சுதந்திர நாட்டின் இறைமையாக இருப்பினும் அவ்வாறு சவால் விட்ட நாடுகளுக்கு அண்மைய வரலாற்றில் ஏற்பட்ட அல்லது ஏற்பட்டு வரும் நிலைமைகளையும் கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது, ஜெனீவாவினால் மட்டும் இப்பிரச்சினை தீரப்போவதில்லை என்பது நன்கு விளங்கும். பாதிக்கப்பட்ட வடக்கு சமூகத்துக்கு திருப்தியான தீர்வு வழங்கி, யுத்தகால நினைவுகளில் இருந்து இரு சாராரும் மீண்டும் ஒரே நாட்டின் தேசிய இனங்களாகச் சிந்திக்காத வரை பிரச்சினை தீரப்போவதில்லை என்பதும் மட்டும் உறுதி.


# மியன்மார் முஸ்லிம் படுகொலைத் தலைவர் இலங்கை வருகிறார்



மியன்மாரில் உள்ள ரொஹின்கியா முஸ்லிம்களின் படுகொலைக்கு சூத்திரதாரியாக இருக்கும் மியன்மார் தேசப்பற்றுள்ள அமைப்பின் தலைவர் சிரத்து தேரர் இலங்கை வரவுள்ளதாக அறிய முடிகிறது.

அண்மையில் மியன்மாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடுத்த அழைப்பை ஏற்றே அவர் இலங்கை வரவுள்ளார்.

பௌத்த பயங்கரவாதத்தின் முகம் என வர்ணிக்கப்படும் சிரத்து தேரர் தலைமையில் மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் அமைப்புடன் இலங்கை, முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் பொதுபல சேனா அமைப்பு கைகோர்த்திருப்பது அதன் புதிய பரிணாமமாகும்.






■ ஜெனீவாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா வாதிட வேண்டும்.

–கருணாநிதி

இது ஒங்கட கத. ஆனா, ஈழ இராஜ்யம் ஒன்று இலங்கையில் உருவாகினால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையுமெண்டு வெங்கையா நாயுடு சொல்றாரே?



■ சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேசசபை பெற்றுக்கொடுக்கப்படும்.

–அமைச்சர் அதாஉல்லா

ஒங்கட வழி எப்பவும் தனி வழிதானே... அப்போ கல்முனை மாநகர சபையிர தலையில ஓங்கி அடிக்கப்போறீங்க?



■ நவிப்பிள்ளையிடம் ஹக்கீம் ஆவணத்தை வழங்கியிருக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு.

–பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

சிலர் இருக்காங்க, தான் செய்றதுமில்ல செய்றவன செய்ய உர்றதுமில்ல... அப்போ பள்ளிவாசல்கள ஒடைக்கட்டும் காணிகள புடிக்கட்டும் நாமல்லாம் இறுக்கிப் பொத்திக்கிட்டிருப்பம்.



■ இஸ்லாமிய மதத்திலிருக்கும் தவ்ஹீத், ஜமாஅத், தப்லீக் ஆகிய பிரிவினர்களுக்கிடையிலான மதப் போராட்டமே பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதற்கு முக்கிய காரணமாகும்.

–அமைச்சர் சம்பிக்க ரணவக்க

நான் நெனச்சன்... இப்புடியெல்லாம் கத பிறக்குமெண்டு... திம்பாருக்கு நாமதான் தேன் எடுத்துக் கொடுக்கிறோம்.



■ பௌத்த மதத்தை எவ்வாறு கௌரவிக்கின்றோமோ அதேபோல் ஏனைய மதங்களையும் கௌரவிப்பதே ராஜபக்ஷாக்களின் கொள்கை.

■ முஸ்லிம்களுக்கு எந்தவோர் அச்சுறுத்தலோ, பிரச்சினைகளோ வர இடமளிக்கமாட்டோம்.

■ கிழக்கில், பொலனறுவையில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். அப்போது யாரும் ஜெனீவாவுக்குப் போகவுமில்லை, கடிதம் அனுப்பவுமில்லை.

–பஷில் ராஜபக்ஷ

இந்தக் கேள்விகள பொதுபல சேனாக்கிட்ட கேளுங்க சேர்... இனவாதிகள்ற போராட்டங்கள் ஒங்கட கண்ணுக்கு தெரிஞ்சிக்கிரண்டா இப்புடியெல்லாம் ஜெனீவாவில் நீதி தேட வந்திருக்காதே!

**எங்கள் தேசம் சந்தா விபரம்**

உள்நாடு: தனிப்பிரதி: 30.00 | வருட சந்தா: 1200.00 | ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00 | மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 | இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாட்டிக்கிட்டு முழிக்குமா மு.கா.?

-பஷீர் அலி

கடந்த சில மாதங்களாக மு.கா. வுக்கு நேரம் சரியில்லை என சிலர் பேசிக்கொள்கின்றனர். அரசியலில் சும்மா கிடந்த அப்புறாணிகள் கூட வாய்க்கு வந்த மாதிரி மு.கா. வை ஏசித்திட்டுமளவு அதன்நிலை சென்றிருப்பதாக கதையொன்று அடிபடுகிறது.

இப்போதுதான் பந்து கிடைத்திருப்பதாகவும் இனித்தான் அரசியலில் விளாசப் போவதாகவும் மு.கா. வின் கள நிலவரம் சொல்கிறது. இதனை மு.கா. காரர்கள் மாத்திரமன்றி விமல் வீரவன்சகூட சொல்லிவிட்டார்.

ஜெனீவா மாநாடும் மேல், தென் மாகாண சபைத் தேர்தலும் வேறு கட்சிகளுக்கு எப்படிப் போனாலும் தூங்கிக்கிடந்த மு.கா. வை தட்டியெழுப்பி விட்டிருப்பதே உண்மை.

தமது மெத்தனப் போக்கால் ஜெனீவாவில் நன்றாக வாங்கிக்கட்டுவது உறுதி என்று தெரிந்து கொண்ட அரசாங்கம், இதன் கடுப்பு மேலுமாவதற்கு மு.கா. நவநீதம்பிள்ளையிடம் கையளித்த முஸ்லிம்கள் தொடர்பிலான அறிக்கையே காரணம் என தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

முழங்காலுக்கும் மொட்டத்தலைக்கும் முடிச்சுப் போடுவதில் வல்லவர்களான சில இனவாத கட்சிகளும் சக்திகளும் இதனைத் தூக்கிப்பிடித்து கொக்கரித்துத் திரிகின்றன. நாடு முழுவதும் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டபோதும் முஸ்லிம்களுக்கு எதிரான காழ்ப்புணர்வுகள் பகிரங்கமாக இடம்பெற்ற போதும் அது குறித்து குறைந்தபட்ச நடவடிக்கையேனும் எடுக்காமல் இருந்த அரசாங்கம், மு.கா. ஊடாக இவ்விவகாரம் ஜெனீவா வரை சென்றுவிட்ட பின்னர் மாட்டிக்கொண்டு முழிக்கிறது.

இச்செயற்பாடுகளின் போதெல்லாம் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால், நாம் இது குறித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று நெஞ்சு நிமிர்த்தி சொல்லியிருக்கலாம். அந்த முழுப் பூசணிக்காயையும் மறைக்க இப்போது படாதபாடு படுகிறது. இதற்கு பலம் சேர்க்க சில இனவாத சக்திகளை துணைக்கு அழைத்திருக்கிறது அரசாங்கம். நாட்டில் மத சகியாமை இல்லை எனச் சொல்லும் வெற்று வார்த்தையை நம்ப ஜெனீவா தயாராக இல்லை.

> **வெண்ணெய் திரண்டு வரும்போது பானையை உடைக்க ஜனாதிபதி முன்வரமாட்டார் என்று ஹக்கீமாருக்கு நன்கு தெரியும். தெரிந்து கொண்டே இப்படி சவால் விட்டார். ஆனாலும், தேர்தல் முடிந்தபின், ஒரு பாடம் படிப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டாலும் சந்திரிகாவின் மீள் வருகையால் ஹக்கீமாரை கைக்குள்ளேயே வைத்திருக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கிறது.**

மு.கா. நவிப்பிள்ளைக்கு வழங்கிய அறிக்கையினால் நமக்கு பெரிதாகப் பாதிப்பில்லை; அவ்வறிக்கை வழங்கப்படாதிருந்தால் கூட, பிரச்சினைக்கு முகங்கொடுக்கத்தான் வேண்டும் என்பது அரசாங்கத்துக்கு தெரியும். இருந்தாலும், பாவம் தாம் தப்பித்துக்கொள்ள மு.கா. வையும் ஹக்கீமாரையும் பலிக்காடாவாக்குகிறது, அது.

இலங்கைக்கு விஜயம் செய்த நவிப்பிள்ளை விமானம் ஏறயிருந்த சற்று நேரத்திற்கு முன்னரே ஓடிப்போய் முஸ்லிம்கள் சம்பந்தமாக அந்த அறிக்கையை தான் கையளித்ததாக மு.கா. செயலாளர் நாயகம் ஹஸன் அலி எம்.பி. தெரிவித்திருந்தார். அவ்வறிக்கையில் காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை சுட்டுத் தள்ளிய புலிகளின் கொடூரம், அவ்வப்போது கிழக்கில் புலிகளால் வேட்டையாடப்பட்ட முஸ்லிம்கள் பற்றிய விபரம், தொண்ணூறாம் ஆண்டு வடக்கிலிருந்து புலிகளால் பலவந்தமாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம், அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த கடும்போக்கு சக்திகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள விடயங்கள் என்பன அதில் அடங்கியிருப்பதாக ஹஸன் அலி எம்.பி. தெரிவித்தார்.

இப்படிப் பார்க்கும்போது இது அரசாங்கத்துக்கு சார்பாகவே கொள்ளப்பட வேண்டுமான ஓர் அறிக்கையே. புலிகள், இன்னொரு சிறுபான்மை சமூகமான முஸ்லிம்கள் விடயத்தில் எப்படி மிருகத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அந்த சமூகம் சார்ந்த அமைப்பால் ஜெனீவாவுக்கு வழங்குவதென்பது ஒரு போதும் அரசாங்கத்தை காட்டிக்கொடுக்கும் செயலாக சொல்ல முடியாது. ஒரு வேளை அது அரசாங்கத்தை நியாயப்படுத்துவதாகக் கூட இருக்கலாம். எனவே, மு.கா. வால் வழங்கப்பட்ட அறிக்கையை தூக்கிப்பிடிக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை.

இதில் இன்மோர் அரசியலும் துலாம்பரமாகவே தெரிகிறது. மு.கா. வழங்கிய அறிக்கையில் முக்கால்வாசி புலிகளுக்கு எதிராகவே உள்ளபோதும் அண்மைக்கால கிழக்கு மாகாண காணி ஆக்கிரமிப்பு மற்றும் தெற்கில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத சக்திகளின் செயற்பாடு ஆகிய இரண்டுமே அரசாங்கத்துக்கு தலையிடி கொடுக்கும் அம்சமாக இருக்கின்றன.

➡ 16

# அமெரிக்காவின் குற்றச்சாட்டை நிரூபிக்கும் இலங்கையின் நடைமுறை உதாரணங்கள்



மூனா ஹானா

ஒருவருக்கு எதிராக ஏதாவது ஒரு வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் குற்றத்தை நிரூபிக்கும் வகையிலான வேறு எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடாமல் அவர் கவனமாக இருப்பார். குற்றத்துக்குச் சார்பாக மற்றுமொரு சம்பவம் இடம்பெற்று விட்டால் முந்திய குற்றத்தை நிரூபிக்க இது ஆதாரமாக அமையும் என்பது அவருக்குத் தெரியும். சாதாரண ஒரு குடிமகனுக்கு விளங்கும் இந்த உண்மை சில போது துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு நாட்டுக்கு விளங்குவதில்லையா என்று சிந்திக்க வைக்கும் சில நிகழ்வுகள் அண்மைக் காலத்தில் இலங்கையில் நடந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் மட்டுமன்றி யுத்தம் முடிந்த பின்னரும் நடைபெற்றாகக் கூறப்படும் மனித உரிமை மற்றும் ஊடக அடக்குமுறை, மனித உரிமை அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு விதித்த தடைகள் பற்றியே இம்முறை ஜெனீவா அமர்வு முக்கியமாக ஆராய்கிறது. இலங்கையில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளர்களைத் துன்புறுத்தியமை, அச்சுறுத்தியமை தொடர்பிலும் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் உள்ளன. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஐக்கிய நாடுகளின் கணிப்பீட்டில் முக்கிய இடத்தில் இருப்பவர்கள். அரசாங்கங்கள் மனித உரிமை மீறலின் உண்மையான தகவல்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற நிலையில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் அறிக்கையே உலகில் மனித உரிமைகள் பாதுகாப்புக்குப் பெரிதும் உதவுகின்றது. 90 களில் இலங்கையில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளுக்கு எதிராக அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கெடுபிடிகளையும் மீறி இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் (அப்போது இவர் எம்.பீ) அமைச்சர் வாசுதேச நாணயக்காரவும் ஜெனீவாவுக்குப் போன வரலாறுமுண்டு. திரு மஹிந்த ராஜபக்ஷவும் வாசுதேவ நாணயக்காரவும் சிங்கள இளைஞர்களின் கொலை தொடர்பில் கையாண்ட அதே முறை, இன்று தமிழ் இளைஞர்கள் விடயத்தில் கையாள்பவர்கள் தேசத் துரோகிகளாக பயங்கரவாதிகளாக சித்தரிக்கிறது. பிரசித்தி பெற்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான அருட்தந்தை ருக்ஷான் பர்னாந்து, ப்ரவீன் மகேசன் ஆகியோரை இலங்கை அருட்தந்தை அரசின் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு அண்மையில் கைது செய்தது. மனித உரிமை மீறல் ஜெனீவாவில் விவாதிக்கப்படும் போதே இங்கு மனித உரிமையில் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டமை சர்வதேசத்தில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அமெரிக்காவின் குற்றச்சாட்டை நிரூபிக்கும் நடைமுறை உதாரணமாக அது சுட்டிக் காட்டப்பட்டது. தகவல் சேகரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மனித உரிமைகளை மீறுபவர்கள் சுதந்திரமாக இருக்கும் நிலையில் அது பற்றிய தகவல்களை, செய்திகளைச் சேகரிப்பவர்கள் கைது செய்யப்படுகின்றனர் என்ற விடயம் சர்வதேசத்தில் பேசு பொருளானது. இது உண்மையில் இலங்கைக்கு எதிரான குற்றத்தை நிரூபிக்க இலங்கையே பலமான சாட்சியை வழங்கிய நிகழ்வாகவே கருதப்பட முடியும்.

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்தபோதும் காத்திருந்து கொடுத்தேன்

## நவப்பிள்ளைக்கு வழங்கிய அறிக்கை குறித்து ஹஸன் அலி



வட கிழக்கில் முஸ்லிம்களுக்கு நடைபெற்ற அநீதிகள், யுத்தம் முடிவடைந்த பிறகு அதி தீவிர போக்குடைய பௌத்த குழுக்களின் தாக்குதல் கொண்ட அறிக்கையை நவநீதம்பிள்ளையிடம் கையளிக்கச் சென்றபோது கொழும்பில் உள்ள ஐ.நா. ஏற்பாட்டாளர்கள் அரசில் இருக்கும் யாரையும் சந்திக்க முடியாது, அதற்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது. நீங்கள் சந்திப்பதென்றால் அரசின் அனுமதி பெற்று வாருங்கள் எனத் தெரிவித்தனர். ஆனாலும், நவநீதம்பிள்ளை பயணிக்க ஒரு மணித்தியாலத்துக்கு முன் அவரைச் சந்தித்து இந்த அறிக்கையை மட்டும் நான் கையளிக்க வேண்டும் என அவகாசம் கேட்டேன். அதன் பின்னரே இந்த அறிக்கையை நவநீதம்பிள்ளையிடம் கையளித்தேன். அவர் அதனை மேலோட்டமாக வாசித்துவிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார் என பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான ஹசன் அலி தெஹிவளையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் யுத்த காலத்தில் வட கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சகல சம்பவங்களும் அடங்கப் பெற்றுள்ளன. ஹஜ்ஜுக்கு சென்று காணாமல் போனவர்கள் தொடக்கம் காத்தான்குடி, ஏறாவூர், வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் என பல தகவல்கள் அதில் அடங்குகின்றன.

யுத்தத்திற்குப் பிறகு இந்த அரசின் நடவடிக்கையினால் அதிலும் அம்பாறை மாவட்டத்திலும் மட்டும் 35 ஆயிரம் ஏக்கர் காணியை முஸ்லிம்கள் இழந்துள்ளனர். இதேபோன்று திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் முஸ்லிம்களுடைய இருப்புகள் யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் அபகரிக்கப்பட்டுள்ளன எனவும் ஹசன் அலி எம்.பி. தெரிவித்தார்.

# பைஸர் முஸ்தபா மன்ற ஏற்பாட்டில் பெண்களுக்கான புதிய பயிற்சிநெறி

ஐ. ஏ. காதிர் கான்


பைஸர் முஸ்தபா மன்றம் இரண்டு நாட்களில் மிக வேகமாக பயிற்சி பெறக்கூடிய பெண்களுக்கான புதிய தொழிற் பயிற்சி நெறியொன்றை கொழும்பில் 14, 182 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் நடத்தியது.

இங்கிலாந்து, பாரீஸ், தாய்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் விசேட பயிற்சிகளைப் பெற்றவர்களால் இப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது.

இரண்டு நாட்களில் பயிற்சி பெற்று வீட்டில் இருந்தவாறே சம்பாதித்துக் கொள்ளக்கூடிய 28 வகையான புதிய பயிற்சிநெறிகள் இங்கு வழங்கப்பட்டன.

இப்பயிற்சிநெறியில் கலந்துகொண்டோருக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# மட்டு. பூநொச்சிமுனை குடியேற்ற மேம்பாட்டுக்கான அமைப்பு அங்குரார்ப்பணம்



பழுலுல்லாஹ் பர்ஹான்

மட்டக்களப்பு கள்ளியங்காடு முஸ்லிம் கொலனி பகுதியிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முஸ்லிம்களில் 74 முஸ்லிம் குடும்பங்கள் பூநொச்சிமுனை நாவற்குடா கிழக்குப் பகுதியில் 1998 ஆம் ஆண்டு மீள்குடியேறினர். இவர்களின் நன்மை கருதி நாவற்குடா கிழக்கு புதிய குடியேற்ற சமூக மேம்பாட்டுக்கான அமைப்பொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

புதிய குடியேற்ற சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் தலைவர் எம்.ஏ. சித்தீக் மற்றும் செயலாளர் உதுமாலெப்பை ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் என்.கே. ரம்ழான், அதிபர் ரசூல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனுக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் பதிலடி



## யோகேஸ்வரன் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறந்துவிட்டுப் பேசுகிறார்



பழுலுல்லாஹ் பர்ஹான்

தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படுவதற்குரிய வழிவகைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொண்டு வருவதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுபினர் சி. யோகேஸ்வரன், மட்டக்களப்பு பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு காணிகளை விற்கவேண்டாம் எனத்தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கடந்த 30 வருடங்களாக உயிர்கள், உடைமைகளை இழந்து அகதிகளாகவும் அனாதைகளாகவும் விதவைகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மூவின சமூகங்களும் ஒரு சுபீட்சமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். இந்நோக்கில் ஜனாதிபதி அவர்களின் மனிதாபிமான நடவடிக்கையினூடாக மீட்கப்பட்ட வட கிழக்கு மக்களை உயர்த்துவதற்கான அபிவிருத்திப் பணிகள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த வகையில் மக்கள் போக்குவரத்திற்காக அதிக சிரமங்களை எதிர்கொண்ட மட்டக்களப்பு கல்லடி பாலம், பனிச்சங்கேணி பாலம், மண்முனைப் பாலம் போன்றன புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றன.

மண்முனை பாலத்தை திறப்பதனூடாக அந்த மக்கள் தினமும் இலகுவாக தங்களுடைய காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதுடன் எல்லா வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவார்கள்.

➡ 16

# ஜாமிஆ நளீமிய்யா புதிய மாணவர் பிரவேசப் பரீட்சை - 2014

2014 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் (முஸ்லிம் ஆண்) ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முக மற்றும் எழுத்துப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் காலை 08:30 மணி முதல் ஜாமிஆ நளீமிய்யா வளாகத்தில் நடைபெறவுள்ளன. எழுத்துப் பரீட்சையில் மாணவரின் மொழித்திறன், பொது அறிவு, விவேகம் என்பன பரீட்சிக்கப்படும்.

நேர்முக, எழுத்துப் பரீட்சைகள் வடக்கு, வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 28.04.2014 ஆம் திகதி திங்கட்கிழமையும் தெற்கு, ஊவா, மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 29.04.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா, பேருவளை.
தொ.பே:
0342276338, 0342277112

# சமாதான நீதவான்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பாணந்துறை, சரிக்கமுல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஓர் எழுத்தாளர் , இலங்கையின் முன்னணி பத்திரிகைகளில் கட்டுரைகள், சிறுகதைகள், வரலாற்றுத் தொடர்கள், ஆக்கங்கள் என்பனவற்றை தொடர்ந்து எழுதி வரும் இவர், யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் பழைய மாணவரும் மாணவர் தலைவருமாவார். யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த மர்ஹூம்களான அப்துல் காதர் முஹம்மது பரீத் - றஸீனா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வராவார்.

# காத்தான்குடியில் மஸ்ஜிதுல் இர்ஷாத் பள்ளிவாசல் திறப்பு விழா

காத்தான்குடி நிருபர்



காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலைய வளாகத்தில் 1997 முதல் செயற்பட்டு, தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள மஸ்ஜிதுல் இர்ஷாத் பள்ளிவாசல் திறப்பு விழா உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் தலைவரும் தென்கிழக்கு பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய கற்கை பீடத்தின் பீடாதிபதியுமான அஷ்ஷெய்க் எம். அலியார் றியாதி தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில், காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் முக்கியஸ்தர்கள், காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் பிரதிநிதிகள், உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.



தெஹிவளை அல் அஸாபிர் சர்வதேச பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. அதன்போது விநோத உடைப் போட்டியிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட சிறுவர்களை படத்தில் காணலாம்.

றிம்ஸா முஹம்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பார்வை



**மாகாணசபை தேர்தலில் மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியோ, அபிவிருத்தி பற்றியோ, விலையுயர்வு மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமோ பேசப்படவில்லை. அரசாங்கத்தின் ஒரே குரல் ஜெனீவாவாகத்தான் இருந்தது.**

# அரசாங்கம் ஒரு கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தவே திட்டமிட்டது



எம்.எச்.எம். ஹஸன்

**பொ**துவாக நோக்கினால் ஒரு மாகாண சபைத் தேர்தலுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்குமிடையில் நேரடியான தொடர்பிருக்க நியாயமில்லை. ஆனால், முடிவடைந்த மாகாணசபைத் தேர்தல் ஜெனீவாவுடன் நேரடியாக இணைக்கப்பட்ட தேர்தலாகவே இருந்தது. யுத்தம் முடிவடைந்த போது ஐ.நா. வும் சர்வதேச சமூகமும் இலங்கைக்குப் பூரண ஒத்துழைப்பு மனப்பாங்கில் செயற்பட்ட நிலைமாறி கடந்த ஐந்து வருடங்களில் அந்த உறவில் பாரிய கீறல்கள் ஏற்பட்டுள்ளன. யுத்தம் முடிவடைந்த பின்னர் நல்லிணக்கம் மற்றும் வகை கூறல் தொடர்பில் இலங்கை மீது அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை மேல் மற்றும் தென் மாகாண மக்களால் படுதோல்வியடையச் செய்யும் ஒரு தேர்தலாகவே அது காணப்பட்டது.

ஏலவே சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை சில திருத்தங்களுடன் மீண்டும் முன்வைக்கப்பட்டு இப்போது வாக்கெடுப்பு முடிந்த நிலையில் அது பற்றிய ஆழமான ஆய்வுகளை நடத்தப் போதி கால அவகாசம் இதுவரை அமையாவிட்டாலும் தேர்தல் முடிவையும் ஜெனீவா முடிவையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். 2012, 2013 ஆம் ஆண்டுகளில் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் உள்ளடக்கங்களை நிறைவேற்றுவதில் இலங்கை போதியளவு முன்னேற்றத்தைக் காட்டாதபடியால் மனித உரிமைகள் ஆணையைத்தின் தொழிநுட்ப உதவியுடன் குறிப்பிட்ட காலப்பிரிவுக்குள் உத்தேச விசாரணைப் பொறிமுறை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதே புதிய பிரேரணையாகும்.

2009 ஆம் ஆண்டை அடுத்திருந்த காலப்பகுதியில் காணப்பட்ட மனித உரிமைகள் உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பாதுகாத்துக் கொள்வதில் இலங்கை தோல்வியடைந்தது என்பதே நோக்குநர்களின் கருத்தாக உள்ளது. இம்முறை இலங்கைக்கு சார்பாகவும் எதிராகவும் ஜெனீவாவில் கிடைத்த வாக்குகள் பற்றி இலங்கை நன்கு அறிந்தே இருந்தது. பல நாடுகளுக்கு பிரயாணம் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினாலும் அமெரிக்கா தலைமையிலான பிரேரணையைத் தோற்கடிக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருந்ததாகவே குறிப்பிடலாம்.

ஜெனீவாவில் தோல்வி நிச்சயம் என்ற நிலையில் அதனை வெற்றியாக மாற்றியமைக்க எடுத்த மாற்று நடவடிக்கையே மாகாணசபைத் தேர்தல். ஜெனீவா மாநாடு மார்ச் 29 இல் இருப்பதாக அறிந்தவுடனேயே ஜே.வி.பி. ஓர் எதிர்வுகூறலை வெளியிட்டது: ஜெனீவா மாநாட்டை அண்டிய திகதிகளில் சில மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்பதே அந்த எதிர்வுகூறல்.

மனித உரிமைப் பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை விடுதலைப் புலிகளை இலங்கை தோற்கடித்ததை சகித்துக்கொள்ள முடியாத மேலை நாட்டவர் எமது முன்னேற்றத்தைத் தடுக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் ஒரு கீழ்த்தரமான நடவடிக்கை என அரசாங்கம் தேர்தல் பிரசாரத்தில் கூறியது. இதனை எதிர்த்து நிற்க இலங்கை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதுதான் மாகாண சபைத் தேர்தல், அதனை இந்நாட்டில் பற்றுள்ள மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். அரசாங்கம் ஒரு கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தவே திட்டமிட்டது. மக்களின் நாட்டுப் பற்றைத் தூண்டிவிட்டு மாகாணசபைத் தேர்தலில் அரசுக்கு வாக்களிப்பதன் மூலம் ஜெனீவாவைத் தோற்கடிக்க வைப்பதும் எதிர்க்கட்சிகளுக்கு வழமையாக விழும் வாக்குகளைக் கூடத் திசை திருப்பி எதிர்க்கட்சிகளை வரலாறு காணாத படுதோல்வியடைச் செய்வதுமே அந்த இரண்டு குருவிகளாகும்.

**ஜெனீவாவைத் தோற்கடிக்க வைப்பதும் எதிர்க் கட்சிகளை வரலாறு காணாத படுதோல்வி இடச் செய்வதும் என்பனவே அந்த இரண்டு குருவிகளாகும்**


தேர்தல் முடிவுகளை விரிவாக ஆராய்ந்து பார்க்க இன்னும் சற்றுக் காலம் தேவைப்படும். ஆனால், ஜனாதிபதி மக்களிடம் வேண்டிக் கொண்டது போல நாட்டுப் பற்று புடம்போடப்பட்டு எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிக்க ஆட்களே இல்லாத நிலை வந்ததா என்பதைப் பார்க்க இப்போது கிடைத்துள்ள முடிவுகள் போதுமானதாக இருக்கும். மாகாணசபை தேர்தலில் மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியோ, அபிவிருத்தி பற்றியோ, விலையுயர்வு மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமோ பேசப்படவில்லை. அரசாங்கத் தின் ஒரே குரல் ஜெனீவாவாகத்தான் இருந்தது. அபிவிருத்திதான் நோக்கமெனில் இன்னும் ஒரு வருடம் காலமிருந்த மாகாண சபைகளைக் கலைக்காமலே அபிவிருத்தியை மேற்கொண்டிருக்கலாம். யுத்தம் முடிந்தது முதல் நடைபெற்ற தேர்தல் வெற்றிகளை விடவும் ஓர் அமோக வெற்றியாக இது அமைந்துள்ளதா? முன்பு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பில் இருந்து தவிர்ந்து கொண்ட பலரும் இம்முறை தேசியப் பற்றினால் தூண்டப்பட்டு சுதந்திர வேட்கையால் உணர்வூட்டப்பட்டு ஜெனீவாவுக்கு எதிராக திரண்டு வந்து வாக்களித்திருக்க வேண்டும். வட மாகாணத்தில் தமிழ் மக்கள் அளித்ததுபோல 90% மேற்பட்ட வாக்குகள் அரசுக்கு கிடைத்திருக்க வேண்டும் ஏன், அவ்வாறு கிடைக்கவில்லை?

இது அரசின் செல்வாக்கு வீழ்ச்சியைக் காட்டுகின்றதா அல்லது ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணையை மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையா என்பதையே சிந்திக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதியும் பாராளுமன்றமும் பதவியிலிருக்கும் போது, அதிகாரிகள், நிர்வாக கட்டமைப்பு ஏனைய வசதிகள், பொலிஸ் மற்றும் வாகனங்கள் அனைத்தும் அரசுக்கிருக்கும் நிலையில் ஒரு வழமையான வெற்றியை ஏற்கனவே வெற்றி பெற்றிருந்த மாகாணசபைகளில் பெற்றுக் கொள்வது எந்த வகையில் சிறப்பு என்பதை சம்பந்தப்பட்டவர்களும் மக்களும் சிந்திக்க வேண்டும் அப்போதுதான் அது வெற்றியா, தோல்வியா? என்பதை அறிய முடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 36)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

இப்னுல் கைய்யிம் இங்கு உளவியலின் பக்கம் எமது கவனத்தை திருப்புகின்றார். சிகிச்சை வெற்றியளிப்பதற்கும் அவசர நிவாரணத்திற்கும் நோயாளியின் உளப்பாங்கு முக்கியத்துவம் பெறுவதாக அவர் கூறுகின்றார். நவீன மருத்துவமும் இதனை உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாக ஏற்றுக்கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மருத்துவம் மற்றும் ஏனைய உலக விவகாரங்கள் குறித்து வந்துள்ள அதிகமான ஹதீஸ்களை அப்படியே பொதுமையாகவும் முழுமையாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. மாறாக அவை குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு அல்லது குறிப்பிட்ட இடத்திற்கு அல்லது குறிப்பிட்ட நிலைமைக்கு பிரத்தியேகமானது என விளங்கி அதனை பிறிதொரு சந்தர்ப்பத்திற்கு அல்லது இடத்திற்கு அல்லது நிலைமைக்கு பிரயோகிக்காமல் இருப்பதே சிறந்ததாகும். அது மாத்திரமல்ல அவை சிலபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பகுத்தறிவை அல்லது அனுபவத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது என விளங்கிக் கொள்வதும் அவசியமாகும். 'மிப்தாஹு தாரிஸ் ஸஆதா' என்ற புத்தகத்தில் அவர் எழுதியுள்ளவற்றை உங்களுக்கு தருகின்றோம்.

இந்த ஹதீஸை நீங்கள் அவதானித்துப் பாருங்கள்:

"நீங்கள் பசும்பாலைப் பருகுங்கள் அது நிவாரணமாகும். பசுநெய் மருந்தாகும். மாட்டிறைச்சி சாப்பிடுவதையிட்டு உங்களை எச்சரிக்கின்றேன், அது நோயாகும்"

இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிப்பதாக இதனை இமாம்

**"நீங்கள் பசும்பாலைப் பருகுங்கள் அது நிவாரணமாகும். பசுநெய் மருந்தாகும். மாட்டிறைச்சி சாப்பிடுவதையிட்டு உங்களை எச்சரிக்கின்றேன் அது நோயாகும்"**

களான ஹாக்கிம் இப்னுஸ் ஸுன்னி, அபூ நுகைம் ஆகியோர் பதிவு செய்துள்ளனர். ஹாக்கிம் இதனை 'ஸஹீஹ்' என குறிப்பிடுகின்றார். தஹபியும் இத்தீர்ப்பில் உடன்படுகின்றார். ஸஹீஹுல் ஜாமியுஸ் ஸகீரில் அல்பானியும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"பசும்பாலை நீங்கள் பருகுங்கள் அது நிவாரணமாகும். வெண்ணெய் மருந்தாகும். மாட்டிறைச்சி நோயாகும். சுஹைப் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கும் இந்த ஹதீஸை இப்னுஸ் ஸுன்னி, அபூ நுகைம் ஆகியோர் பதிவு செய்துள்ளனர். அல்பானி இதனையும் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே பசும்பால் நிவாரணமாகும். வெண்ணெய் மருந்தாகும். மாட்டிறைச்சி நோயாகும்"

என முளைக்கா பின்த் அம்ர் அறிவிப்பதாக தபராணி அவரது முஃஜமுல் ஜபீரில் பதிவு செய்துள்ளார். முஹம்மது நாஸிருல் அல்பானி ஸஹீஹுல் ஜாமியிலும் அவ்வாறே குறிப்பிட்டுள்ளார்.

### இந்த ஸஹீஹான ஹதீஸ்கள் குறித்து நாம் என்ன சொல்லப் போகின்றோம்?

இவை அல்குர்ஆனிற்கும் நம்பகமான சுன்னாவிற்கும் மற்றும் நடைமுறைக்கும் முரண்படுவதனால் 'ஸஹீஹ்' என இவை குறித்து வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை எங்களால் மறுத்துரைக்க முடியும்.

"உங்களுக்கு ஓதிக்காட்டப்படுபவற்றைத் தவிர மற்றைய ஆடு, மாடு, ஒட்டகை முதலிய கால்நடைகள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன" (அல்மாயிதா: 01)

என்ற வசனத்திற்கும் கால்நடைகள் அடியார்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் அருள் என முழங்கும் வசனங்களுக்கும் இடையில் இவை முரண்படுகின்றன. உதார ணத்திற்கு பின்வரும் வசனத்தை குறிப்பிடலாம்:

"இன்னும் ஒட்டகையில் (ஆண், பெண்) இரண்டு, மற்றும் மாட்டில் (ஆண், பெண்) இரண்டு ஆகியவற்றையும் அல்லாஹ்வாகிய அவன்தான் படைத்தான்"
(அல் அன்ஆம்: 144)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மாட்டினை உழ்ஹிய்யாவாக அறுத்துப் பலியிட்டுள்ளார்கள். உழ்ஹிய்யாவின் போதும் ஹத்யுவின் போதும் மாட்டை அறுப்பதற்கு அனுமதி அளித்துள்ளார்கள். இன்னும் ஒட்டகையைப்போல ஏழுபேர் சேர்ந்து மாட்டினை உழ்ஹிய்யாக் கொடுப்பதற்கும் அனுமதி வழங்கியுள்ளார்கள். இந்த நம்பகமான சுன்னாவுக்கு நாம் மேலே குறிப்பிட்ட ஹதீஸ்கள் முரண்படுகின்றன. அடுத்தது, முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் என மனிதர்கள் மாட்டிறைச்சியினை சாப்பிடுகின்றனர். அதன் மூலம் நோய் ஏற்படுவதாக தெரியவில்லை. மாட்டிற்கு பொருத்தமற்ற உணவுகளைக் கொடுத்து அல்லாஹ் ஆக்கிவைத்துள்ள இயல்பு நிலையை மீறியதால் 'மாட்டுப் பைத்தியம்' என்ற நோய் மாத்திரமே மாடுகளுக்கு ஏற்பட்டது. எனவே, இந்த வகையில் நடைமுறைக்கும் மேலே குறிப்பிட்ட ஹதீஸ்கள் முரண்படுகின்றன. ஹதீஸ்களுக்கு ஸஹீஹ் என தீர்ப்பு வழங்குவதில் ஹாக்கிம் நலினமாக நடந்து கொள்பவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த ஹதீஸ்கள் பகுத்தறிவுக்கும் அல்குர்ஆன், சுன்னா, இஜ்மா போன்ற மூலாதாரங்களுக்கும். அடிப்படைகளுக்கும் முரண்பட்டிருந்த போதிலும் ஹதீஸின் மதனை நோக்காது அதிகமான வழிமுறைகள் மூலம் ஹதீஸ் வந்துள்ளது என்பதனை மாத்திரம் வைத்து அல்பானியும் ஸஹீஹ் என தீர்ப்பு வழங்கியுள்ளார். ஹதீஸ் அறிவிக்கப்படும் அறிவிப்பாளர் வரிசைகள் (ஸனத்கள்) குறித்தும் விமர்சனங்கள் உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருமணத்திற்கு பொருத்தமானவளை தெரிவு செய்க!



மனிதனின் பாலியல் உணர்வு மிகவும் பலமானதாகும். மனிதர்களிடத்தில் இது பல கட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கும். அந்த உணர்வை தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால் தடுமாற்றத்திற்கு உள்ளாவான். அல்லாஹ் அதை தீர்த்துக் கொள்ள திருமணத்தை ஆகுமாக்கினான். இந்த திருமணத்தின் முக்கிய பங்குதாரராக ஒரு பெண் கணிக்கப்படுகிறாள். பெண் என்பவள் ஆணுக்கு அமைதி பெற்றுக் கொடுக்கக் கூடியவளாகவும் அவனுடைய விளைநிலமாகவும் வீட்டை கண்காணிப்பவளாகவும் குழந்தைகளை பெற்றெடுக்கக் கூடியவளாகவும் இருக்கிறாள். இத்தகைய பெண்ணையே ஓர் ஆண் தெரிவு செய்ய வேண்டும்.

ஒரு குடும்பத்தில் தாயின் பராமரிப்பில்தான் குழந்தை வளர்கிறது. தாயின் ஆளுமைதான் குழந்தையில் பிரதிபலிக்கிறது. அவளது மொழியைத்தான் குழந்தை பேசுகிறது. அவளின் பழக்க வழக்கங்களைத் தான் அது கற்றுக்கொள்கிறது. எனவே நல்ல ஒழுக்கமுள்ள மனைவியை தெரிவு செய்யுமாறு இஸ்லாம் வேண்டுகிறது. உலக விவகாரங்களுக்காக மட்டும் மணம் முடிக்கக்கூடிய அதிகமான மக்கள் சொத்தையும் அழகையும் அந்தஸ்தையும் பரம்பரையையும் பார்க்கிறார்கள். நல்ல பண்புகளையோ, நல்ல ஒழுக்கத்தையோ அவர்கள் பார்ப்பதில்லை. அவ்வாறான திருமணங்கள் கசப்பைத்தான் கொண்டுவரும். இதன் இறுதி முடிவு தலாக்காகவே அமையும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களை அவர்களது அழகுக்காக முடிக்காதீர்கள். அந்த அழகு உங்களை வழி தவறச் செய்துவிடும். இன்னும் அவளது சொத்துக்காகவும் திருமணம் முடிக்காதீர்கள். அந்த சொத்து அறியாமையில் ஆழ்த்திவிடும். மார்க்கப்பற்றுள்ள பெண், காது அறுக்கப்பட்ட நிலையில் இறுப்பினும் அவளே சிறப்பானவளாவாள். (ஆதாரம்: இப்னு மாஜா)

திருமணத்தின் முதல் நோக்கமே மார்க்கமாக இருக்கவேண்டும். பிறகுதான் ஏனையவற்றை பார்க்கவேண்டும். இன்றைய காலத்தை பொறுத்தவரை நோக்கம் மறந்து; மார்க்கம் ஒழிந்து ஜாஹிலியத்தில் மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொள்றான் ஒரு பெண்ணிடம் அழகு அந்தஸ்து இல்லையென்றால் அங்கு எதிர்பார்க்கப்படுவது சீதனமே!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்ணை நான்கு விடயங்களுக்காக திருமணம் முடிக்கலாம். அவளது சொத்து, குடும்ப அந்தஸ்து, அழகு, மார்க்கமுமாகும். மார்க்கம் உடையவரை தெரிவு செய்யுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். (ஆதாரம்: புகாரி)

திருமணம் பேசப்படும் பெண்ணிடம் நீதியும் குடும்பத்தன்மையும் இருக்க வேண்டும். நல்ல குழலில் வாழ்பவளாக உள்ளத்தில் மோசமான தன்மைகளை விட்டும் துரமாக இருக்கவேண்டும். அவள் தான் குழந்தைக்கு நல்ல பழக்கத்தையும் ஊட்டுவாள்; கணவனை பாதுகாப்பவளாகவும் இருப்பாள். திருமணத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவது குடும்ப உருவாக்கமாகும். எனவே பெண் என்பவள் குழந்தைகளை பெற்றுக்கொள்ள கூடியவளாக இருக்கவேண்டும்.

ஓர் ஆணுக்கு மலட்டுத் தன்மையுடைய பெண் பேசப்பட்டது. அப்போது அந்த மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் எனக்கு அழகுடைய குடும்ப அந்தஸ்துடைய மலட்டுத் தன்மை கொண்ட பெண் பேசப்பட்டுள்ளது எனக் கூறினார். அதனை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். பிள்ளைப் பேறு கொண்ட இரக்கமான பெண்ணை முடியுங்கள். நான் மறுமை நாளில் அதிகரிப்பைக் கொண்டவனாக இருப்பேன். (ஆதாரம்: அஹ்மத்)

மனிதன் இயற்கையில் அழகின் பால் கவரக்கூடியவன். ஒருவன் அழகில்லாத ஒரு பெண்ணை திருமணம் முடித்துவிட்டு தனது துணைவி அழகில்லையே என கவலைப்படுவதில் எந்த இலாபமும் இல்லை. ஏனெனில் இஸ்லாம் அழகை பார்ப்பதை தடுக்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் அழகானவன் அழகை விரும்புகிறான். (ஆதாரம்: முஸ்லிம்)

ஓர் ஆண் முடிக்கும் பெண் கன்னியாகவும் முன் பிற ஆடவர்களால் தீண்டப்படாதவளாகவும் கவாச்சியான பெண்ணாகவும் இருப்பது சிறப்பானதாகும். கன்னியை முடிக்கும்போது அன்பு பலப்படுத்தப்படும். உண்மையான அன்பு காதல் கன்னியின் பால் மாத்தரமே வரும். எனவே அவரவர் தன்மையை, நிலைமையைப் பொறுத்து கன்னிப் பெண்ணையோ, விதவைப் பெண்ணையோ மணந்து கொள்ளலாம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு வணக்கவாளியின் இபாதத் திருமணம் முடிக்கும் வரை புரணமாகாது. (ஆதாரம்: இப்னு மாஜா)

எனவே, இஸ்லாம் கூறிய திருமண முறை மூலம் நமக்கொரு துணை அமைத்து எம் இபாதத்தை முழுமைப்படுத்த முயற்சி செய்வோமாக!

பாத்திமா சிபானா சாபி (இஸ்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை வேண்டாம் நாயைப் பிடி




-மலைஞானி

ஓர் அரசியல் கட்சி என்று எடுத்துக் கொண்டால் அதில் பல பிரிவுகள் இருக்கும். மகளிர் பிரிவு, இளைஞர் பிரிவு, கல்விப் பிரிவு, இலக்கியப் பிரிவு என்பதாக இப் பிரிவுகள் இயங்கும். ஒரு சமூகத்தை எடுத்துக்கொள்ளும் போது அச்சமூகத்தில் இந்தப் பிரிவுகள் அனைத்தும் இயல்பாகவே இயங்கிக் கொண்டிருப்பதால் அவற்றை சமூகத்துக்காக இயங்கக்கூடிய கட்சியிலும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இடம் அளித்திருப்பார்கள்.

மலையகக் கட்சிகளில் ஓர் அரசியல் கட்சியாகக் கணிக்கக்கூடிய பெரிய ஸ்தாபனம் காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கையில் பெருமைபட்டுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லாவிட்டாலும் ஏனைய சங்கங்களுடன் ஒப்பிடும்போது முன்னணியில் இருப்பது உண்மைதான். ஒரு சமயத்தில், மகளிர் அணி, இளைஞர் அணி, சங்கப் பத்திரிகை, வருடாந்த பொதுக்கூட்டம் என கொள்கையும் கோட்பாடுமாக விளங்கிய அமைப்பே இ.தொ.கா. கொட்டகலையில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை சொந்தமாகவே நடத்தியது. காங்கிரஸ் பத்திரிகைக்கு காங்கிரஸ் சிவலிங்கம் நெடுங்காலமாக ஆசிரியராக இருந்தார். 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எஸ்.டி. சிவநாயகம் அதன் நிழல் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஓர் அமைப்புக்கு கட்டுக்கோப்பான வரைமுறைகளும் செயற்றிட்டங்களும் அவசியம். சௌமிய மூர்த்தி காலத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.க. போன்ற தேசிய கட்சிகளைப் போலவே, அரசியலில் நேரடியாக ஈடுபட முடியாத நிலையிலிருந்த இ.தொ.கா. அக்கட்சியில் காணப்படும் அமைப்புகளை தனது சங்கத்திலும் ஏற்படுத்தி இருந்தது. மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை இல்லை என்பதால், ஐ.தே.க. தலைவர் மர்ஹூம் அப்துல் அஸீஸூம், தொண்டமானும் நியமன

**கொள்கை கிடையாது**
**போராட்டங்களும் இல்லை**
**பேரம் பேசுவதற்கு மடியிலும் எதுவும் இல்லை**

உறுப்பினர்களாக இருந்தனர். தொண்டமான் பொதுமக்களால் 1977ஆம் ஆண்டிலேயே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. நுவரெலிய- மங்கெலிய தொகுதியில் அவர் மூன்றாவது உறுப்பினராகவே தெரிவு செய்யப்பட்டிருந்தார். முதல் உறுப்பினராக காமினி திஸா நாயக்கவும் இரண்டாம் உறுப்பினராக அநுர பண்டார நாயக்கவும் தெரிவாகி இருந்தனர்.

இதன் பின்னர் இலங்கை அரசியலில் தொண்டமான் கிங்மேக்கரானார். யார் ஆட்சிக்கு வருவது அல்லது எந்தக் கட்சி வருவது என்பதை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக அன்றைக்கு இ.தொ.கா. விளங்கியது. பின்னர் குடியுரிமை, வாக்குரிமை எல்லாம் கிடைத்தன. இது மிகப்பெரிய வெற்றியாக அமைந்ததோடு மமைலயகத் தமிழ் அரசியல் அரங்கில் தடாவடி மாற்றங்களையும் கொண்டு வந்தது. மாகாணசபை முறை வந்ததும் மாகாண, பிரதேச உள்ளூராட்சி சபைகளிலும் மலையகத் தமிழ் உறுப்பினர்கள் இடம்பெறத் தொடங்கினர்.

அதுவரை மலையகத் தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள், இலட்சியப் போராட்டங்களாகவும் உயிரையே பணயமாக வைக்கும் போராட்டங்களாகவும் விளங்கின. அரசியல் உரிமை கிடைத்த பின்னர் மலையகக் கட்சிகள் மற்றும் சங்கங்கள் புற்றீசல்களாகக் கிளப்பின. உரிமைப் போராட்டம், இலாபகரமான வியாபாரமாக மாறியது. 'ஆற்றிலே போகுது தண்ணீர், அண்ணன் குடி தம்பி குடி' என்றானது மலையக மக்களின் உரிமை மற்றும் அரசியல் போராட்டம். மலையக தொழிலாளர் போராட்டம், அவர்களின் வரலாறு, அடிப் படைத் தன்மைகள் என்பனவற்றில் கிஞ்சித்தும் அறிவோ, அனுபவமோ அற்றவர்களே இன்று சங்க அரசியல் துறையில் முன்னணி வகிக்கின்றனர். அவர்களுக்கு தொழிலாளர்களின் பிரச்சினையில் அக்கறை கிடையாது என்பது ஒரு புறமிருக்க, தம்மை மலையக அரசியலில் நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஓர் எளிய வழியாக இதைக் கருதுகின்றனர். அரசியல்வாதியாக அல்லது அவர்களின் அடிவருடிகளாக வருவதன் மூலம் செல்வாக்கும் நாலு காசும் பார்த்துவிட முடியும் என உறுதியாக நம்புகிறார்கள்.

இன்றைக்கு மலையகத்தில் இது அரசியல் கலாசாரமாகிவிட்டது. எதையாவது செய்து எப்படியாவது வாக்காளர்களிடமிருந்து வாக்குகளை கொள்ளையடிப்பது. பின்னர் வாக்காளர்களை தூக்கியெறிந்து விட்டு தன்பாட்டில் கிடைப்பதை அனுபவித்து தன்னை சகல தளங்களிலும் நிலைநிறுத்திக் கொள்வது என்பதே இன்றைய அரசியல் அடிச்சுவடியாகி விட்டது. முஸ்லிம் அரசியலிலும் இன்று இதுதான் நடந்து வருகிறது.

எனினும் இத்தகைய அரசியலை உருவாக்கியவர்கள் யார் என்றால் அதற்கு இ.தொ.கா. வையும் ம.ம.மு. வையுமே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. எந்த இ.தொ.கா. மலையக அரசியல் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்ததோ அதே இ.தொ.கா.வே மலையக அரசியல் சீர்கெட்டுப் போகவும் வழிவகுத்தது. இளைஞர்களை ஒன்றிணைத்து ஒரு புதிய சமூகத்தை எழுச்சி மிக்கதாக கட்டியெழுப்புவேன் என்று கட்டியம் கூறிய மலையக மக்கள் முன்னணியும் மலையக அரசியல் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது.

➡ 16

# கோவிலைக் கட்டுங்கோ கும்பிடத்தான் ஆளில்லை



-வட புலத்தான்-

ஊர்கள் தோறும் கோவில்கள் பிரமாண்டமாக கட்டப்படுகின்றன. கோவில்களைக் கட்டுவதற்காக புலம் பெயர்ந்து, வெளிநாடுகளில் இருப்போர் தாராளமாக அள்ளியள்ளிக் கொடுக்கிறார்கள். போதாக்குறைக்கு உள்ளூரிலும் கோடி கோடியாகச் சேருது.

இப்பிடிக் காசு சேர்ந்தால் என்ன நடக்கும்?

ஏட்டிக்கு போட்டியாக ஒவ்வொரு கோவிலும் வானுயரும்.

ஊரில் பலருடைய வீடுகள் இன்னும் கொட்டிலாகவும் குடிசையாகவும் இருக்கும்போது, பலருக்கு குடியிருப்பதற்கே காணி இல்லாதபோது, பல பள்ளிக்கூடங்களில் வகுப்பறைகளே சீரில்லாமல் இருக்கும்போது, ஆஸ்பத்திரிகளில் கட்டில் இல்லாமல் விறாந்தைகளில் நோயாளிகள் படுத்திருக்கும் போது இப்படி கோவில்களுக்காக தமிழ்ப் பெருங்குடி மக்கள் தாராளமாகச் செலவழிக்கிறார்கள்.

தமிழ்ப் பெருங்குடி தன்னுடைய உழைப்பில் அதிகமாகச் செலவழிப்பது கோவில்களுக்காகத்தான். இதில் அவர்களுடைய வரலாற்றுப் பெருமையை எந்த விண்ணனும் மிஞ்ச முடியாது.

இதைவிடப் போரினால் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உதவிகள் இல்லாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கின்றன. இன்னும் பல ஆயிரக்கணக்கானவர்கள் உடல் உறுப்புகளை இழந்து அந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான சிறார்கள் பெற்றோரை இழந்த நிலையில் உதவிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். தொடர்ந்து படிக்க வசதியில்லாமல் இடைவிலகிக் கொண்டிருக்கின்றார்கள் பல மாணவர்கள். லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் தெருவில் நிற்கிறார்கள்.

இதைப் பற்றி மானமுள்ள தமிழர்கள் எழுதிக் கொண்டும் புலம்பிக் கொண்டும் இருக்கிறார்கள். மனச்சாட்சியில்லாதவர்கள் இதையெல்லாம் படித்துக் கொட்டாவிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரி தமிழ் சமூகம் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும்போது இதையெல்லாம் பொருட்படுத்தாமல் கோவில்களுக்கு கொட்டிக்கொண்டே இருக்கின்றார்கள் நம் வரலாற்றுப் பெருமைமிகு தமிழர்கள்.

யுத்தத்திற்குப் பிறகு உருவாகியுள்ள புதிய சூழலிலும் தமிழர் அதிமாகச் செலவழித்திருப்பது கோவில்களுக்குத்தான்.

கோபுரங்களுக்காகவும் திருமண மண்டபங்களுக்காகவும் வர்ணப் பூச்சுகளுக்காகவும் தேர், தீர்த்தக்கேணி வாகனம் என்றெல்லாம் இந்தச் செலவு நீண்டுகொண்டு போகிறது.

சமூகம் செழிப்பாக இருந்தால் இப்படி மேலதிகமாக செலவழிப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், இங்கோ மக்கள் பிச்சை எடுக்கிறார்கள். கோபுரங்களோ உயர்கின்றன.

சொந்தச் சகோதரரை துன்பத்தில் உழல விட்டு விட்டு தெய்வத்தொண்டு செய்வதில் எந்தப் புண்ணியமும் இல்லை என்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை.

உண்மையாக ஆன்மீக நாட்டம் யாருக்காவது இருந்தால் அவர்கள் துன்பத்திலும் வாடும் சக மனிதரைக் கண்டு அவர்களுக்கு உதவ முன்வருவர். அது மனிதநேய உணர்வு மட்டுமல்ல தெய்வ பக்திக்கு நிகரானதுமாகும். அதுதான் மெய்யான ஆன்மீகமுமாகும்.

பசித்தவனுக்கு ஒருவேளை உணவு கொடுப்பதென்பது தெய்வத்துக்குச் செய்யும் தொண்டுக்குச் சமம் என்பது பெரியோர் வாக்கு.

கோவிலுக்கும் கோபுரங்களுக்குமாக செலவழிக்கும் இந்த கோடிக்கணக்கான காசை ஒவ்வொரு ஊரிலும் ஏதாவது தொழிற்துறைகளை உருவாக்குவதற்குச் செலவழிக்கலாம்.

அப்படி தொழிற்துறைகளுக்குச் செலவழிக்கும்போது அதனால் பலருக்கும் தொழில்வாய்ப்புகள் கிட்டும். தொழிலும், உழைப்பும் பெருகும்போது ஊரும் உறவுகளும் செழிக்கும். ஊரும் உறவும் செழிக்கும்போது நாடு வாழ்வும் வளமும் பெறும்.

இப்படி சிந்திப்பது ஒன்றும் ஆன்மீகத்திற்கு எதிரானதோ, பக்தி மார்க்கத்திற்கு மாறானதோ அல்ல. ஒரு நாத்திகவாதியின் கண்ணோட்டத்தில் இதைப் பார்க்கவும் இல்லை. ஒரு மனிதநேய வாதியாக, மக்களோடு மக்களாக வாழ்பவராக, உண்மையான ஆன்மீகவாதியாக சிந்திக்கும்போது இப்படித்தான் சொல்லத் தோன்றுது.

தொழிற்துறைகளை விருத்தி செய்வதற்காக நாம் செலவு செய்யும்போது அல்லது முதலீடு செய்யும்போது நமது மக்கள் கையேந்தும் நிலையிலிருந்து விடுபடுவர். அது மட்டுமல்ல, அடிமை வாழ்விலிருந்தும் மக்கள் மீள்வர்.

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் விடுதலை முன்னணி (JVP) இன் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திஸா நாயக்க ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கட்சியின் நிறைவேற்று உறுப்பினராக நீண்டகாலம் கடமையாற்றிய இவர் 1994 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சந்திரிகாவின் ஆட்சியில் சிறிது காலம் அமைச்சராகவும் இருந்தார். இன்றுவரை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இவர் சிறந்த பேச்சாளரும் நேர்மையான அரசியல் வாதியுமாவார். பாராளுமன்றத்திலும் வெளியிலும் இவர் ஆற்றும் உரைகள் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இவருடனான நேர்காணலை எங்கள் தேசம் வாசகர்களுக்காக தொகுத்துத் தரப்படுகிறது

ளுடைய காலங்களை கழித்தோம். 1978-1983 வரையிலான காலப்பகுதியில் எங்களுடைய கட்சியை மீள கட்டியெழுப்பினோம். அதன் பின்னர் 1983-1994 வரையிலான காலப்பகுதியில் எங்களுடைய கட்சியை அரசு தடை செய்தது. எங்களது உறுப்பினர்களை தேடித் தேடி கொலை செய்தனர்; சித்திரவதைக்கும் உட்படுத்தினர். எங்களுடைய கட்சி மீதான பலத்த அடக்குமுறைக்கு பின்னர்தான் நாங்கள் மக்களுடன் மக்களாக கலந்துறவாடுவதற்கான காலம் வந்தது. இக்காலப்பகுதிகளில் எங்களுடைய கருத்துக்களை தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காக அதிகமாக முயற்சித்தோம். அதிலும் ஒரு வகையான தோல்வியைத்தான் நாம் தழுவினோம். இந்நாட்டில் எல்லா மொழிகாக கொண்டுதான் எங்களுடைய அரசியல் நகர்வை நாங்கள் செய்கின்றோம்.

**கேள்வி: தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் ஜே.வி.பி. ஓர் இனவாதக் கட்சியென்ற கருத்து நிலவுகின்றமை பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஏன் அவ்வாறு நடந்தது?**


**பதில்:** இந்நாட்டில் ஜே.வி.பி. இற்கு அரசியல் எதிரிகள் இருந்ததுபோல் எந்தகட்சிக்கும் இருந்ததில்லை. எங்களுடைய கட்சிக்கு எதிராக இரண்டு மிகப் பாரியளவிலான அடக்குமுறைகள் நடைபெற்றன. இதில் சுமாராக 80 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இந்த எதிரிகள் எல்லாம் எங்களுடைய சொந்த எதிரிகளல்ல; எங்களுடைய கட்சியின் கொள்கையின் எதிரிகள். மேலும், இவர்கள் கட்சிக்கெதிராக திரைப்படங்கள் தொலைக்காட்சி நாடகங்கள் தயாரித்து ஒளி பரப்பினார்கள். பாடசாலை கலைத்திட்டத்தில், இந்நாட்டில் வெளியாகின்ற இலக்கிய படைப்புக்களில் எங்களைப் பற்றிய தப்பான பதிவுகளை ஏற்படுத்தியதனூடாக இளைய தலைமுறையினரிடம் எங்களைப் பற்றிய தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தினார்கள். இது மாதிரியான பாரிய அடக்குமுறைகளுக்கு எங்களுடைய கட்சி உள்ளாகியது. இதனால் இந்நாட்டில் வாழ்கின்ற சமூகங்கள் மத்தியில், குறிப்பாக சிறுபான்மை சமூகங்கள் மத்தியில், எங்க

பதியாக இருந்தபோது பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்பட்டது. ஆனால், முஸ்லிம் மாணவிகளுக்கான 'பர்தா' வுக்கான சீருடை கொடுக்கப்படவில்லை. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த கலாசார அமைச்சர் விஜிதஹேரத் அவர்கள் அதனை பெற்றுக்கொடுத்தார். நாங்கள் இனவாத கட்சியல்ல; நாங்கள் ஹலாலுக்கு எதிராக போராடவில்லை; முஸ்லிம் அரசியல் தலைமைகள் மௌனியாக இருந்தபோது நான்தான் ஹலால் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பேசினேன். ரணில் விக்ரமசிங்க போன்று சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்காக நான் மௌனியாக இருக்கவில்லை. வாக்குகளைவிட கொள்கைதான் எங்களுக்கு முக்கியம். இந்நாட்டில் மீண்டுமொரு யுத்தம் உருவாக நாங்கள் இடம்கொடுக்க மாட்டோம் என உங்களுக்கு உறுதியாக கூறுகின்றோம்.

அரசாங்கம் அண்மைக்காலமாக சிங்கள முஸ்லிம் சமூகங்களுக்கிடையே இன மோதலை உருவாக்க இனவாத குழுக்களை உருவாக்கியுள்ளது. அரசாங்கத்தின் தேவை இந்நாட்டின் குழப்பந்தான். இந்நிலைமை ஏற்படாமல் நாம் நாட்டை பாதுகாக்க முயற்சிக்கின்றோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் மதத் தலைவர்கள் பள்ளிவாசல்களினூடாக மக்களுக்கு அறிவூட்டி, முஸ்லிம் மக்களை சரியாக வழிநடத்தி பிரச்சினைகள் ஏற்படாமல் இந்நாட்டை பாதுகாத்தனர். தேசிய சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து பிரிவினர்களுக்கும் சம அந்தஸ்தை வழங்க வேண்டும். இந்நாட்டின் ஓர் இனம், மதம், கலாசாரம் இன்னுமோர் இனத்தைவிட மேலானது என்று [illegible] இந்நாட்டில் தேசிய சமாதானத்தை ஏற்டுத்த முடியாது.

**கேள்வி: உங்களுடைய கட்சி ஓரளவு பழைய கட்சியாக நாங்கள் கருதுகின்றோம். இருந்தும் உங்களுடைய கருத்துக்கள் மக்களை சென்றடைவதில் குறைபாடு காணப்படுகின்றது. இது தொடர்பாக நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?**

**பதில்:** நாங்கள் 1964 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் மக்களுக்காக சக்தி எனும் பத்திரிகையை வெளியிட்டு வருகின்றோம். எங்களுடைய வெளியீடுகள் அனைத்தும் தமிழ் மொழியில் வெளியிடப்படுகின்றன. எல்லாத் தேசிய நிகழ்வுகளிலும் கட்சிக் கூட்டங்களிலும் தமிழ் மொழியில் உரையாற்றுகின்றோம். தமிழ் மொழியில் மே[illegible]ன கூட்டங்களில் பேசுகின்ற ஏனைய [illegible]சிகளின் மாநாட்டை உங்களால் காட்ட முடி



# ஓர் இனத்திற்கு

# கருதியதால்தா

**கேள்வி: உங்களுடைய கட்சி ஒரு குறிப்பிட்ட வயதுப்பிரிவினருக்கு, குறிப்பிட்ட மொழி பேசுபவர்களுக்கு மாத்திரம் உரிய கட்சியாக இருக்கின்றது என்ற ஒரு கருத்துள்ளது. இது தொடர்பான உங்களது கருத்து என்ன?**

**பதில்:** நாங்கள் தேசிய சமாதானத்தை இலக்காக கொண்டு செயற்படுகின்றோம். இந்நாட்டின் சமாதானத்திற்கும் அமைதிக்கும் இலங்கையில் வாழ்கின்ற மக்கள் எங்கிருந்து, எப்போது வந்தார்கள் என்பது முக்கியமானதல்ல. இலங்கையில் பிறந்து வளர்ந்து நாட்டின் பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பங்காற்றி தேச நிர்மாண பணிக்காக வாழ்கின்ற மூவினத்தையும் சேர்ந்த மக்களும் விரும்பிய இடத்தில் வாழ்வதற்கும் அவர்களுடைய கலாசாரம், வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் சுதந்திரம் உண்டு. அத்துடன் அவர்களுக்கு தாய்மொழியினூடாக தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் அவர்களின் தேவைக்கேற்றவாறு கல்வியை பெற்றுக் கொள்வதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமையை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கத்தான் நாம் முயற்சிக்கின்றோம். தேசிய சுதந்திரத்தை கட்டியெழுப்புவதற்காக சிறுபான்மை சமூகத்தின் மீதான கரிசனை அதிகமாக இருத்தல் வேண்டும்.

எங்களுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஆரம்ப பகுதிகளில், அதாவது 1965-1971 வரையிலான காலப்பகுதியில், நாங்கள் ஆயுத அரசியல் கலாசாரத்தில்தான் இருந்தோம். பின்னர் 1971-1978 வரையிலான காலப்பகுதியில் சிறைச்சாலைகளில் எங்க

ளிலும் எமது கருத்துக்களையும் சிந்தனைகளையும் எடுத்துச் செல்வதுதான் எமது இலக்கு. இது இன்று பாரிய சவாலாக இருக்கின்றது.

எங்களுடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் இந்நாட்டில் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மாத்திரம் கொடுப்பது எங்களது இலட்சியம் அல்ல. நாட்டில் சமூக மாற்றந்தான் எங்களுடைய இலட்சியம். கடந்த 66 வருட காலமாக இந்த நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் பலவீனமான முதலாளித்துவ ஆட்சி முறைமை இந்நாட்டுக்கு பொருத்தமில்லை. இந்த ஒழுங்கு முறைமையினால் தேசிய சமாதானத்தை கட்டியெழுப்ப முடியாது.

இந்த அரசாங்கங்கள்தான் யுத்தத்தை உருவாக்கின. இவர்கள் இன்று யுத்தத்தை நிறைவு செய்தோம் என்று பெருமையோடு பேசுகின்றார்கள். ஆனால், யுத்தமில்லாமல் இவர்களால் அரசியல் செய்ய முடியாது. மீண்டுமோர் யுத்தத்தை உருவாக்க இவர்கள் முயற்சிக்கின்றார்கள். இவர்களால் நாட்டின் பொருளாதாரத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது. நாட்டில் பாரியளவிலான சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. இந்த சமூக மாற்றத்தை ஒரு குறிப்பிட்ட வயது பிரிவினரால் மாத்திரம் ஏற்படுத்த முடியாது. இந்த பாரிய பணியை செய்வதற்கு இந்நாட்டில் பிறந்து வளர்கின்ற எல்லா வயது பிரிவனர்களினதும் அனைத்து துறைகளிலும் பங்களிப்புச் செய்கின்ற துறைசார் நிபுணர்களினதும் சமய தலைமைகளினதும் உதவியுடன் இந்த இலக்கை அடைய முடியும். இதை நோக்

ளைப் பற்றிய பழையான பதிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. பற்றி நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால் எங்களைப் பற்றி நடுநிலையாக எழுதப்பட்ட ஆக்கங்களை படியுங்கள் ஜே.வி.பி. உறுப்பினர்களுடன் நெருக்கமாக பழகிப் பாருங்கள் இவற்றை செய்தால் இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் சம அந்தஸ்தை வழங்கும் கட்சியாக ஜே.வி.பி. யைத்தான் காண்பீர்கள்.

இந்நாட்டில் நாங்கள் அரசாங்கத்துக்கெதிரான ஆயுதம் தாங்கி இரண்டு போராட்டங்களை நடத்தியுள்ளோம். இதில் நாங்கள் தமிழர் என்பதற்காக முஸ்லிம் என்பதற்காக யாரையும் கொல்லவில்லை. அவர்கள் வேறுபட்ட கட்சியின் உறுப்பினராக இருந்ததால்தான் அவ்வாறு நடந்திருக்கலாம்.

பிரேமதாச அவர்கள் இந்நாட்டு ஜனாதி

யுமா? எங்களுடைய எதிரிகள் எங்களைப் பற்றி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிழையான பதிவுகளை நீண்ட நாட்களாக ஏற்படுத்தி வருகின்றார்கள். இதனால் இவர்களுக்கும் எங்களுக்குமிடையில் நீண்ட இடைவெளி நிலவுகின்றது.

சிங்கள இனவாத குழுக்களுக்கு தமிழர்கள் இனவாதிகளாக காட்டப்படுகின்றனர். தமிழ் இனவாதக் குழுக்களுக்கு சிங்கள மக்கள் இனவாதிகளாகக் காட்டப்படுகின்றனர். முஸ்லிம் இனவாத குழுக்களுக்கு பௌத்தர்கள் இனவாதிகளாக காட்டப்படுகின்றனர். பௌத்த இனவாத சக்திகளுக்கு முஸ்லிம்கள் இனவாதிகளாகக் காட்டப்படுகின்றனர். இவ்வாறு ஆளுக்காள் இனவாதிகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். நாங்கள் இவர்களைப் போல் சந்தர்ப்பவாத அரசியல் செய்வதில்லை. இந்த இனவாத சக்திகள்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை இனவாதிகளாக காட்ட முற்படுகின்றன.

சிங்களமக்களுக்குமுஸ்லிம்களைப்பற்றியும் முஸ்லிம்களுக்கு சிங்கள மக்கள் பற்றியும் எடுத்துக் கூற தலைமைகள் முன்வர வேண்டும். அப்போதுதான் இந்நாட்டில் புரிந்துணர்வு ஏற்படும்.

**கேள்வி: மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல் கட்சிகள் இனவாதத்தைப் பரப்புகின்றனவே. இது தொடர்பான உங்களது அபிப்பிராயம் என்ன?**

**பதில்:** இது உண்மைதான். 1956 இல் சிங்கள மொழியை ஒழுங்காக பேச, எழுத, விளங்க முடியாதிருந்த பண்டாரநாயக்க சிங்கள மொழியை அரச மொழியாக பிரகடனப்படுத்தி நாட்டில் பிரச்சினையை இற்கு முன்னர்தான் பேராசிரியர் சரத் சந்திர அவர்களை நிலத்தில் போட்டு அடித்தனர். மகளிர் தினத்தன்று வில்லியம் குணவர்தன தாக்கப்பட்டார். 1980 ஜூலை வேலை நிறுத்தம் செய்த இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை விட்டும் நீக்கப் பட்டார்கள். 1970, 1971 காலப்பகுதிகளில் 20000 இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இதிலிருந்து எங்களுக்கு விளங்குவது இந்நாட்டில் யுத்தத்திற்கு முன்னும் சமாதானம் இருக்கவில்லை. எனவே, பல வீனமான முதலாளித்துவ ஆட்சிமுறைமையினால் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது.

இலங்கையில் முழுமையான ஊடகச் சுதந்திரத்தை வழங்கி, அரசியல் கட்சிகள் அவர்களுடைய நிலைப்பாடுகளை தெளி

## நாங்கள் இனவாத கட்சியல்ல; நாங்கள் ஹலாலுக்கு எதிராக போராடவில்லை; முஸ்லிம் அரசியல் தலைமைகள் மௌனியாக இருந்தபோது நான்தான் ஹலால் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பேசினேன்.

தோற்றுவித்தார். சிங்களம் தெரியாமல் ஏன் அரச மொழியாக சிங்களத்தை பிரகடனப் படுத்த வேண்டும். மக்களின் வாக்குகளை பெறுவதற்குத்தானே? 1965இல் டட்லி சேனாநாய[illegible] செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்தது அதிகாரத்தைப் பெறுவதற்காகத் தான். 1970 களில் ஜே.ஆர். ஜெயவர்தன மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜதுரையோடு இரகசிய ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டார். அதற்கு காரணம் 1977 இல் ஆட்சி கிடைக்காவிட்டால் அவருடன் சேர்ந்து அதிகாரத்திற்கு வருவதற்காகும். 1981 ஜூன் 1 ஆம் திகதி யாழ். நூலகத்தை தீக்கரையாக்கி மாகாண சபைத் தேர்தலை நடத்தினர். இவையெல்லாம் அதிகாரத்தை தக்கவைப்பதற்காகத் தான்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தங்களின் சுயலாப நோக்கில் இனவாதத்தை பரப்பிக்கொண்டு இருக்கி[illegible]ன. ஜே.வி.பி. மட்டுந்தான் இந்த நாட்டில் தேசிய ஐக்கியத்திற்காக பாடுபடும் வாக வெளிப்படுத்த வாய்ப்பளித்து, நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்காமல் சுதந்திரமாகச் செயற்படச் செய்து, மக்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்யவும் சமூக சேவைகளில் ஈடுபடவும் பூரண சுதந்திரம் வழங்கி, நாட்டின் ஜனநாயகத்தை நிலை நாட்ட மஹிந்த அரசாங்கத்தினால் முடியாது. ரணில் விக்ரமசிங்கவினாலும் முடியாது. முதலாளித்துவ ஒழுங்கை பின்பற்றும் ஒருவரால் முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாது. இதனால்தான் யுத்தத்திற்கு முன்னும் பின்னும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாதுள்ளது.

**கேள்வி: இது, சிங்கள பௌத்த மக்களின் நாடு; அதில் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களின் விருப்பின் பெயரில்தான் வாழ வேண்டும் என்ற கருத்தியலை ஒரு சிறு குழு பரப்புகின்றது. இது தொடர்பான உங்களுடை நிலைப்பாடு என்ன?**

**பதில்:** இது பல்லின மக்கள் வாழும் நாடு. மூன்று இனத்தையும் சேர்ந்த மக்கள் எந்த இடத்திலும் வாழும் உரிமையுண்டு.

**ந்து வருகின்றது. குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக மாடறுத்தல், பள்ளிவாசல் அமைத்தல், ஹலால் பாவனை, வர்த்தகம் போன்ற விடயங்களில் எதிர்ப்புகள் காட்டக் காரணம் என்ன?**

**பதில்:** ராஜபக்ஷவின் ஆட்சி சிங்கள பௌத்த வாதத்தின் கீழிருக்கின்றது. இவர்கள் சிங்கள பௌத்த வாதத்தை உருவாக்கி, அதனால் இனவாத குழுக்களையும் வேறு பல குழுக்களையும் உருவாக்கி இனவாத கருத்தை சமூகமயப்படுத்துகின்றனர். இந்த குழுக்கள் மஹிந்தவின் இருப்பை உத்தரவாதப்படுத்துகின்றன. இந்த இனவாத குழுக்கள் யாரை ஆதரிக்கின்றன, மஹிந்தவைத் தானே?

எங்களுடைய நாடு பொருளாதார ரீதியாக பலத்த வீழ்ச்சியை நோக்கி நகருகின்றது. இந்நாட்டு மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். அந்த மாற்றத்தை நோக்கி சிந்தித்து அதற்கான வேலைத்திட்டத்துடன் செயற்படும் குழுக்கள் இன்றில்லை. நாடு பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ளது. இக்காலப் பகுதியில் ராஜபக்ஷ அராசங்கம் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தி மக்களை திசை திருப்புகிறது.

அரசாங்கத்தோடு ஒட்டியிருக்கும் தொண்டமான், ஹக்கீம், விமல், தேவானந்த, சம்பிக இவர்கள் ஐந்து பேரும் மஹிந்தவுடன் இணைந்து மக்களுக்கு பாதிக்கும் விடயங்களில் ஒன்றுபட்டு செயற்படுகின்றனர். மின்சார கட்டணம் அதிகரித்தபோது அதற்கு ஆதரவாக பேசினர். இவர்களின் பிரிவினை வாதப்போக்குக்கு எதிராக மக்கள் செயற்படுவார்கள் என்ற சந்தேகம் இவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் ஆட்சியின் கடைசிக் காலப்பகுதியாகும். இந்நாட்டு மக்கள் இவர்களுக்கெதிராக போராடும் காலம் மிக விரைவில் உள்ளது.

**கேள்வி: இலங்கை தற்போது பொருளாதார, அரசியல், சமூக ரீதியிலான பாரசீக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருக்கிறது. இதனை எவ்வாறு தீர்க்க முடியும்?**

**பதில்:** நாங்கள் இந்த நாட்டின் புதிய ஆட்சி முறையை உருவாக்குவதற்கான சிந்தனையை வெளியிட்டுள்ளோம். அதில் ஐந்து முக்கிய பிரகடனங்கள் உள்ளன.

1. இந்த நாட்டில் குடும்ப, நட்பு ஆட்சியை மாற்றி மக்களின் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த வேண்டும்.

2. நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்காற்றக்கூடிய வளமான தலைமுறைகளை உரு

பொலிஸுக்கு சென்று ஒரு முறைப்பாட்டை செய்வதற்கு கூட சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்.

**கேள்வி: இந்நாட்டில் சூது, மோசடி, போதைப்பொருள் பாவனை இவையெல்லாம் அண்மைக்காலமாக அதிகரித்த வண்ணமுள்ளன. இவையல்லாத ஓர் ஆரோக்கியமான பண்பாட்டு விழுமியங்களை உருவாக்க நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?**

**பதில்:** இவையெல்லாம், இப்போதைய முதலாளித்துவ ஆட்சியின் உற்பத்திகளாகும். சூது, குடு, களவு, இலஞ்சம் போன்றவற்றிற்கு எங்களுடைய சமூகம் அடிமையாகி இருக்கிறது. களவு எடுப்பதற்கு சக்தி வாய்ந்தவர்கள் களவு எடுக்கின்றார்கள். இயலாதவர்கள் குடு அடிக்கின்றார்கள். முன்னர் குடு வியாபாரம் செய்தது குடு முதலாளிகள்தான். குடுவை ஈயத்தாளினுல் சுற்றி அதை விழுங்கித்தான் கடத்தினார்கள். இப்பொழுது குடு கெண்டேணர்களில் வருகின்றது. தற்போது இதை சமூகத்திலுள்ள பெரிய மனிதர்கள் செய்கின்றார்கள். எதனோலை கொண்டுவந்தவர்கள் சாதாரண

நேர்காணல்:
எம்.எம்.எம்.பாஹிர்,
எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)

மக்கள்தான். ஆனால், இன்று அமைச்சர்கள் கொண்டு வருகின்றார்கள். இந்த அரசாங்கத்தின் வெட்கமற்ற தன்மையைத்தான் இந்த நிலை காட்டுகிறது. அத்துடன், அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு இவற்றை கடத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதிலிருந்து வருகின்ற இலாபத்தின் ஒரு பங்கினை இவர்கள் பெற்று அரசியல் பிரசாரம் செய்கின்றார்கள்.

**கேள்வி: இந்த நாட்டின் தற்போதைய நிலைமையை நீக்கி கல்வி, ஆய்வு, சுகாதாரம், விவசாயம் போன்றவற்றை முன்னேற்ற என்ன செய்யலாம்?**

**பதில்:** இலங்கையை முன்னேற்றுவதற்கு பிரதானமாக இருப்பது மனித வளந்தான். அவுஸ்திரேலியாவில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 23 பேரும் அமெரிக்காவில் 23 பேரும் சீனாவில் 144 பேரும் வாழ்கின்றனர். ஆனால் இலங்கையில் 323 பேர் இருக்கின்றனர். சிறிய நிலப்பரப்பில் பாரிய அளவிலான மக்கள் இங்கு வாழுகின்றனர். இலங்கையின் சில பகுதிகளில் பெரும் அளவான காடுகளும் குளங்களும் காணப்

# மாத்திரம் சொந்தமானது என்று
# ான் இனப்பிரச்சினை ஏற்பட்டது

## அனுரகுமார திஸா நாயக்க

கட்சியாக இருக்கின்றது. ஆயுதம் தாங்கிய இரண்டு குழுக்களுக்கு மத்தியில் யுத்தம் நடந்தபோது நாங்கள் தமிழ் மக்கள் மீது அதிக அவதானம் செலுத்த தவறிவிட்டோம். கொழும்பில் லொட்ஜிகளில் இருந்து தமிழ் சகோதரர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் யாரும் வாய்திறக்கவில்லை. கோதாபயவிற்கு எதிராக இந்த அநீதியை நான்தான் தட்டிக்கேட்டேன். நாங்கள் இனவாத கட்சியாக இருந்திருந்தால் இவ்வாறு செயற்பட்டிருக்க மாட்டோம்.

**கேள்வி: யுத்தத்திற்கு பின்னர் மக்கள் சமாதானத்தை எதிர்பார்த்தனர். ஆனால், நிலைமை இன்று தலைகீழாக மாறியிருக்கின்றது. இதற்கான காரணம் என்ன?**

**பதில்:** இந்நாட்டில் யுத்தத்திற்கு முன்னர் சமாதானமான சூழல் இருந்ததா? 1983 ஓர் இனத்திற்கு மாத்திரம் சொந்தமானது என்று கருதியதால்தான் இனப்பிரச்சினை ஏற்பட்டது. தமிழ் இனவாத அரசியல் கட்சிகள் வடக்கு அவர்களுடையது என்று கூறி பிரசாரம் செய்கின்றனர். முஸ்லிம் இனவாத குழுக்கள் கல்முனை பொத்துவில், சம்மாந்துறை, பிரதேசங்களை மையமாக கொண்டு சுயாட்சி கோருகின்றனர். தொண்டமான் மலையகம் எங்களுடையது என்று கூறுகின்றார். பௌத்தர்கள் இது பௌத்த நாடு என்று கூறுகின்றார்கள். எல்லா குழுமங்களும் இந்த கோரிக்கைகளை விட்டுவிட வேண்டும்.

**கேள்வி: அண்மைக்காலமாக சிறுபான்மை எதிர்ப்புணர்வு இலங்கையில் வளர**

வாக்க வேண்டும். இதற்கான அதிகமான முதலீடுகளை அரசு கல்வி, சுகாதாரம், விளையாட்டு போன்றவற்றிற்கு செய்ய வேண்டும்.

3. எங்களுடைய நாட்டை நவீன மயமான முதலீட்டுச் சந்தையாக உருவாக்க வேண்டும்.

4. இதனால் வரும் வருவாய்களை மக்கள் மீது ஒரே அமைப்பில் பிரிந்து செல்லும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

5. நல்ல ஆளுமைமிக்க குடிமக்களை உருவாக்க வேண்டும்.

இந்நாட்டு மக்கள் ஆளுமையற்ற, மற்றையவர்களின் அடிபணிந்து வாழுகின்ற, படுகின்றன. சில பிரதேசங்களை மீண்டும் காடுகளாக மாற்றவேண்டிய தேவை இருக்கின்றது. எங்களுடைய மத்திய மலை நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும். அது தான் இலங்கையின் இருதயம். அதைப் பாதுகாக்காமல் விட்டால் இந்நாடு இயங்காது. அங்குள்ள காடுகளெல்லாம் அழிக்கப் படுகின்றன. எங்கள் நாட்டில் பாரிய அளவிலான விவசாய நிலங்களை உருவாக்க முடியாது. இந்த நாட்டில் எங்களுக்கு என்ன செல்வம் இருக்கின்றது. மாணிக்கம், கரியம் இவைதானே? இவற்றால் மட்டும் நாட்டை முன்னேற்ற முடியாது. எங்களுடைய நாட்டின் பிரதான செல்வம் மக்களள்தான்.

➡ 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயில் பஸ் காத்திருப்பு அறையில் குளிர்சாதன வசதி




உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக விளங்கும் டுபாயில் கடுமையான வெயிலின் உஸ்னம் தாக்கி வருகிறது. இதனால், டுபாய் மக்கள் கால்வைக்கும் அனைத்து இடங்களும் குளிர்சாதன வசதி கொண்டவையாக மாற்றப்பட்டுள்ளன.

மரபு சாரா எரிசக்தியின் மூலம் டுபாயை பசுமை நகரமாக மாற்ற முயன்று வரும் அரசு, டுபாயை சுட்டுப் பொசுக்கும் சூரிய சக்தியை ஆக்கப்பூர்வமான மின் ஆற்றலாக மாற்றும் திட்டத்துக்கு தற்போது அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இதில் முதற்கட்டமாக, பஸ்களின் விளக்குகள் மற்றும் உட்பகுதியின் குளிர்சாதன வசதி போன்றவற்றுக்காக சூரிய சக்தியின் மூலம் மின்சாரத்தை தயாரிக்கும் சோதனை முயற்சியில் வெற்றி கண்டுள்ள டுபாயின் மரபு சாரா எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம், தற்போது அடுத்தகட்ட ஆராய்ச்சியிலும் வெற்றியடைந்துள்ளது.

அல் குபைபா பகுதியிலுள்ள பயணிகள் காத்திருப்பு கூண்டுக்கு சூரிய சக்தியின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்துக்கு பலன் கிடைத்துள்ளது.

இந்த கூண்டின் மேற்கூரையில் சோலார் பேனல்களை அமைத்து மின்சாரம் தயாரித்து, அதன் மூலம் அந்த கூண்டில் அமைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகை மற்றும் குளிர்சாதன இயந்திரத்தை இயக்கும் சோதனை முயற்சியும் வெற்றி பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில், அல் கவானீஜ் பஸ் நிலையத்தையும் சூரிய சக்தியின் மூலம் குளிரூட்டும் அடுத்தகட்ட ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாக டுபாயின் பொதுப் போக்குவரத்துத்துறை செயல் அதிகாரி யூஸுஃப் அல் அலீ தெரிவித்துள்ளார்.

# ஆயுத ஏற்றுமதியில் சீனாவுக்கு4 ஆவது இடம்

உலகளவில் இராணுவ ஆயுதங்கள் ஏற்றுமதியில் சீனா 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் 212 சதவீதம் உயர்வை அடைந்துள்ளதையடுத்து பிரான்ஸ் நாட்டை சீனா பின்னுக்கு தள்ளியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் கூறியிருப்பதாவது:

சீனா 2009 - 2013 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்துள்ள ஆயுதங்கள் 212 சதவீத அளவில் உயர்ந்துள்ளது. முந்தைய 5 ஆண்டுகளில் 2 - 6 சதவீத அளவிலேயே சீனாவின் ஆயுத ஏற்றுமதி உயர்விருந்தது.

இது சீனாவின் இராணுவத் தொழிற்துறை அபார வளர்ச்சியடைந்துள்ளதை காட்டுகிறது. சீனா தயாரிக்கும் இராணுவத் தளவாடங்களின் விலை குறைவு என்பது சிறப்பம்சமாகும்.

உலகில் மிக அதிகளவில் ஆயுத ஏற்றுமதி செய்து வரும் அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு அடுத்த இடத்தை சீனா தற்போது பிடித்துள்ளது. உலகம் முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் வருவாய் குறைந்த மற்றும் நடுத்தர வர்க்கத்திலுள்ள 35 நாடுகளுக்கு சீனா ஆயுத ஏற்றுமதி செய்துள்ளது. அவற்றில் பாகிஸ்தான், வங்காளதேஷ், மியன்மார் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.



தற்போது நைஜீரியாவுக்காக போர்க்கப்பல் கட்டி வரும் சீனா, ஆயுத விற்பனையை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுக்குப் போட்டியாக விரிவுபடுத்தி வருகிறது.

அதிகளவு இராணுவத் தளவாடங்கள் இறக்குமதி செய்யும் நாடுகள் பட்டியலில் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

# ஜி8 அமைப்பிலிருந்து ரஷ்யா நீக்கம்

## பிரிக் நாடுகள் எதிர்ப்பு




உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசு நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி8 அமைப்பிலிருந்து ரஷ்யா தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதுடன் பொருளாதார தடை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. உக்ரைனின் தன்னாட்சி பெற்ற பகுதியான கிறீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்துக் கொண்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது. இதற்கு இந்தியா, சீனா, பிரேசில் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் கூட்டமைப்பான பிரிக் நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

ஜி8 அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற நெதர்லாந்தின் திஹேக் நகரில் நடை பெறும் அணு பாதுகாப்பு உச்சி மாநாட்டில் உக்ரைனின் கிறீமியா பகுதியை ரஷ்யா இணைத்துக் கொண்டதற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ரஷ்யாவின் சோச் நகரில் எதிவரும் ஜூன் மாதம் நடைபெறவிருந்த ஜி8 நாடுகளின் மாநாட்டை இரத்துச் செய்ய முடிவெடுக்கப்பட்டது. திட்டமிட்டபடி அதே ஜூன் மாதத்தில் ரஷ்யா தவிர்ந்த மற்றைய 7 நாடுகள் பங்கேற்கும் மாநாட்டை பிரஸ்ஸல்ஸ் நகரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஒன்பதாவது ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தடை விதிக்கப்படலாம் என்று அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்தார்.

உக்ரைனில் ஜனநாயகத்தை வலுப்படுத்தவும். அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும் இடைக்கால அரசுக்கு தேவையான உதவிகளை செய்வதெனவும் முடிவு எடுக்கப்பட்டது.

# ஐ.நா. அனுப்பிய நிவாரண பொருட்களை சிரிய அரசு தடுத்து நிறுத்தியுள்ளது

## 71 லொரிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன



கடந்த 3 வருடங்களாக நடந்து வரும் இந்த சிரிய உள்நாட்டுப் போரில் ஓரிலட்சத்து 36 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 20 இலட்சம் மக்கள் வெளிநாடுகளிலும் 65 இலட்சம் மக்கள் உள்நாட்டிலும் அகதிகளாகியுள்ளனர்.

உள்நாட்டிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களில் பலர் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, மருத்துவம் உள்ளிட்ட வசதிகளைப் பெற முடியாமல் பசியோடும் நோயோடும் கந்தல் ஆடைகளோடும் சொல்லொண்ணா துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இவர்களின் துயர நிலையைக் கண்டு மனமிரங்கிய ஐ.நா. சபை, சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் துருக்கியிலிருந்து 79 கெண்டெய்னர்களில் உணவு, உடை, போர்வை, மருந்து போன்ற நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்தது.

சிரியாவின் எல்லையை அடைந்தும் அந்நாட்டு அரசு உரிய அனுமதியை அளிக்காததால் நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற 71 லொரிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த பொருட்களைப் பெற்று பலனடைய வேண்டிய இலட்சக் கணக்கான மக்கள் வேதனைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஐ.நா. வின் நிவாரண உதவிகளை அனுமதிக்க மறுக்கும் சிரியாவின் போக்கை மேற்கத்திய நாட்டைச் சேர்ந்த உயரதிகாரிகள் வன்மையாக கண்டித்துள்ளார்.

# 6.5 கோடி இந்தியர்கள் அடிமைகளாக வாழ்கிறார்கள்

6.5 கோடி இந்தியர்கள் சொந்த நாட்டிலேயே அடிமைகளாக வேலை செய்கின்றனர் என்ற செய்தியை அமெரிக்க ஆய்வொன்று வெளியிட்டுள்ளது. 120 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவில் 6.5 கோடி பேர் நவீன காலனித்துவ அடிமைகளாக வேலை செய்து வருவதாக சமீபத்திய புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

உலகெங்கிலும் வாழும் மக்களின் நிலை மற்றும் வேலைக்காக நடைபெற்று வரும் ஆட்கடத்தல் போன்றவற்றை கண்காணித்து வரும் அமெரிக்க அரசின் டிப்ஸ் வெளியிட்டுள்ள 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் படி, இந்தியாவில் மட்டும் சுமார் ஆறரை கோடி மக்கள் வறுமை, குடும்பக் கடன் போன்ற காரணங்களினால் நவீன காலத்து அடிமைகளாக வேலை செய்து வருவதாகவும் சிலர் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

உள்நாட்டில் வசதியான தரகர்களின் மூலமாக இந்த ஆட்கடத்தல் ரகசியமாக நடைபெற்று வருவதாக குறிப்பிடும் இவ்வறிக்கை, இப்படி கடத்தப்படும் ஆண்-பெண் இருபாலாரும் கட்டுமான வேலை, ஜவுளித்தொழில், மீன் மற்றும் இறால் பதப்படுத்துதல், செங்கல் சூளை, சுரங்கங்கள் மற்றும் ஹோட்டல் வேலைகளில் நவீன காலத்து அடிமைகளாக வேலை செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வருடாந்தம் உலகில் 10 லட்சம் குழந்தைகள் காசநோயால் பாதிப்பு

ஒவ்வோர் ஆண்டும் உலகளவில் கிட்டத்தட்ட 10 லட்சம் குழந்தைகள் காசநோயால் பாதிக்கப்படுவதாக தி லான்செட் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, தி லான்செட் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட இந்த ஆய்வில், காச நோயால் பாதிக்கப்படும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதி குழந்தைகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்படுவதாலேயே பல குழந்தைகள் இறப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

காசநோய் குழந்தைகளிடம் மிக விரைவாக உருவாவதால், மேலும் திறனுள்ள கண்காணிப்பு மற்றும் பரிசோதனை முறைகளைப் பயன்படுத்துவது என்பன சிகிச்சையின் பலன்களை மேம்படுத்த உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். 2012 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1.3 மில்லியன் மக்கள் காசநோயால் இறந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கின்றது.



தொகுப்பு:
எஸ். ஸஜாத் முஹம்மத் (இஸ்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேசம்

# எகிப்து மக்கள் படுகொலை குற்றக் கூண்டில் நிறுத்தும் என்பதை ஸீஸி தெரிந்தே வைத்திருக்கிறார்



ஸகி பவ்ஸ் (நளீமி)

எகிப்தின் சக்கராதிபத்திய இராணுவத்தின் வங்குரோத்து அரசியலை ஆதாரப்படுத்த சான்றுகள் நிறையவே சொல்ல முடியும். அதில் முதலாவது அம்சம், எகிப்திய இராணுவப் புரட்சியின் பிரதான சூத்திரதாரி அப்துல் பத்தாஹ் ஸீஸி ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்பதற்காக இராணுவமும் ஊடகங்களும் பரப்பித் திரியும் நியாயங்களாகும். அதாவது, ஒரு நாள் தான் ஜனாதிபதியாக தெரிவாகுவதை கனவில் கண்டதாக ஸீஸி தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து எகிப்திய ஊடகங்கள் இராணுவ ஜெனரல் ஜனாதிபதியாக வருவது இன்றியமையாதது என கருத்து வெளியிட்டன. மறு நாள் ஸீஸி ஓர் இறைத்தூதரைப் போன்றவர். உள்துறை அமைச்சர் ஒரு தூதரைப் போன்றவர் என அல் அஸ்ஹறின் விரிவுரையாளர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

மேலும், சென்ற மாதம் எகிப்தின் சர்வதிகாரி அப்துல் பத்தாஹ் ஸீஸியும் உள்த்துறை அமைச்சரும் மொஸ்கோவிற்குச் சென்றிருந்தனர். அதனை எகிப்திய ஊடகங்கள் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை புதிய தூதர் சாதித்துவிட்டார்; ஒபாமா தற்கொலை செய்துகொள்ளப் போகிறார் என்றெல்லாம் செய்தி வெளியிட்டது.

உண்மையில் இத்தகைய செய்திகள் எகிப்திய அரசியலின் கள நிலவரத்தை மிக அழகாக சுட்டிக்காட்டுகின்றன. அங்கு அரசியல் களம் வெறுமையடைந்திருக்கிறது. மேலும், விவாதிப்பதற்கு அரசியல் தலைப்புகள் இல்லை. கைரோவில் இராணுவத்திடம் உயிர்ப் பிச்சை கேட்கும் சில லிபரல் அரசியல்வாதிகளைத்தான் காண முடியும். இராணுவத் தளபதி அப்துல் பத்தாஹ் ஸீஸியை ஏன் நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதற்கான குறைந்தபட்சபக்கசார்பான அரசியல் நியாயங்களைக்கூட லிபரல் வாதிகள் முன்வைக்கவில்லை. மாறாக, எகிப்தை இஃவான்களிடமிருந்து காப்பாற்றியது மட்டுமே இராணுவத்தை ஆதரிப்பதற்கு போதுமானது எனக் கூறி, தங்களது அரசியல் வங்கரோத்து நிலையை மூடி மறைக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில், பல சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் எகிப்தை ஸீஸி ஆட்சி செய்யப் போவதில்லை என எழுதுகின்றனர். காரணம், தற்போது இராணுவத்தின் மீதுள்ள அச்சத்தினால் ஸீஸியை லிபரல்கள் ஆதரிக்கலாம். ஆனால், எகிப்தின் எதிர்கால பொருளாதார, அரசியல், பாதுகாப்பு மற்றும் சமூகவியல் நிலைமைகள் எவ்வாறு அமையும், அதனை எதிர்கொள்வதற்கு ஸீஸி முன்வைத்திருக்கும் திட்டங்களென்ன போன்ற கேள்விகளை கேட்கும்போது, இன்னுமோர் எகிப்தியப் புரட்சியை ஸீஸி சந்திக்கும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளதாக அமெரிக்காவின் பிரபல்யமான சஞ்சிகையான பொரிஸ் எப்யாஸ் வெளியிட்ட கட்டுரையொன்று எதிர்வு கூர்கின்றது.

இராணுவ ஜெனரல் அப்துல் பத்தாஹ் ஸீஸியின் ஜனாதிபதிக் கனவு ஒளிமயமான எகிப்திய எதிர்காலம் பற்றிய சிந்தனையில் உதிக்கவில்லை. மாறாக, தற்போது அவரைப் புடைசூழ்ந்திருக்கும் பாராட்டுக்களினதும் புகழ் மாலைகளினதும் ஏனைய லிபரல் கட்சிகளினதும் வங்கரோத்து அரசியல் ஏஜன்டாக்களினதும் விளைவாகும். தற்போதைக்கு இந்நிலை அப்துல் பத்தாஹ் ஸீஸியை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறச் செய்யலாம். ஆனால், எதிர்காலத்தில் மக்கள்



பொறுமையாக இருக்கப் போவதில்லை என அக்கட்டுரையாசிரியர் மேலும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

மறுபுறத்தில் இந்த யதார்த்தத்தை அப்துல் பத்தாஹ் ஸீஸியோ அல்லது இராணுவத்தின் மேல்மட்டமோ புரிந்து கொள்ளாமலும் இல்லை. தங்களிடம் நாட்டை மேம்படுத்தும் எவ்வித நிகழ்ச்சி நிரல்களும் இல்லை என்பதை இராணுவ ஜெனரல்கள் தெரிந்து வைத்துள்ளனர். இதன் விளைவாகத்தான், கிட்டிய எதிர்காலத்தில் இராணுவத்தின் சர்வதிகார வலை பின்னலுக்கு எதிர்ப்புகள் கிளம்பாமல் இருப்பதற்காக, அம்ர் மூஸாவின் தலைமையில் இருட்டறைக்குள் புதிய யாப்பொன்று தயார் செய்யப்பட்டது. அப்புதிய யாப்பில் சர்வதிகாரத்தை பாதுகாக்கும் பல்வேறு கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது ஸீஸி என கத்தித்திரியும் மக்கள் தொடர்ந்தும் தன்னோடு இருப்பார்கள் என்றால், எதற்காக சர்வதிகாரத்தை நிறுவனமயப்படுத்தும் சட்டங்களை இராணுவம் அமுல்படுத்த வேண்டும்? எதற்காக சர்வதேச பிச்சைக்காரர்களாக டுபாயிற்கும் ரியாதிற்கும் பிச்சை கேட்டுச் செல்ல வேண்டும்?

இதனை அமெரிக்காவின் ஓர் அரசியல் விமர்சகர் அழகாக எழுதுகிறார்: ஸீஸி யதார்த்தத்தை புரிந்து வைத்துள்ளார். அவரை ஜனாதிபதியாக்கப்போகும் எகிப்திய மக்கள் வேரற்ற மரத்தைப் போல. அதாவது அவர்கள் எப்போது எத்திசையில் தன்மீது இடிந்துவிழும் என்பது அவருக்குத் தெரியாது. எனவே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதற்கிணங்க தற்போது மக்கள் ஆதரவால் வெற்றி பெறுவது, பின்னர் தனக்கெதிராக மக்கள் கிளம்பாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என்பதே ஸீஸியின் திட்டமாகும்.

**யதார்த்தத்தில் வன்முறையை தொடர வேண்டும் என்ற தேட்டம் இராணுவத்திற்கு இல்லை. மாறாக, மக்களின் போராட்டத்தை மிக அவரசமாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதே ஒரே நோக்கமாகும். சொந்த மக்களின் மீதான வன்முறைப் பிரயோகம் இராணுவ அரசின் உள்ளத்தை குடைந்து கொண்டிருக்கிறது.**

மேலும், கைரோவை மையப்படுத்தி இயங்கும் இப்னு கல்தூன் அரசியல் ஆய்வு மையம் நடத்திய மக்கள் வாக்கெடுப்பொன்றின்படி, வெறும் 54 வீதமானவர்களே கைரோ நகரில் ஸீஸியை ஜனாதிபதியாக தெரிவு செய்ய விரும்புவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை ஆய்வுக்கு உட்படுத்தும் அமெரிக்காவின் அரசியல் ஆய்வாளர்கள் தற்போது ஸீஸியின் பொற்காலம். பொற்காலத்திலேயே வெறும் 54 வீதம் என்றால், எதிர்காலத்தில் எவ்வாறு நிலைமைகள் அமையும். நிச்சயம் இது ஸீஸிக்கு ஒரு சிவப்புச் சமிக்ஞை என்கின்றனர்.

### தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

இராணுவம் மிகக் கடுமையான வன்முறையையும் அடக்குமுறையையும் சட்டபூர்வமாக்கும் யாப்பொன்றையும் பிரசவித்த போதிலும்கூட எகிப்திய மக்களின் ஆர்ப்பாட்டம் தொடர்கின்றது. சமீபத்தில் அல் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் பிரதித் தலைவரான ரபீக் ஹபீப் எழுதிய கட்டுரையொன்றில் இராணுவமும் இராணுவ அரசாங்கமும் தனது அரசை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முழுமையாக முயற்சிக்கின்றது. யதார்த்தத்தில் வன்முறையை தொடர வேண்டும் என்ற தேட்டம் இராணுவத்திற்கு இல்லை. மாறாக, மக்களின் போராட்டத்தை மிக அவரசமாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதே ஒரே நோக்கமாகும். சொந்த மக்களின் மீதான வன்முறைப் பிரயோகம் இராணுவ அரசின் உள்ளத்தை குடைந்து கொண்டிருக்கிறது. அத்தகை மனித சமூகத்திற்கு எதிரான படுகொலைகள் சர்வதேசத்திற்கு முன்னால் ஒரு நாளில் குற்றவாளிக் கூண்டில் தன்னை நிறுத்தும் என்பதை அப்துல் பத்தாஹ் ஸீஸியும் உள்த்துறைஅமைச்சரும் நன்றாகவே தெரிந்து வைத்துள்ளனர். இதனால் ஜனநாயகத்திற்கு அணுவளவும் சம்பந்தமில்லாத சட்டங்களை பிரகடனம் செய்து மக்களின் ஆர்ப்பாட்டத்தை மிக அவசரமாக அடக்குவதற்கு முயற்சிக்கின்றது. இந்தப் பின்னணியில் தொடரும் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் இராணுவத்தில் பாரிய மனோவியல் பாதிப்புக்களை செலுத்திக் கொண்டிருக்கின்றது என்கிறார்.

மேலும், கலாநிதி ரபீக் ஹபீபின் குறிப்பிடும்போது: தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற மகுடத்தில் வன்முறையை பிரயோகிப்பதும் சம்பந்தமே இல்லாமல் ஸினாய் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதும் அல் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தை தீவிரவாதமாக பிரகடனம் செய்ததும் எகிப்திய இராணுவ அரசு தீவிரவாத்திற்கு எதிரான போராட்டத்தில் தன்னோடு பங்களிக்க சர்வதேசத்தை வேண்டிக் கொள்வதும் எதிர்கால நீதிமன்ற விசாரணைகளுக்கு பயந்தே. தீவிரவாதத்திற்கு எதிரான அரசு என்ற சுலோகம் வரலாற்றின் கருப்புப் பக்கங்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் என இராணுவச் சர்வதிகாரம் சிந்திக்கின்றது. ஆனால், மக்களின் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மெல்ல மெல்ல இராணுவத்தை கொலை செய்து கொண்டிருக்கின்றன என்கிறார்.


அதேபோன்று சர்வதேச மட்டத்தில் இன்னும் பல நாடுகள் எகிப்தின் இராணுவ அரசை அங்கீகரப்பதற்கு மறுக்கிறது. குறிப்பாக, ஆபிரிக்க ஒன்றியம், துருக்கி போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Google play



அன்ட்ரோயிட் மொபைல் பாவிப்பவர்கள் பொதுவாக கூகுள் பிளே எனும் கூகுள் அப்ளிகேஷன் ஸ்டோரிலிருந்து பல அப்ளிகேஷன்களை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவர்.

Google play என்பது...

Google நிறுவனத்தின் மொபைல் போன்களுக்கான இயக்குதளம் அன்ட்ரோயிட் ஆகும். Samsung, Google Nexus, Sony... போன்ற பிரபலமான பல மொபைல் நிறுவனங்கள் தமது இயக்குதளமாக (கணினியில் Windows ஐப் பயன்படுத்துவது போல) அன்ட்ரோயிட் ஐப் பயன்படுத்துகின்றன.

கணினியில் எமக்குத் தேவையான மென்பொருட்களை install செய்து பயன்படுத்துவோம். அதேபோல மொபைல்களில் அவ்வாறான ஒரு வசதி எமக்கில்லை. எனவே, அவ்வாறான மென்பொருட்களை அப்ளிகேஷன் வடிவில் தருகிறார்கள்.

மொபைல் போன்களுக்கும் கணினிக்கும் இடையிலான இயக்குதள வேறுபாட்டையும் மென்பொருள் வேறுபாட்டையும் தெரிந்துவிட்டீர்கள். இப்போது கூகுள் பிளே என்றால் என்னவென்று பார்க்கலாம்.

அந்த அப்ளிகேஷன்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வைத்திருக்கிறார்கள். அதாவது, Store or Market என்று சொல்லலாம். அந்த இடந்தான் Google Play. கூகுள் பிளே உம் ஒரு அப்ளிகேஷன்தான். இவ்வாறு அப்பிள் தயாரிப்புகள், பிளெக்பெரி, விண்டோஸ் மொபைல் என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே Store உள்ளது. இதனை App store (Application Store - அப்ளிகேஷன்களின் களஞ்சியம்) என்கின்றோம். இந்த வகையில், App store தான் Google Play ஆகும். இது Cloud computing தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது.

கூகுள் பிளே இற்கு நீங்கள் சென்றால் அங்கு பல இலட்சக்கணக்கான அப்ளிகேஷன்களைக் காணலாம். 1,188,482 அப்ளிகேஷன்கள் கூகுள் பிளே இல் காணப்படுவதாக தரவொன்று கூறுகிறது.

இதில் சில இலவசமாகவும் சில கட்டணம் செலுத்திப் பெற வேண்டியதாகவும் உள்ளன.

உங்களது கூகுள் கணக்கு மூலமே இதனைப் பயன்படுத்தலாம். உங்களது அன்ட்ரோயிட் போனை இயக்க வேண்டுமானால் கூகுள் கணக்கு மூலமே இயக்கவேண்டும். அந்தக் கணக்கு மூலம் கூகுள் பிளே இலிருந்து அப்ளிகேஷன்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

இதில் உங்கள் கூகுள் கணக்கு மூலமும் உங்கள் கணினியின் மூலமும் அப்ளிகேஷன்களைப் பதிவிறக்க முடியும். அது எப்படி?

play.google.com/store எனும் இணைய தளத்திற்குச் சென்றால் அங்கு கூகுள் அப்ளிகேஷன்களைக் காணலாம். அதில் Sign-in என்பதில் கிளிக் செய்து username, password என்பவற்றைக் கொடுத்து உள் நுழைந்து கொள்ளுங்கள். இப்போது நீங்கள் விரும்பும் அப்ளிகேஷனை கிளிக் செய்து பதிவிறக்கம் செய்தால், அது உங்கள் மொபைலில் பதிவிறக்கப்படும்.

அதில் My orders, Settings, Android Device manager என்பன காணப்படும். இதில் setting இற்குச் சென்றால் நீங்கள் அன்ட்ரோயிட் இயக்குதளம் மூலம் பயன்படுத்தும் மொபைல்களின் பட்டியல் காட்டப்படும்.

இது Apps, games, movies என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. Play books, Newsstand, Music போன்ற வசதிகள் மேலைநாடுகளில் மட்டும் கிடைக்கின்றது. இலங்கையில் அவ் வசதி இன்னுமில்லை.

கூகுளின் Gmail, Hangout, google+, google translater, goolge drive, Google calender.. போன்ற அனைத்துத் தயாரிப்புகளும் அப்ளிகேஷனாகக் கிடைக்கின்றன. கூகுளின் அப்ளிகேஷன்களை அப்பிள் தயாரிப்புகளின் ஸ்டோரிலும் பெற்றுக்கொள்ளலாம் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

## Android device manager

இதன் மூலம் உங்கள் மொபைல் உள்ள இடத்தைக் கண்டுபிடிக்கலாம். சிலபோது உங்கள் மொபைல் களவு போனால் அதனைக் கண்டுபிடிக்க இது உதவும். மேலும் அதிலுள்ள அனைத்து தகவல்களையும் அழித்துவிடவும் முடியும்.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org
azeemnaleemi@gmail.com




# பறவைகள் பலவிதம்

நமது விரல் நீளமும் (இரண்டேகால் அங்குலம்) 1.6 கிராம் எடையுமே உள்ள மிகச் சிறிய பறவையான ஹம்மிங்பர்ட் Humming Bird (பாடும் பறவை) 9 அடி உயரமும் 156 கிலோ எடையும் கொண்ட நெருப்புக் கோழி வரை பறவைகள் பல விதந்தான்.

பறவைகள் முதுகெலும்புள்ளவை. பாலூட்டிகளைப்போல நான்கு அறை இதயத்தையும் வெதுவெதுப்பான இரத்தத்தையும் கொண்டவை. இதன் காரணமாக சீரான உடல் வெப்பத்தையும் வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழும் தன்மையும் பெறுகின்றன. ஆனால், ஊர்வன போன்று முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.

### சிறகுகள்

பறவைகளின் சிறகுகளில் உள்ள முக்கிய பொருள் கெரோட்டின். நமது தலைமுடி, விரல் நகம் அகியவற்றில் உள்ள அதே கெரோட்டின்தான். ஆனால், நமது தலைமுடி, நகங்களைப் போல் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போகாமல் ஓர் அளவுடன் நின்று விடும். இதனால் பெரும்பாலும் வளர்ந்த பறவைகள் வருடம் ஒரு முறையாவது சிறகுகளை உதிர்த்து புதுப்பித்துக் கொள்ளும். இந்த சிறகுகள் எடை குறைவான, ஆனால் வலுவான பறப்பதற்கேற்ற மேற்பரப்பை பறவைகளுக்கு அளிக்கின்றன.

### கண்கள்

பறவைகள் பெரும்பாலும் கூரிய பார்வை உடையன. ஒரு கண்ணுக்கு மூன்று இமைகள் இருக்கும். மேல் இமை மனிதர்களின் கண் இமையைப் போன்றது. கீழ் இமை தூங்கும் போது மட்டும் மூடிக்கொள்ளும். இது தவிர பக்கவாட்டில் அலகின் அருகிலிருந்து துவங்கும் ஒரு மெலிதான தோல் உண்டு. இது ஒளி ஊடுருவக்கூடிய தோல், கண்களை ஈரப்படுத்தவும் காற்று, அதிக வெளிச்சத்திலிருந்து காக்கவும் உதவுகிறது.



### காது

பறவைக்கு காது மிக முக்கியமானது. ஆனால் முழுவதும் உள்புறமாகவே அமைந்துள்ளன. கண்ணுக்குச் சற்று கீழே சிறிய துவாரம் இருக்கும். பெரும்பாலும் சிறிய இறகுகளால் மூடப்பட்டிருக்கும். பறவைகளுக்கு காது ஒலியைக் கேட்பதற்காக மட்டுமல்லாமல் பறக்கும் போது சமநிலையை பேணவும் தேவைப்படுகிறது.

### மூளை

பறவைகளின் மூளை பலவிதங்களில் முழுமை பெற்றது. பறக்கும் போது விமானத்தைப் போல உடலில் அனைத்து இயக்கங்களின் ஒருங்கிணைப்பு, உள்ளுணர்வு, உடனடியாக உணர்ந்து கொண்டு திசை மாறுதல் போன்றவற்றை செயல்படுத்துகிறது. பறவைகளின் அறிவுத் திறனும் ஆச்சரியகரமாக, சிறப்பாக உள்ளது. மனித மூளையில் உள்ள சிந்திக்கும் பகுதியான செரிபெரல் கார்டெக்ஸ் பறவைகளில் மிகப் பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. ஆனால், Hyperstriatum என்னும் மனிதர்கள் மற்றும் பாலூட்டிகளில் இல்லாத ஒரு பகுதி பறவைகளின் மூளையில் உள்ளது. இந்த பகுதியே பாடும் பறவைகள் பாட்டுக்களைக் கற்றுக்கொள்ள உதவுகிறது. பறவைகளின் அறிவுத்திறனிற்கும் இதுவே காரணமாக இருக்கலாமென்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

### அலகு

பறவைகளின் உணவுமுறைக்கேற்ப அலகுகள் அமைந்துள்ளன. வானம்பாடி மலர்களில் தேன் குடிக்கும் பறவைகளுக்கு நீண்ட நுண்ணிய அலகு. கழுகு, ஆந்தை போன்ற மாமிய உண்ணிப் பறவைகளுக்கு சதையைப் பிய்த்து உண்ண ஏற்ற உறுதியான கூர் அலகு. மீன்களை உண்டு வாழும் பறவைகளுக்கு வழுக்கும் இரையை பிடிக்கவாகான ரம்பம் போன்ற விளிம்புடைய அலகு. பழக்கொட்டைகளை உடைக்க உறுதியான அலகு, அவ்வாறே மரங்கொத்திப் பறவைக்கோ உளி போன்ற உறுதியும் கூர்மையும் கொண்ட அலகு போன்ற பல வகை அலகுகள் காணப்படும்.

### உணவு

பறவைகள் வாழ்நாளில் பெரும்பகுதியை உணவு தேடவும் உண்ணவுமே செலவழிக்கின்றன. அதிக எடை பறப்பதற்கு இடைஞ்சல் என்பதால் பறவைகளால் உடலில் உணவைச் சேமித்து வைக்க இயலாது. சிறிய பறவைகள் அடிக்கடி உண்பது அவசியமாகிறது.

பறவைகளின் வயிறு அசாத்தியமானவை. கடினமான கொட்டைகள், செல்பிஷ் போன்றவற்றைக் கூட நொறுக்கி செரிமானம் செய்துவிடும். சில பழக்கொட்டை உண்ணும் பறவைகள் சிறிய கூழாங்கற்களையும் சேர்த்து உண்கின்றன. குஞ்சுகளுக்கு உணவு எடுத்துச் செல்ல பல பறவைகள் வாய்க்குள் சிறிய பை போன்ற பிரதேசங்களை வைத்துள்ளன.

### உறக்கம்

இரவில் வேட்டையாடும் ஆந்தை போன்றவற்றைத் தவிர பெரும்பாலான பறவைகள் பகலில் விழித்து இரவில் உறங்குகின்றன. குஞ்சு பொரிக்கும் காலங்களில் மட்டுமே கூட்டில் உறங்குகிறது. மற்ற நேரங்களில் கிளையோ, மரப்பொந்தோ, சில சமயம் ஒற்றைக் காலிலோ கிடைத்த இடத்தில் உறங்கிக் கொள்ளும். பகல் காலத்தில் பறவைகளுக்கு நீண்ட நேரத்தூக்கம் தேவைப்படுவதில்லை. தசைகளை தளர்த்தவும் சக்தியைச் சேமிக்கவும் மட்டுமே தூக்கம் தேவைப்ப்டுகிறது.

### ஜோடி

பெரும்பாலான பறவைகள் ஒன்றுக்கு ஒன்று என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவை. வழக்கம்போல் இதிலும் சில விதிவிலக்குகள் உண்டு. பாடுகின்ற பறவைகள் பாட்டாலேயே தங்கள் துணையைப் பிடிக்கின்றன. பெரும்பாலும் சத்தமாக நீளமாக பாடும் ஆண் பறவையின் பாட்டிற்குத் தான் பெண் பறவை மயங்கி வந்து சேரும். மற்ற பறவைகள் தங்கள் இறகு அலங்காரத்தால் துணையை அசத்துகின்றன.

ஆண், பெண் இரண்டுமே முட்டையை அடைகாப்பதுண்டு. வெளிவரும் குஞ்சுகளில் பொதுவாக 10 மட்டுமே ஒரு வருடம் தாண்டி உயிர் வாழும்.

### இடப்பெயர்ச்சி


உணவுத் தேவைகளுக்காகவும் மிக வெப்பம், மிக குளிர் சீதோஷ்ண நிலைகளை தவிர்ப்பதற்காகவும் பறவைகள் வருடாந்த இடப்பெயர்ச்சி செய்கின்றன. கடல் பறவைகள் மிக அதிக தூரம் (சில வகைகள் ஒரு வருடத்தில் 32,000 கி.மீ. வரை) பயணிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# எதற்காக சிசேரியன்



டாக்டர் சுக பிரசவம் என்றுதான் கூறினார். திடீரென்று சிசேரியன் என்கிறார்கள் என எல்லோரும் பயப்படுவதுண்டு. பிரசவ வலி வரும்போதுதான் சிசேரியன் தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது. வலியின் தன்மையிலோ, குழந்தையின் தலை திரும்புவதிலோ, கருப்பை வாய் திறப்பதிலோ, குழந்தையின் நாடித் துடிப்பிலோ மாற்றங்கள் ஏற்பட்டு, குழந்தையின் பாதை வழியே ஏற்படும் மாற்றத்தை கருத்திற்கொண்டே இது தீர்மானிக்கப்படுகிறது.

இவை அனைத்தையும் பிரசவ வலி கண்ட பின்புதான் கணிக்க முடியுமேயன்றி, முன்கூட்டியே தீர்மானிக்க இயலாது. எனவே, பல சமயங்களில் பிரசவ வலி கண்ட பின்பு சாதாரண பிரசவ தீர்மானத்தை மாற்றி, சிசேரியன் செய்ய நேரிடுகிறது.

பெரும்பாலானோர் முதல் தடவை சிசேரியன் செய்ததால் இந்த முறையும் டாக்டர் சிசேரியன் செய்துவிட்டார் என்று புலம்புகிறார்கள்.

முதல் முறை சிசேரியன் செய்யும் போது, கருப்பையில் தையல் போடுவதால் அது காயப்பட்டு விடுகிறது. அந்த வடு எந்த அளவுக்கு உறுதியானது என்று யாராலும் கணிக்க முடியாது. எனவே, முதல் முறை சிசேரியன் செய்தவர்களின் அடுத்த பிரசவத்தில் அவர்களது சாதாரண பிரசவத்தின் சாத்தியக்கூறுகள் 50 வீதந்தான் உள்ளது.

பிரசவம் நெருங்கும்போது, குழந்தையின் தலை, இடுப்பு எலும்புக்கு மேலாக இருப்பது பிரசவ வாய் ஏதுவாக இல்லாமல் இருப்பது போன்ற காரணங்களால் அந்தத் தாய்க்கு சிசேரியன் முன்கூட்டியே செய்துவிட வேண்டியதாகிறது.

ஏனெனில், அந்தத் தாயை பிரசவ வலிக்கு உட்படுத்தினால், மேற்சொன்ன காரணங்களால், குழந்தை பிறக்க நேரமாகி அந்த நேரத்தில் கருப்பையிலுள்ள வடு, வலுவுற்று கருப்பையே வெடித்து, தாயின் உயிருக்கே ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.

சரி, சிசேரியன் செய்வதென்றால் வலி கண்ட பிறகு செய்யக்கூடாதா? எதற்காக 10, 15 நாள் முன்பாக செய்ய வேண்டும் என்று சிலர் வினவுகின்றனர். பிரசவ வலி எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றி வந்து விடும். அந்த நேரந்தான் தாய் சாப்பிட்டிருப்பாள். எனவே அவளுக்கு மயக்க மருந்து கொடுப்பது ஆபத்தை ஏற்படுத்தும்.

அல்லது அவள் இருக்கும் இடத்திலிருந்து வலி கண்ட பிறகு பயணப்பட்டு வர நீண்ட நேரமாகலாம். அந்நேரத்தில் பிரசவ வலியினால், தாய்க்கோ, குழந்தைக்கோ ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு.

இவற்றை மனதில் கொண்டுதான் குழந்தை முழு வளர்ச்சி அடைந்ததாக கருதப்படும் ஒரு வாரங்களுக்குப் பிறகு, அதாவது 10, 15 நாட்கள் முன்பாகவே சிசேரியன் செய்ய நேரிடுகிறது.

## வாழ்க்கையில் உயர்வு பெற...

- பேசும் முன் கேளுங்கள். எழுதும் முன் யோசியுங்கள். செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்.
- நான் மாறும்போது தானும் மாறியும், நான் தலையசைக்கும் போது தானும் தலையசைக்கும் நண்பன் எனக்குத் தேவையில்லை. அதற்கு என் நிழலே போதும்!
- நோயை விட அச்சமே அதிகம் கொல்லும். அச்சத்தை இல்லாமலாக்குங்கள்.
- நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முன்பே சென்றுவிடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.
- சமையல் சரியாக அமையாவிடில் ஒரு நாள் இழப்பு. அறுவடை சிறக்காவிடில் ஓர் ஆண்டு இழப்பு. திருமணம் பொருந்தாவிடில் வாழ்நாளே இழப்பு.
- இவர்கள் ஏன் இப்படி? என்பதை விட, இவர்கள் இப்படித்தான் என எண்ணிக்கொள்.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
- ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.
- நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.
- தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகிறான்.
- செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்.
- வெற்றிபெற்ற பின் தன்னை அடக்கிவைத்துக் கொள்பவன், இரண்டாம் முறையும் வென்ற மனிதனாவான்.
- தோல்வி ஏற்படுவது, அடுத்த செயலைக் கவனமாகச் செய் என்பதற்கான எச்சரிக்கை.
- பிறர் நம்மைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நாம் பிறரைச் சமாதானப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

## உடம்பின் கால அட்டவணை

நம் உடலுக்கும் கால அட்டவணை உண்டு. இதை நாம் முறையாகப் பின்பற்றினால் டாக்டரிடம் போகவேண்டிய அவசியமே இல்லை. இதோ கால அட்டவணை:

விடியற்காலை 3 முதல் 5 மணி வரை நுரையீரல் நேரம். இந்த நேரத்தில் தியானம், மூச்சுப் பயிற்சி செய்தால் ஆயுள் நீடிக்கும்.

காலை 5 முதல் 7 வரை பெருங்குடல் நேரம். இந்த நேரத்தில் காலைக் கடன்களை முடிக்கவேண்டும். இதனால் மலச்சிக்கலே ஏற்படாது.

காலை 7 முதல் 9 வரை வயிற்றின் நேரம். இந்த நேரத்தில் சாப்பிடுவது நன்கு ஜீரணமாகும்.

காலை 9 முதல் 11 வரை மண்ணீரல் நேரம். வயிற்றில் விழும் உணவைச் செரிக்கச் செய்யும் நேரம். இந்த நேரத்தில் எதையும் சாப்பிடக்கூடாது. தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது.

காலை 11 முதல் 1 வரை இதயத்தின் நேரம். இதய நோயாளிகள் கவனமாக இருக்கவேண்டிய நேரம். சத்தமாகப் பேசுதல், படபடத்தல், கோபப்படுதலை அறவே தவிர்க்கவேண்டும்.

பிற்பகல் 1 முதல் 3 வரை சிறுகுடல் நேரம். மிதமான சிற்றுண்டியுடன் ஓய்வெடுக்க வேண்டும்.

பிற்பகல் 3 முதல் 5 வரை சிறுநீர்ப்பையின் நேரம். நீர்க்கழிவுகளை வெளியேற்றச் சிறந்த நேரம்.


மாலை 5 முதல் 7 வரை சிறுநீரகங்களின் நேரம். தியானம், இறைவழிபாடு செய்வதற்கு ஏற்றது.

இரவு 7 முதல் 9 வரை பெரிகார்டியத்தின் நேரம். பெரிகார்டியன் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு ஜவ்வு. இரவு உணவுக்கேற்ற நேரம்.

இரவு 9 முதல் 11 வரை உச்சந்தலை முதல் அடிவயிறு வரை உள்ள மூன்று பாதைகள் இணையும் நேரம். அமைதியாக உறங்கலாம். இரவு 11 முதல் 1 வரை பித்தப்பை நேரம். அவசியம் உறங்க வேண்டும்.

இரவு 1 முதல் 3 வரை கல்லீரல் நேரம். இரத்தத்தை கல்லீரல் சுத்தப்படுத்தும் நேரம். கட்டாயம் தூங்கவேண்டும்.






## மருத்துவ குறிப்புக்கள்

பற்களில் காவி கலந்த மஞ்சள் கறை தோன்றுவது ஃப்ளரோசிஸ் எனும் நோயின் முக்கிய அறிகுறி. புளோரைட் அதிகமாவதால் இது ஏற்படுகிறது.

பற்கள் பலம் பெற பால், தயிர், நெய், பசலி, அவரை ஆகியவற்றை சேர்த்துக் கொள்வது நல்லது.

தாவரக் கொழுப்பிலும் வசலின் கலப்பிலும் தயாரிக்கப்படும் சோப்புகள் உடலுக்கு நல்லது.

கண்களில் தூசு விழுந்தால் நன்றாக மூடிக்கொண்டு விழிகளை அசையாமல் வைத்துக் கொள்ளுங்கள்.

நகப் பூச்சு போட்டுக் கொள்வதால் சிலருக்கு ஒவ்வாமை ஏற்படலாம். இதனால் நகத்தைச் சுற்றி புண், அரிப்பு, தடிப்பு போன்றவை உருவாகலாம்.

உடலில் அரிப்பு இருந்தால் மீன், கத்தரிக்காய் சாப்பிடக் கூடாது.

அல்சர் ஏற்படக் காரணம் கார உணவு, நேரந்தவறிய உணவு, அதீத உணவு ஆகியவையே.

இரத்த சோகை உள்ளவர்கள் இரும்புச் சத்து நிறைந்த அவரைக்காயை சாப்பிடுவது நல்லது.

வெண்டிக்காய், புடலங்காய், பூசணிக்காய், பீட்ரூட் ஆகியவற்றில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது.

பித்த வாந்தியை தவிர்க்க காரம், மசாலா உணவுகளை தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டிக்கிட்டு முழிக்குமா...

(05 ஆம் பக்கத் தொடர்)



ஆனால், நவிப்பிள்ளையும் அமெரிக்காவும் மு.கா. வின் அறிக்கையில் முக்கால்வாசி புலிகள் குறித்து பேசாமல் மத முரண்பாடுகள் குறித்து மாத்திரம் பேசியிருப்பதின் அரசியல் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

ஆக, நவிப்பிள்ளைக்கு மு.கா. வழங்கிய அறிக்கை எப்படி பலதரப்பின் அரசியல் நகர்த்தலுக்கான முற்றிய காயாக இருக்கிறதோ அதைவிட இது மு.கா. வுக்கு பழுத்த கனியாகவே அமைந்துவிட்டது.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் நிற்க வேண்டுமானால் நாரே தக்பீரையும் அஷ்ரஃபின் 'நான் எனும் நீ' கவிதையையும் வைத்து பிழைத்துக் கொள்ளலாம். ஆனால், தெற்கில் அந்தப் பருப்பெல்லாம் வேகாது. தென்னிந்திய நட்சத்திரங்கள் வந்து கலக்கும் மேடைகளில் பழைய டேப் ரெக்கோடரில் உள்ள மு.கா. கட்சிக் கீதம் கைதட்டலை வாங்கிக்கொடுக்காது. எனவே, தெற்கு சமூகத்திற்கு பேசவேண்டிய இனவாத கருத்தொன்று தேவை. பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல், மேல், தென் மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்ட மு.கா. வுக்கு ஜெனீவா கிடைத்திருக்கிறது.

எப்போதும் முன்யோசனை இன்றியே நடந்துகொள்ளும் சில இனவாத சக்திகளும் மு.கா.வின் சிறு தீப் பொறியை ஊதி, ஊதி கனல் கொண்டெரியும் தீப்பிழம்பாக மாற்றிவிட்டன. இப்போது இது தெற்கில் மு.கா. வுக்கு சார்பாக வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. என்ன செய்வதென்று அச்சக் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மு.கா. வுக்கு இந்த நெருப்பு, கூதல் காய்ச்சிக் கொண்டிருக்கிறது. இதன் பிரதிபலன் தேர்தல் முடிவில் நிச்சயம் தெரியும்.

இதைத்தான் சில ஹக்கீமிடம் பந்தைக் கொடுத்திருப்பதாக வும் அவர் அதனை குறிபார்த்து அடித்துக் கொண்டிருப்பதாக வும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

இன்னொரு பக்கம் புலிவாலைப் பிடித்த திரிசங்கு நிலைக்கு அரசாங்கத்தைத் தள்ளி பழிவாங்கிக் கொண்டார் ஹக்கீம். வேண்டுமென்றால் எங்களை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றிப் பாருங்கள் என்று வெட்கங்கெட்டதனமாய் விட்ட சவால் எப்படிப்போனாலும், அதனை ஒரு சவாலாக எடுத்து 'வெளியே போ' என மிரட்டும் 'தில்' இல்லாத நிலையிலும் அரசாங்கம் இருப்பதாகவே தெரிகிறது.

வெண்நெய் திரண்டுவரும் போது பாணையை உடைக்க ஜனாதிபதி முன்வரமாட்டார் என்று ஹக்கீமாருக்கு நன்கு தெரியும். தெரிந்து கொண்டே இப்படி சவால் விட்டார். ஆனாலும், தேர்தல் முடிந்த பின் ஒரு பாடம் படிப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டாலும் சந்திரிகாவின் மீள்வருகையால் ஹக்கீமாரை கைக்குள்ளேயே வைத்திருக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கிறது. எதிரியின் எதிரி நண்பன்தானே!

இப்படி, வெற்றிக் கனிபறிக்க வழுக்கு மரத்தில் ஏறிக்கொண்டிருக்கும் மு.கா. வுக்கு வேறு பிரதேசங்களில் சில அடிகள் விழுந்திருப்பதும் நேரம் சரியில்லை என்ற வாதத்தை உண்மைப்படுத்தியிருக்கிறது.

மு.கா. கஷ்டப்பட்டு கட்டியெழுப்பிய சாய்ந்தமருது கோட்டை இடிந்து விழ ஆரம்பித்திருப்பதாக தெரிகிறது. மு.கா. வின் முன்னாள் கல்முனை மாநகர மேயர் கலாநிதி சிராஸ் அமைச்சர் அதாஉல்லாவின் குதிரை மீது தாவியிருக்கிறார். இதற்கு செஞ்சோற்றுக் கடனாக சாய்ந்தமருதுக்கு தனிப் பிரதேசசபை தருவதாக அதாவுல்லாவும் வாக்குறுதியளித்திருக்கிறார். இது நடக்குமாக, நடக்காதா என்று வேறு விடயம். அப்படி நடக்குமாக இருந்தால் சாய்ந்தமருதில் தனிக்காட்டு ராஜாவாக இருந்த மு.கா. வுக்கு அது சரிவுதான்.

ஆனாலும், தேர்தல் காய்ச்சல் பிடித்து நடுங்கிக் கொண்டிருக்கும் மு.கா. சிராஸ் பற்றி சிந்திக்கும் மனநிலையில் இல்லையென்றே தெரிகிறது.

மறுபுறம், அரசாங்கத்துக்கு சாம்பிராணி புகை பிடிக்கும் சிலர் எமக்குள் இருக்கின்றனர் என ஹக்கீமார் கூறியிருப்பதிலிருந்து கட்சிக்குள்ளிருக்கும் உட்பூசல் தேர்தல் முடிந்த பின்னர் பற்றியெரியலாம் என்றும் அரசாங்கம் இதற்கு பெற்றோல் ஊற்றலாம் என்றும் எதிர்வு கூறப்படுகிறது.

இன்னொரு புறம் மேல், தென் மாகாண சபை தேர்தலில் தனித்துக் களமிறங்கியிருக்கும் அமைச்சர் றிஷாட் பதியுதீன் அணி குறித்து மு.கா. பெரிதாக அலட்டிக் கொண்டதாக காட்டிக்கொள்ளா விட்டாலும் தெற்கில் மு.கா. வை முடக்க அரசாங்கம் ஏவிவிட்ட ஒரு சக்தியோ என்ற சந்தேகம் நிலவவே செய்கிறது. அது உண்மையானால் மு.கா. மத்தளமாய மாறி இரு பக்கம் அடிவாங்குவதை தவிர்க்க முடியாதுதான்.

அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா என்று சொல்லிக் கொண்டாலும் மு.கா.வுக்கு இது நல்ல காலமா, கெட்ட காலமா என்று ஆருடங்கூற தேர்தல் காய்ச்சல் கொஞ்சம் தணியும் வரை காத்திருக்கத்தான் வேண்டும்.

## எகிப்து மக்கள்...

(13 ஆம் பக்கத் தொடர்)

நெல்ஸன் மண்டேலாவின் இறுதிச் சடங்கில்கூட எகிப்திற்கு பங்குபற்றுவதற்கு வீசா மறுக்கப்பட்டது. ஜனநாயகவாதிகள் மாத்திரமே மண்டேலாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க முடியும் என தென்னாபிரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சு அறிக்கை வெளியிட்டது. துருக்கியின் பிரதமர் ரஜப் தைய்யிப் அர்தோகான், ஸீஸி ஜனாதிபதியாக வந்தாலும் அவரை நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம் என்கிறார். இந்த வகையில், சர்வதேச மட்டத்தில் தனது சட்டபூர்வத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வது இராணுவ அரசின் மற்றுமொரு தலையிடியாகும்.

ஸீஸி தலைமையிலான அணி அரசியல் நிலைப்பாடற்ற வெறும் ஒரு சில பாண் துண்டுக்காக ஆதரவளிக்கும் மக்களின் மீது நம்பிக்கை வைத்து அரசியலில் குதித்துள்ளது. நிச்சயம் தான் வளர்த்த கிடா தன் மார்பில் பாய்ந்தது என்பது போல, எந்த எகிப்திய மக்களை ஆதாரங்காட்டி ஜனாதிபதித் தேர்தலில் ஸீஸி குதிக்கப் போகிறாரோ, அதே மக்கள் மிக விரைவில் ஸீஸிக்கு எதிராகவும் வீதிக்கு வருவார்கள் என்பது நிச்சியம்.

## ஜெனீவா...

முன் பக்கத் தொடர்

பெரிதும் நம்பியிருந்தது. இதன்படி, இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்த அதேவேளை, எதிர்பார்த்தபடி பல முஸ்லிம் நாடுகளே இலங்கைக்கு சார்பாக வாக்களித்துள்ளன.

பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜியம், அல்ஜீரியா, மாலைதீவுகள் ஆகிய முஸ்லிம் நாடுகளே இலங்கைக்கு சார்பாக வாக்களித்துள்ளன.

வாக்களிப்பில் நடுநிலை வகித்த 12 நாடுகளில் குவைட், இந்தோனேஷியா, கஸகஸ்தான், மொரோக்கோ, எதியோப்பியா ஆகியன முஸ்லிம் நாடுகளாகும்.

இலங்கைக்கு எதிராக வாக்களித்த 23 நாடுகளில் ஒன்றேனும் முஸ்லிம் நாடு அல்ல என்பது இலங்கைக்கு முஸ்லிம் நாடுகள் குறித்த இனிப்பான செய்தியாகும்.

## முஸ்லிம்கள்....

முன் பக்கத் தொடர்

புறக்கணிக்கும் இச்செயற் பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம். மீள்குடியேற்றம் என்ற பெயரில் முஸ்லிம் மதவாதத்தை பரப்பி, தேசத்துரோகம் செய்து இலங்கையை சீரழிக்கும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.



## பாராளுமன்ற உறுப்பினர்...



(06 ஆம் பக்கத் தொடர்)

அதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஓரங்கட்டப்படும் என்ற அச்சமே யோகேஸ்வரனின் இனவாத கருத்திற்குக் காரணம். தொடர்ந்தும் தமிழ் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். வறுமையில் இருந்து மீள முடியாமல் இருக்கவேண்டும். இனத்துவேஷங்களினூடாக சமூகங்களை பிரித்தாளுவதன் மூலம் தங்களது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற மிக மோசமான நிலைப்பாட்டினூடாக தங்களது வங்குரோத்து அரசியலை செய்ய முனைகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சி. யோகேஸ்வரன், முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் நிறைந்த வரலாறுகளை மறந்துவிட்டுப் பேசுகிறார். காத்தான்குடி மக்களுக்குச் சொந்தமான படுவான்கரையில் இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போராளிக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்தும் இன்னும் பல இலட்சம் ரூபா பெறுமதியான காணிகளை வெறும் ஓரிரு ஆயிரங்களுக்கு தமிழ் சகோதரர்களுக்கு பெற்றுக்கொடுத்ததை மறந்துவிட்டாரா? மஞ்சந்தொடுவாய், இருநூறுவில், வடிச்சல், உறுகாமம், உன்னிச்சை, கள்ளியங்காடு, கரடியனாறு, முதலைக் கண்ணடிச்சேனை, கித்துள், திருமங்கலாவெட்டை, மதுரங்குளம், புஞ்சாங்குளம், காயங்கேணி, கிருமிச்சை, புனானை அணைக்கட்டு என்று முப்பதுக்கும் மேற்பட்ட கிரமங்களிலிருந்து **4326** குடும்பங்கள் விடுதலைப் புலிகளால் துரத்தியடிக்கப்பட்டதை பாராளுமன்ற உறுப்பினர் மறந்துவிட்டார் போலும்.

ஒல்லிக்குளத்தில் முஸ்லிம்களுடைய பள்ளிவாசலை தரைமட்டமாக்கியமை, இன்று வரை முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருக்கின்ற கள்ளியங்காடு பிர்தௌஸ் பள்ளிவாசலைக் கைப்பற்றி, அதனை நிர்மூலமாக்கி, அவ்விடத்தில் பிரம்ம குமாரிகள் ஆலயம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

சுனாமிக்குப் பின்னர் காத்தான்குடி ஜாமியுழ் ழாபிரீன் பள்ளிக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் காணியை அபகரித்து முஸ்லிம்களுடைய உரிமைகளை பறித்தார்கள். முஸ்லிம்களுக்கு சொந்தமான கர்பலா காணியில் அத்துமீறி சடலங்களை புதைத்ததுடன் இன்று வரைக்கும் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது.

இவையெல்லாம் முஸ்லிம்களுக்கு செய்கின்ற அநியாயம் என்பது இந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு தெரியவில்லையா?

## பிச்சை...

(09 ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் காலங்களில் இவ்விரண்டு கட்சிகளும் சாராய ஆற்றைத் திறந்துவிட்டதில் முதன்மையானவையாக இல்லாதிருக்கலாம். பரிசு பொருட்களையும் தண்ணீர்த் தாங்கிகளையும் உணவுப் பொருட்களையும் வழங்காமல் இருந்திருக்கலாம். ஆனால், இந்த இரண்டு கட்சிகளும் போட்டுக் கொண்ட குழாயடிச் சண்டையின் காரணமாக, வாக்காளர்களின் வாக்குகளைக் கவர்வதற்கு வேறு என்னென்ன குறுக்கு வழிகளைக் கையாளலாம் என்ற சிந்தனையை வெளியில் இருந்து மலையகத்துக்கு அரசியல் செய்ய வந்தவர்கள் உருவாக்கிக் கொண்டனர்.

டி.வி. இல் நிகழ்ச்சி நடத்தினால் தேர்தலில் வெற்றிபெற அது போதுமானதாக இருக்கும் என்றும் சாராயத்தை ஓடவிடுவது வாக்குகளை அள்ளி வரும் என்றும் பரிசு பொருட்களை அல்லது வீட்டுக்கு அவசியமான பொருட்களை வழங்குவதன் மூலம் வாக்கு சேகரிக்கலாம் என்று நினைப்பதற்கும் வழிவகுத்தவர்கள் இ.தொ.கா. மற்றும் ம.ம.மு. வுமே என்பது மிகையல்ல. பணந்தான் முக்கியம் மற்றதெல்லாம் ஈஸி என்றாகிவிட்டது, இன்று.

இன்றைக்கு மலையக வாக்குகள் எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டது. யார் வேண்டுமானாலும் பணத்தை இறைத்தால் பாராளுமன்றத்தில் சீட் பிடிக்கலாம் என்றாகிவிட்டது. இன்று மலையகத்தில் யாராவது கொள்கை பேசினால் அவர் கேலிக்குரியவராகவும் முட்டாளாகவும் பார்க்கப்படும் நிலை.

கொள்கைப் படிப்புடனும் இலட்சிய வெறியுடனும் இருந்த ஒரு சமூகத்தை சாராயத்துக்கு வாக்களிக்கும் சமூகமாக்கியவர்கள் யார்? இ.தொ.கா. வும் மலையக மக்கள் முன்னணியும் கட்டுக்கோப்புடனும் அதன் அத்தனை கோட்டை கொத்தளங்களுடனும் தொடர்ந்தும் செயல்பட்டிருந்தால், வாக்குகளை சாராயத்துக்கும சீமெந்து கற்களுக்கும் விலைபேசும் நிலை தோன்றியிருக்காது. இன்றைக்கு, புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் என்ன செய்கிறார்களோ அவற்றையெல்லாம் இந்த இரு கட்சிகளும் செய்யவேண்டிய நிலை தோன்றியிருக்கிறது.

இன்றைக்கு எவரிடமும் கொள்கை கிடையாது. எனவே, போராட்டங்களும் இல்லை. பேரம் பேசுவதற்கு மடியிலும் எதுவும் இல்லை. எதிர்காலம் பற்றிய எந்த சிந்தனையும் யாரிடமும் கிடையாது. மலையக அரசியல்வாதிகள் இன்றைக்கு அன்றாடம் காச்சி அரசியலையே நடத்தி வருகின்றனர். இவர்களிடம் மடியில் எதுவும் இல்லையென்றால், வாக்காளர்களின், பொதுமக்களின் நிலை என்னவாகும்? எவ்வளவு பரிதாபமான நிலை!

பேரினவாதிகளும் பிரித்தாள நினைப்போரும் எவையெல்லாம் நடக்கவேண்டும் என்று விரும்பினார்களோ அவை அனைத்தும் மலையக அரசியல்வாதிகளினாலேயே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. விமோசனமே இல்லையெனும் அளவுக்கு அடிபணிந்து விட்டார்கள். பிச்சைவேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்கு மலையக அரசியல்வாதிகள் வந்துவிட்டனர்.

இந்த நிலையிலிருந்து மீட்சி பெறுவதும் சுயகௌரவத்தோடு ஒரு சமூகத்தை கட்டியெழுப்பி சவால்களை சந்திப்பதும் பாரிய பணி. வாக்குகளைக் கொள்ளையடித்து பதவியையும் பணத்தையும் பெறலாம் என்ற சிந்தனை இவர்கள் மத்தியில் இருக்கும் வரை இச்சமூகத்துக்கு விடிவு வரவே வராது. இருக்கும் உரிமைகளும் பறிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மலையக அரசியல்வாதிகளுக்கு பதவி, பணத்தைத் தவிர வேறு நோக்கம் இல்லையென்றால், மலையகத்தின் படித்த வர்க்கமும் மூளைசாலிகளுந்தான் இச்சவாலை எதிர்கொள்ள வேண்டிவரும். அவர்கள் இதைச் செய்ய, தலைமை தாங்க முன்வருவார்களா?

## சிறுபான்மை...

முன் பக்கத் தொடர்

பிரஜைகள்குழு மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்;

அவர் மேலும், தெரிவித்ததாவது; சிறுபான்மை மக்களின் போராட்டம் ஐக்கியமாக முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழ் மக்கள், ஒடுக்கப்படுகின்ற சிங்கள மக்கள் என எல்லோரையும் இணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போது எல்லா சமூகங்களும் சமமாக வாழ்கின்ற ஒரு நல்ல நிலை உருவாகும்.

## நூற்றுக்கணக்கான...

முன் பக்கத் தொடர்

கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பொறியியலாளருமான சிப்லி பாறூக் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவ்விடத்திற்கு விஜயம் மேற்கொண்ட அக்குழுவினர் குருக்கள்மடம் கடற்கரைப் பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் 3 இடங்களை பார்வையிட்டதோடு, அவ்விடங்ளை தோண்டுவதற்கான நடவடிக்கைகளுக்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து சமூகங்களினதும்...

(02 ஆம் பக்கத் தொடர்)

இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டு வருகின்றமை நாட்டை நேசிக்கும் அனைவரையும் கவலைகொள்ளச் செய்திருக்கின்றது. மேலும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சட்டமும் ஒழுங்கும் உரியமுறையில் நிலைநாட்டப்பட தவறும் நிலைமை தொடர்வதானது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே, அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற நம்பகத்தன்மையுள்ள உள்நாட்டு தீர்வு பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அதன் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இத்தீர்வுப் பொறிமுறையின் மிக முக்கிய அம்சமாக அமைய வேண்டிய விசாரணை நடவடிக்கையானது யுத்தத்தின் இறுதிப் பகுதியோடு மாத்திரம் வரையறுக்கப்படாமல் பயங்கரவாத மற்றும் இன வன்முறை நடவடிக்கைகள் அனைத்தையும் உள்டக்கியதாக அமைவதோடு இச்சூழ்நிலைகளுக்கு வழிவகுத்த காரணிகளையும் விசாரித்து, கண்டறிந்து தீர்வுகாணும் வகையிலும் முழுமையானதாக அமைதல் வேண்டும்.

மேற்சொன்ன பின்னணிகளின் அடிப்படையில் நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை காணும் வகையில் பின்வரும் விடயங்களை முன்மொழிவுகளாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி முன்வைக்கிறது:

1. உண்மை கண்டறியப்பட்டு, தவறுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரஸ்பர மன்னிப்புக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையே மீளிணக்கத்தைக் கட்டியெழுப்பி நிரந்தர சமாதானத்தை எட்டுதல்.

2. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுத்தல்.

3. இந்நாட்டின் சகல இன மக்களும் தத்தமது மத கலாசார தனித்துவங்களைப் பேணி அவர்களுக்கு உரித்தான சட்டபூர்வ உரிமைகள் யாவற்றையும் சுதந்திரமாக அனுபவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதோடு, அதனை உறுதி செய்யும் வகையில் இந்நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பாரபட்சங்கள் ஏதுமின்றி அமுல் செய்யப்படல்.

4. தீர்வுக்கான சகல நடவடிக்கைகளிலும் பொறிமுறைகளிலும் அனைத்து சமூகங்களினதும் நலன்கள், அபிலாஷைகள் நியாயமான அடிப்படையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை உறுதி செய்தல்.

5. இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கக்கூடிய, அனைவரும் ஏற்றுத் கொள்ளத்தக்க நிரந்தர அரசியல் தீர்வொன்றினை குறித்த கால வரையறைக்குள் ஏற்படுத்துதல்.

6. சர்வதேச தலையீடுகளைத் தவிர்த்து நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் தேசிய நலனையும் பாதுகாக்கக் கூடிய வகையில் உள்நாட்டுப் பொறிமுறைகளை துரிதமாக அமுல்படுத்தலும் தேவையேற்படும் போது அவற்றை சாத்தியப்படுத்துவதற்கு பொருத்தமான சர்வதேச உதவிகளை பெற்றுக் கொள்ளுதலும்.

நாட்டு மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பவும் அவசியமற்ற சர்வதேச தலையீட்டைத் தவிர்த்து நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கும் இத்தகைய அணுகுமுறையே மிகச் சரியானது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நம்புகிறது.

## அமெரிக்காவின்...

(05 ஆம் பக்கத் தொடர்)

வலிவேரியாவில் சுத்தமான குடிநீர் கேட்டுப் போராடியவர்களுக்கு எதிரான துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் பற்றிய விசாரணை முடிவு இன்னும் கிடைக்கவில்லை. ஹங்வெல்ல துன்னானையில் சுத்தமான குடிநீர் கேட்டு சமாதானமாகப் போராடியவர் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்ட பொலிஸாரில் ஒருவர் பலியான சம்பவமும் நடைபெற்றது. முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தான் அரசாங்கத்தினால் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தமது தனிப்பட்ட சந்திப்புகள் மட்டுமன்றி தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்படுவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதுபோன்ற நிகழ்வுகள் இலங்கையின் நன்மதிப்பை எவ்வாறு பாதுகாக்கும் என்று ஏனோ உரியவர்கள் சிந்திக்க மறுக்கின்றனர்.

## கோவிலை...

(09 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் கல்வி, மருத்துவம் போன்றவற்றை இலவசமாகச் செய்கிறது.

அதற்காக அது எல்லாவற்றையும் எல்லோருக்கும் தானம்போல வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாதே. ஆனால் எம்மில் பலர் அப்படித்தான் எண்ணுகிறார்கள். எனவேதான் எல்லாவற்றையும் அரசிடமே எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத போது அரசாங்கத்தைத் திட்டுகிறார்கள்.

இந்தப் பணம் படைத்தவர்கள், கோவில்களுக்கு செலவழிப்பதுபோல தங்கள் பிரதேசங்களில் தொழில் மையங்களுக்காகச் செலவழிக்கலாம். கலை வளர்ச்சி, சமூகப் பணி, அறிவு மையங்கள் போன்ற பிற துறைகளுக்கும் மக்கள் வாழ்வுக்கும் செலவழிக்க வேண்டும் என்றே சொல்கிறேன்.

சமூகத்தைப் பிச்சை எடுக்க விட்டுக் கொண்டு வானுயரும் கோபுரங்களை எழுப்புவதால் எந்தப் பயனும் கிட்டாது.

இங்கே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இப்படி கட்டப்படும் பென்னாம் பெரிய கோவில்களைக் கும்பிடுவதற்குக் கூட இப்போது பல ஊர்களில் ஆட்களே இல்லை. அது மட்டுமில்லை, உற்சவ காலங்களில் சுவாமி தூக்குவதற்குப் பெடியளும் இல்லை. இதைப் பற்றி டி.பி.எஸ். ஜெயராஜ் தன்னுடைய இலங்கைப் பயணத்துக்குப் பிந்திய பேட்டியொன்றிலும் சொல்லியிருந்தார்.

கோவிலைக் கட்டுங்கோ கும்பிடத் தான் ஆளில்லை.

இதையெல்லாம் சொல்லி இந்தச் சனங்களையும் சமூகத்தையும் வழிப்படுத்துவது யார்?

## எகிப்தில் ஒரே...

முன் பக்கத் தொடர்

மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கெய்ரோவில் உள்ள மின்யா நீதிமன்றம் முர்ஸியின் ஆதரவாளர்கள் 529 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. மீதமுள்ள 16 பேர் விடுவிக்கப்பட்டனர்.

வெறும் இரண்டே தவணைகளில் இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பு அளித்துள்ளது எகிப்து நீதிமன்றம். இந்த வழக்கில் குற்றவாளிகளின் சார்பில் வழக்காட அனுமதி வழங்கப்படவே இல்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதாடி முடித்தவுடன் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

## ஹிஜாப் ...

முன் பக்கத் தொடர்

பிரதிவாதிகளாக வித்தியாலயத்தின் அதிபர் தக்சில நயன பெரேரா, துணை அதிபர் ஹேமமாலி, வகுப்பாசிரியை திருமதி நடோதுன்ன ஆகியோருடன் மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வியமைச்சர் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-23

——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com



மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, புரூணை, சீனா போன்ற தென் கிழக்காசிய நாடுகளில் வசிப்போர் பெரும்பாலும் ஒரே சாயல் உடையவர்களாகவே இருப்பார்கள்.

அதேபோன்று இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலுள்ளவர்கள் பெரும்பாலும் ஒரே முக சாயல் உடையவர்களாகவே இருப்பர். புரூணையில் பெருமளவு இந்தியர்களும் வர்த்தகத்தில் ஈடுபடுவதால் புரூணைக்காரர்களுக்கு இந்தியர்களுடன் நல்ல பரீட்சையம் உள்ளது. எனவே, இலங்கையரையும் அவர்கள் இந்தியர்கள் என்றே நோக்குகின்றனர்.

சில இந்தியர்கள் ஒரு சில விடயங்களில் 'அப்படி, இப்படி' நடந்து கொள்வதால் இந்தியர்களைப் பற்றி ஒருமாதிரியான எண்ணம் மலேகாரர்களிடம் இருக்கிறது. இதனால் இந்தியர்களின் சாயலில் காணப்படும் நம்மைப் பார்த்து நீங்கள் இந்தியனா என்று கேட்டாலே நமக்கு ஒரு மாதிரியாக ஆகிவிடும்.

எனவே, நானும் எனது நண்பர்களும் எப்படியாவது சுதாகரித்துக் கொண்டு வெளிநாட்டுக்காரன் போல் காட்டிக்கொள்ள முயற்சிப்போம். அதனால் வீதியால் நடந்து செல்வதற்கு கூட கடுமையான எதிர்ப்பை வெளியிடுவார் இஸ்மத் அலி. எப்போதும் காரிலேயே சுற்றுவதால் சலிப்பாக இருக்கிறது; பக்கத்திலுள்ள கடைகளுக்காவது நடந்து சென்று வருவோமே என்று நான் கூறினாலும் ஏற்கனவே அசல் இந்தியர் போல் நாமிருக்கிறோம் நடந்து சென்றால் அது உறுதியாகிவிடும் எனக்கூறி மறுத்து விடுவார், அவர். (ஆங்காங்கே நடந்து செல்லும் சிலரும் இந்தியராகத்தான் இருப்பர்.)

அது பரவாயில்லை. நீங்கள் இந்தியரா என்று கேட்டதற்கு முக சாயலையாவது காரணமாகக் கூறலாம்.

இலங்கை இந்தியாவிலா இருக்கிறது என்று கேட்டாளே அந்த பட்டதாரி மாணவி!

அடப்பாவிகளா, அடிப்படை அறிவே இல்லாமலா பல்கலைக்கழகம் போனீர்கள். என்று தமிழில் கூறியபோது என்ன விழங்கியதோ தெரியாது சிரித்துக் கொண்டார்கள்.

அதற்குப் பின்னர்தான் ஸ்ரீலங்காவைப் பற்றி பெரியதொரு விரிவுரையே நடத்த வேண்டியாயிற்று.

பூரூணையை விட 10 மடங்கு பெரிய நாடு இலங்கை.

ஐசே

அங்கு 23 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள்.

ஐசே

உங்கள் நாட்டைப் போல் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு செல்வதற்கு இரண்டு மணித்தியாலயங்கள் போதாது, ஒருநாள் தேவைப்படும்.

ஐசே

அன்றுதான் உலக வரைபடத்தில் புதிதாக ஒரு நாட்டைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவது போல் நாங்களும் ஆச்சரியத்துடன் அவர்களும் 'ஐசே' சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆச்சரியத்தில் அவர்களது முகமே சிவந்துவிட்டது என்றால் நம்பவா போகிறீர்கள்?

இலங்கையில் மலேயர்கள் பலர் வசிப்பதாகவும் தலை நகர் கொழும்பில் 'மலே வீதி' என ஒரு ஏரியாவே இருக்கிறது எனவும் தெரிவித்தபோது ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார்கள்.

இலங்கையில் பௌத்தர்களும் இந்துக்களும் முஸ்லிம்களும் செறிந்து வாழ்வதாகவும் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகளைப் பேசுவதாகவும் குறிப்பிட்டபோது ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனி எழுத்துக்கள் உள்ளனவா என்று கேட்டனர். ஆம் என்று கூறிய ஸிஹான் எனது டயரியை எடுத்து சிங்களத்திலும் தமிழிலும் அவரது பெயரை எழுதி விளக்கம் சொன்னார்.

மாட்டின் முதுகில் போடப்பட்ட குறிகள் போல் அந்த எழுத்துக்கள் என் நாட்குறிப்பில் இன்னும் இருக்கின்றன.

சாப்பிட்டு முடிந்து பணம் கொடுக்கும் கவுண்டருக்கு வந்தபோது அந்த மூன்று மலே நண்பர்களில் இருவர் பணம் கொடுப்பதற்காக பேர்ஸை வெளியில் எடுத்தனர். அதனைத் தடுத்த ஸிஹான் தான் செலுத்துவதாகச் சொன்னவுடன் 'தெங்ஸ்' என்று கூறி அவர்கள் விலகிக் கொண்டனர். ஸிஹான், 21 டொலர்களை செலுத்திவிட்டு வந்தார். எனக்கு ஆச்சரியமாகிப் போனது.

நம்மை விருந்தாளிகளாய் அழைத்துச் சென்று உணவு வழங்கினார்கள். நாமே பணம் செலுத்த முன்வரும்போது, இல்லை நாங்களே செலுத்துகிறோம் என்று ஒரு வார்த்தையாவது அவர்கள் சொல்லியிருக்கலாந்தானே? சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவர்கள் போல் தெங்ஸ் என்று விலகிக் கொண்டார்களே. இது அவ்வளவு நாகரிகமாக இல்லையே என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன். அவர்களிடமிருந்து விடைபெற்று காரில் சென்று கொண்டிருக்கும் போது அந்த மன உறுத்தலைக் கொட்டிவிட்டேன்.

ஓஹ் அதுவா? அது, இங்குள்ளவர்களின் பழக்கம்.

நமது நாட்டில் சிலர் சேர்ந்து கடைகளில் சாப்பிட்டால் யார் பணம் செலுத்துவது என்று போட்டிபோடுவோம். ஒருவர் முந்திக் கொண்டு பணம் கொடுத்தாலும் அதனைப் பறித்து அவரது பையிலேயே திணித்துவிட்டு, நாம் பணம் செலுத்துவோம்.

நானும் இஸ்மத் அலியும் பல்கலைக்கழக சிற்றூண்டிச் சாலையில் இப்படி நடந்து கொள்ளும்போது அதனை வேடிக்கைக்குரிய செயலாகப் பார்ப்பார்கள், இங்குள்ளவர்கள். அது அவர்களுக்கு புதினமான ஒரு விடயம். சிலபோது நாம் இருவரும் கென்டீனில் சாப்பிட்டுவிட்டு பணம் வழங்க கவுண்டருக்கு சென்றாலே அவர்கள் சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள். இரண்டு பேருமே பணத்தை தாருங்களேன் என்று நக்கலாக கூறி சிரிப்பார்கள்.

புரூணை நண்பர்களுடன் ஒன்றாக சேர்ந்து ஹோட்டல்களில் சாப்பிட்டால் சாப்பாடு முடிய அவரவர் தொகையை செலுத்திவிட்டு சென்று விடுவர். நாம் செலுத்த முற்பட்டால் 'இல்லை, நான் கொடுக்கிறேன்' என நம்மைப்போல சண்டை போட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஓகே, தெங்ஸ் என்று போய்க் கொண்டே இருப்பார்கள்.

எம்மிடம் பணம் இல்லாதபோது சும்மா களசுக்காக நான் செலுத்துகிறேன் என்று பேர்ஸை எடுத்து மாட்டிக் கொள்ளக்கூடாது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு

*எல்லாமே* இப்படியா இருக்கனும், நமக்கு மட்டும் ஏன்தான் இப்படியெல்லாம் நடக்குதோ? ஒழிந்துக்கிட்டு கத்தி கண்ணீரும் வத்திட்டு. எந்த சோகத்திலும் பாழாப்போன பசி வராம இருக்குதா. இரண்டு முற சாப்பிட வர சொல்லிட்டாங்க. வேற யாரு வீட்டுல? மொத்தமா கூடி நிண்ட சொந்தகாரங்க வீட்டுலதான். சீ.. சீ... பசி இல்லண்டு வாயால சொல்லிட்டன்; உண்மையா பசிக்குது. வவுறுக்குட்ட என்ன இவங்களால கேக்கவா முடியும்? என்னடத்தான் கேக்கலாம். மனம் தடுக்கிறப்போ பசி என்னா பொல்லாத மண்ணாங்கட்டியா? மறுக்கா மறுக்கா கூப்பிட்டு தொலைக்கிறாங்க; வா வா வந்து கொஞ்சம் சாப்பிடுன்னு. நான் என்னா செய்ய போய் சாப்பிட்டன். அவங்கள கத்தவக்கிறதுல நமக்கென்னா லாபம் இருக்கப்போகுது?

ஒரு விசயத்த நல்லா யோசிச்சு பாருங்களன், தெளிவான உண்மை தெரியும். தத்துவம் எல்லாம் சொல்ற மனநிலையில நான் இல்லைங்க, மனசுக்குள்ள சுள்ளுன்னு சுட்டதை சொல்லறன். கண்ணு, காது, மூக்கு எல்லாம் நம்மளோடய கடைசி மட்டுக்கும் ஒட்டிகிட்டுத்தானே இருக்கும் என்ற நம்பிக்கைலதாங்க நாம எல்லாம் வாழ்றோம். கொஞ்சம் யோசிங்க ஏதாவது ஒன்னு நம்ள விட்டு தொலைந்தா? யா அல்லாஹ்! குசன்ல மல்லாக்கா படுத்துகிட்டு அழுதுகிட்டே இருக்கு உசுறு. சத்தியமா கண்ணீர் வரல. என்ன செய்ய வத்திப் போயிடிச்சுப் போல.

அந்த நாட்களில் அவங்க பெரிசா நினைச்சுவெச்சுக்கிற சம்வங்கள்ட பாதிப்ப எங்கிட்ட சொல்லுவாங்க நான் அலட்டிக்கவே மாட்டன். அட இதுலெல்லாம் ஒரு கேஸ்ஸா என்று தூக்கிவீசிட்டு போயிட்டே இருப்பன். ஆனா இப்ப அந்த சனியன்புடிச்ச சம்பவங்கள்ள வார எல்லா அசிங்கம் புடிச்ச மனிசர்களின் முகத்துல எல்லாம் காறித்துப்பி நல்லா சாத்துறத்துக்கு மனது சொல்லுது. நம்ட உள்ளத்த இப்டியாவது ஆறுதல் கிடைக்க மனது போட்ட கணக்குத்தான் வேற என்னா? அன்டக்கி புண்ணாக்கு திங்கிற மாடாட்டம் போயிட்டன். இப்ப நினைக்கிறன் அவங்கட



கதைய கொஞ்சம் என்னாண்டு சரி கேட்ரிக்கலாமோன்னு.

தம்பி, நீ கார் வாங்குவியாடா? யாருக்கு தெரியும். வாங்கி உங்க மாமியத்தான் ஏத்துவா என்னயா கூட்டிப் போவபோறா? உண்மையா எனக்கு பொஞ்சாதியே இல்ல. இதுல எங்கருந்து என் மாமிய ஏத்துறது. ம்ம்... நான் என்ற மாமியத்தான் ஏத்துவன். அதுவும் முன்னுக்க ஏத்தி மன்னார் ரோட்டுல உங்களுக்கு ஹேறான் அடித்து காட்டிட்டே கூட்டிப் போவன் பாக்கிறிங்களா? சிலநேரங்கள் இப்படி ஏராளமா பேசிக்குவோம். சுவாரஸ்யமாக இருக்கும்.

லீவுக்குள்ள நாட்டுக்கு வந்தா காசிக்கு பஞ்சமில்ல பேக்குள்ள எவ்வளவும் திருடலாம். பச்சயா தெரியும் நான்தான் கள்ளனெண்டு. எப்பவாவது சொல்லிக்காட்டுவாங்க, தண்டனை எல்லாம் பெரிசா கிடையாது. ஸ்கூல்ல உட்டுட்டு திரும்ப ஏத்திட்டுவரனும் ஊட்டுக்கு. இவங்களுக்கு இருக்கிற பெரிய சந்தோஷங்கள் எதுலேயும் எனக்கு ஒன்னுமே விளங்காது. ஸ்கூல் பிரின்சிபல் சுமையா மிஸ் இவங்களுக்கு லைப்பிரரியை பொறுப்பெடுக்க சொல்லிட்டாங்களாம். அவங்க இத எனக்கி குறைந்தது பத்து தடவையாயவது நான் ஸ்கைப்ல கதைக்ககுள்ள சொல்லியிருப்பாங்க. போதாக்குறைக்கு லீவுக்கு ஊட்டுக்கு வந்தப்போ வேறயா நான் கேப்பன். யாண்டா பெரிய கவர்ணர் போஸ்டா தந்துதிருக்காங்க எண்டு. ஒனக்கு என்னா தெரியும் லைப்ரரி பீல்ட்ல டிகிரி எடுத்தவன் கீழ வேலை செய்றான். அவன் பொறாமை புடிச்சவன். முடிஞ்சா எங்க லைப்ரரிக்கு கொஞ்சம் புத்தகம் எடுத்து தாடா.

குசன்ல படுத்திருந்து கழுத்து வலி வேற. வெளியில போகவும் மனமில்ல. ஊட்டுக்கு முன்னுக்க இருக்கும் மாமரத்துக்கு கீழே நிண்டுகிட்டு யோசிச்சுகிட்டு இருக்கன். எனக்கு நான் கூட எதிரியா தெரியிரன். அந்தளவுக்கு நெஞ்சுக்குள்ள சுட சுட, காய்ஞ்சுபோன கண்ணுக்குள்ள இருந்து

**புத்தளம் எம்.எச். முஹம்மத்**


கண்ணீர் கஞ்சத்தனமா வெளித்தள்ளுது.

இந்த லூசு எங்க இருந்து வந்துது. கதவ தள்ளிகிட்டு வருவுது. நான் நக்கல் அடிக்கிறது அவள்ட தோஸ்துண்டு. ஒழுங்கா கதைக்கவும் தெரியாது எப்பவாவது வீட்டுக்கு வரும் சாப்பாடு கேட்டு. இவளுக்கு என்னா சொல்லி நான் விளங்கவைக்கிறது. சரி, என்னா செய்ய உள்ளபோய் கூடைக்குள் இருந்த பனீஸ் ஒன்றை எடுத்துக் கொண்டுவந்து கையில கொடுத்தன். அந்த அர லூசு எடுத்துட்டு போகாமல் உள்ளுக்குள்ளேயே எட்டி எட்டிப் பார்க்கிறாள். எந்த மொழியில இவளுக்குட்ட சொல்ல நான். எங்க உம்மா மவுத்துண்டு சொல்லுங்க.

(யாவும் கற்பனையல்ல)

## சிறு குறிப்பு

## கல்விச் சமூகம்: எதிர்பார்ப்பும் வகிபங்கும்




நூல் :
கல்விச் சமூகம் எதிர்பார்ப்பும் வகிபங்கும்

| | |
|---|---|
| ஆசிரியர்: | ஏ.எல். நௌபீர் |
| விலை: | ரூபா 400 |
| தொலைபேசி: | 077 8805277 |

*அன்பர் ஏ.எல். நௌபீர் எழுதிய கல்விச் சமூகம் எதிர்பார்ப்பும் வகிபங்கும் எனும் நூல் கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு மட்டுமன்றி, பெற்றோர், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வி நிருவாகிகள், கல்வித்துறையில் போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றும் ஆசிரியர்கள் என அனைத்து துறையினருக்கும் பயனுள்ள ஒரு நூலாகும்.*

*அண்மைக்காலத்தில் பல கல்வியியலாளர்களால் பல நூல்கள் எழுதப்பட்டிருப்பது தமிழுக்கு ஒரு சிறப்பாக உள்ளதைப் பார்க்கலாம். இருந்தாலும் இந்நூலானது ஒரு வித்தியாசமான பரிணாமத்தைப் பெற்றுள்ளது என்பது எது கருத்தாகும். ஏனெனில், இந்நூலாசிரியர் தொழில் ரீதியாக கல்வித் துறைசாராத தொழிலில் உள்ளவர். அத்துடன், இந்நூலில் கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகளை மிகவும் தெள்ளத் தெளிவாக இவர் விளக்கியுள்ளது ஒரு சிறப்பாகும். இக்குறைபாடுகளிலிருந்து விடுபடின் எமது கல்வி வெளிச்சத்தை நோக்கிச் செல்லும் என்பது நூலில் புரையோடியுள்ளது. அதிகமான புள்ளிவிபரங்களும் தகவல்களும் நூலின் தரத்தை மேலும் அதிகமாக்குகின்றன.*

*இந்நூலுக்கு அணிந்துரையை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் வழங்கியுள்ளார். இது இந்நூலின் தரத்திற்குக் கட்டியம் கூறுகிறது.*

*நூல் கல்வியின் முக்கியத்துவத்தை இரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டு, முஸ்லிம் சமூகத்தின் பாடசாலை, பல்கலைக் கழக, தொழிற் கல்வித்துறைகளின் இன்றைய அடைவுமட்டம் பற்றி விமரிசன ரீதியில் எடுத்தியம்புகிறது. தனியார் போதனைகள், மாணவர் சுற்றுலா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்பாடுகள், மாணவர் வீட்டு வேலை என்பன பற்றி இந்நூல் சிறப்பாக பேசியுள்ளது. பெற்றோர் தரம் 05 மாணவர்களுக்கு காட்டும் அக்கறையை சாதாரண தரம் படிக்கும் மாணவர்களுக்கு காட்ட முற்படுவதில்லை என்பதை நூலாசிரியர் எடுத்துக் கூறுகின்றார்.*

*எமது முஸ்லிம் பாடசாலைகளில் காணப்படும் நிருவாகச் சீர்கேடு, வெளியீட்டு மட்டங்களின் தன்மை, பல்கலைக் கழக மாணவர்களின் நிலைமாற்றம் என்பன பற்றி தெளிவுபடுத்தும் இந்நூல், இறுதியாக முஸ்லிம் சமூகம் அறிவுச் சமூகமா என்ற வினாவுடன் எம்மை விட்டு விடை பெறுகிறது.*

*உண்மையில் இது எல்லாப் பெற்றோராலும் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டிய ஒரு நூல் என்பது எனது கருத்தாகும்.*

இஸட். ஏ. அப்துர் ரஹ்மான்

## ஓர் இனத்திற்கு...

(11 ஆம் பக்கத் தொடர்)

*நாட்டை முன்னேற்றுவதற்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும். இதுதான் எங்களின் மாற்று வழி. இதை முன்னேற்ற தேவையான முக்கிய விடயமாக கல்வி, விளையாட்டு, சுகாதாரம் போன்றவை இருக்கின்றன. இவற்றில்தான் அதிகமான முதலீடுகளை செய்யவேண்டும்.*

*இன்றைய மஹிந்த அரசாங்கத்தின் திட்டம் உல்லாசப் பிரயாணமாக இருக்கின்றது. இவர்கள் அதிகமான முதலீடுகளை ஹொட்டல்கள் அமைப்பதிலும் பாதைகள் நிர்மாணிப்பதிலும் முதலீடு செய்கின்றார்கள். எங்களுடைய முதலீடுகளை நாங்கள் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செய்தல் வேண்டும். இலங்கையை பொறுத்தவரை பிரதான முதலீடாக கல்விதான் இருக்க வேண்டும். அனைத்து மாணவர்களினதும் கல்விப் பொறுப்பை அரசாங்கம் எடுக்க வேண்டும். இன்று ஒரு பிள்ளைக்கு பாடசாலை அனுமதி கிடைக்காவிட்டால் பெற்றோர் அரசியல்வாதிகளுக்கு பின்னால் செல்லும் நிலை, போலியான சான்றிதழ் தயாரிக்கும் நிலை உருவாகியுள்ளது. பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவது இன்று பெற்றோரின் கடமையாகவுள்ளது. நாங்கள் இதை அரசின் கடமையாகத்தான் கருதுகின்றோம். இன்று எல்லா மக்களுக்கும் தேவையான சுகாதார பரிசோதனையை செய்யக்கூடிய ஓரிடம் இல்லை. அதனை செய்து கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க் குமிழிகள்



காஞ்ச தென்னமரக் கிளைகளுக்குள்
அஞ்சு அழகான பெண்கள்

அந்த ஓலைக் குடிசைக்குள்
அவர்கள்தான் அழகானவர்கள்
அதைவிடவும்
மனதுகள் மிக மிக அழகானவை


பேசினால் தென்றல்
மெல்ல நகரும்
கூட்டுச் சேர்ந்தால் ஐ.நா.வும் தோத்துப்போகும்

பொறுமையைப் பார்க்கவேண்டுமா
இந்தப் பெண்களைப் பாருங்கள்

பேசா மடந்தை என்பார்களே
அதைப்போல
வயது வந்தவர்களுக்கெல்லாம்
சீதனம் ஒரு நோய்
பெண் இல்லையென்றால் தெரியும்
ஆண்களின் பீத்தல்கள்

உயிர் பிழைப்பதற்கே உணவு
யுத்தகாண்டம் வறுமை
இதில் - உணர்வுகள் உணர்சிகள் எம்மாத்திரம்?

ஹக்கீம், கலைதாசன்






தன் உணவை சுருக்கிக்கொண்ட
அல்லாமா அவர்

போர்வைக்குள் தடித்த மெத்தைகளில்
சுகமாய் கனவு காணும் நாமிருக்க
நடு நிசியில் தன்னை
ரப்புக்கு அர்பணித்தவரா
சுகம் அனுபவிப்பவர்கள்...

தஹஜ்ஜத்தின் சுவை கண்டதில்
தன் பிணி மறந்து
கடும் குளிரிலும் எழுந்து நின்றார்
தன் வாழ்வின் இறுதி நொடிகளில்

## வாழ்க்கைப் பக்கங்களிலிருந்து...

சுவனம் மீது பிரியம்
இஸ்லாத்தை சுமந்த உள்ளத்தில்
அதற்காய் சில தியாகங்களும்
சிலபோது முஹஸ்துதிகளுடன்

மறுமையை மறந்தோ – அல்லது
சுவன இன்பங்கள் நினைவிழந்தோ
எம்மவர்கள் இவ்வுலக இன்பத்தை
தேடுகின்றனர் தெருத் தெருவாய்

பரஸ்பரம் பெருமையடித்துக் கொள்ளும்
உலக வாழ்வை விட்டு
கொஞ்சம் வெளியே வந்து பாருங்களேன்
சில மகான்களின் வாழ்க்கையை

அல்லாமா இக்பாலின்
வாழ்க்கைப் பக்கங்களை
புரட்டிப் பாருங்கள்
உலக வாழ்வுக்கென எதுவுமில்லை

நாமோ எத்தனை முறை அலைகிறோம்
பட்டங்களைப் பெற...
தன் பெயருடன் 'கவிஞர்' ஐ
இணைக்க மறுத்த கவிஞர் அவர்

வயிறு முட்ட உணவு தேடுகிறோம்
ஒரு வேளை உணவுடன்
தனது நோய்க்கான
பரிகாரம் மேற்கத்தேய
ஔடதங்களில் என்றதும்
அவற்றை மறுத்த கொள்கைவாதி அவர்

அல்லாமாவின் சுகத்துக்காய்
பிரார்த்தித்தவர்களை நோக்கி
தன் கவிதை நடையில்
சில வார்த்தைகளை அழகாய் உதித்தார்


ஒரு மு:.மினின் அடையாளத்தை
நான் சொல்கிறேன் – மரணம் வரும்
காலை அவன் வதனம்
மலர்ச்சியுற்றிருக்கும்

அவரின் முகத்தில் தாடி
இல்லாமலிருக்கலாம்
ஆனால், தூய்மையான உள்ளத்தின்
சொந்தக்காரர்

சில சிறந்த மு:.மினுக்கான
பண்புகள்
அல்லாமா இக்பாலின்
வாழ்க்கை பக்கங்களிலிருந்து...

ஸனீரா அப்துல் மஜீத்
இஸ்லாஹிய்யா

## சட்டமுண்டோ?



மாடறுப்பை எதிர்க்கின்ற
மனிதர்க்கு ஏன் கவலை
வீடெல்லாம் வளர்க்கின்ற
விலங்கினத்தை என்ன செய்வார்?

ஒரு நாளில் முப்படைக்கு
ஒரு தொகுதி மாடு வேண்டும்
கறி சமைக்க மீன் தகுமா
கணக்கிட்டுப் பார்ப்பாரோ!

புத்தர் கால மக்களெல்லாம்
புண்ணாக்கா புசித்தார்கள்
சத்துள்ள உணவைத்தான்
சட்டியிலே சமைப்பார்கள்!

கொன்றாற்தான் பாவமென்பார்
தின்றாலோ தீரு மென்பார்
என்றைக்கு இதை வெறுத்தார்
ஏனிந்த இழி போக்கு!

மாமிசத்தை ருசி பார்த்த
ப க்களிதை வெறுத்தாரோ
யெல்லாம் மாட வைத்தால்
புண்ணியங்கள் நிறைந்திடுமா?

கால் நடைகள் வளர்ப்பார்கள்
காலம் தள்ளல் எவ்வாறு
பால் குடிக்கப் பசு வேண்டும்
பசி தீர என்ன செய்வார்?

படைப்பெல்லாம் மனிதர்க்கு
படைத்தவனை வணங்குங்கள்
தீண்ட வேண்டாம் மாடுறுக்க
தடுப்பதற்கு சட்டமுண்டோ?

மூதூர் கலைமேகம்

## வெறுமையான சமூகம்


கல்புகளில் காணாமல்
போகின்ற ஈமானியங்கள்
மனித நேயங்கள்
மங்கிப்போகும்
மன விருட்சங்கள்

சொத்துப் பெருகி
சொகுசு வாழ்வு தர
போற்றுதற்குரிய வீடு

பசித்து துடித்து வரும்
ஆன்மாவை பதற விரட்டி
சமமானவர்கள் வடிகட்டி
விருந்தோம்பும் வள்ளலின்
பரம்பரைகள் இவர்கள்

இளமை கடந்த வயோதிபம் - அதில்
வறுமை மறைத்து
குமுறி அழுகின்ற கன்னிகளின்
கண்ணீர் துடைக்க
வைரங்களிடமே வரதட்சணை
கேட்கும் வைராக்கிய
புதல்வர்கள் அவர்கள்

அழிவுக்கு அடித்தளமிடும்
அனாச்சாரங்கள்
அடுத்த நொடியில் மடிந்துபோகும்
அநாகரிகங்கள்
அரியாசனம் அமைத்து



ஆட்சி செய்ய துடிக்கும்
வெறும் சமூகங்கள் இவை

இம்மையின் சுகத்தால்
சுருட்டப்பட்ட இறையச்சமும்
மறுமைக்கு வெறுமையாகும்
மக்கள்தான் இவர்கள்
வெறுமையான சமூகம்

ஏ.பி.எப். றமீஸா
இஸ்லாஹிய்யா


## கடதாசிப் பூக்கள்

செத்துக் கிடக்கும் - அவன்
நரம்புகளுக்கிடையில்
இன்னும் உயிரோட்டத்துடன் - அவன்
உணர்வுகள்

வயது குறைந்தவன் - என்று
வாய்விட்டு பரிகாசித்து
உரத்து சொல்லும்
ஊனுண்ணிகள்
உணரவில்லை
அவன் - ஒரு
மாற்றுத் திறனாளி என்பதை

தீண்டத்தகாதவன் என்று
வேண்டத்தகாத வார்த்தைகளை
அம்பாய் வீசும்
அஃறிணை மனிதர் கூட்டம்
எப்பொழுது?
சிந்திக்கும் - அவனும்
மனித சந்ததி என்று

காரணமும் கர்த்தாவும்
இறைவனான போது
அவன் மனிதனாய்
செய்த தவறென்ன?



ஊனமென்று
உதாசீனம் செய்யும்
ஊனமிக்க இதயங்கள்
உணர்ந்து கொள்ளட்டும்
எண்ணங்களும் செயல்களும்
தூய்மையாகின்ற போது
கடதாசிப் பூக்கள் கூட
மணக்கும்

எம்.கே.எப். பஸீலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASMA TRAVELS & Tours
## Haj Umra Service



ஏன் நீங்கள் அஸ்மா ட்ரவல்ஸ் ஐ தெரிவு செய்ய வேண்டும்?

- 12 நாட்கள் கொண்ட பெக்கேஜ்
- அமானிதங்களை நிறைவேற்றும் வகையிலான சிறந்த சேவை
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அதன் உரிய விளக்கங்களுடன் பார்வையிடுதல்
- பூரண திருப்திப்படுத்தும் வகையிலான உணவு தங்குமிட ஏற்பாடுகள்
- VIP மற்றும் குடும்ப ரீதியானோருக்குமான ஏற்பாடுகள்

- பாஸ்போர் ஏற்பாடுகள்
- அங்கீரிக்கப்பட்ட சுற்றுலா ஏற்பாடுகள்
- இந்தியா, மலேசியா வீசா ஏற்பாடுகள்

என இன்னும் பல சேவைகளும் உண்டு



உரிமையாளர்:
அஷ்ஷெய்க், அல்ஹாஜ்,
ஏ.ஜெ.எம். நியாஸ்
**0777 412 168**

காரியாலயங்கள்

| | |
|---|---|
| UC, Road Buhary Junction, Kinniya - 04 | 889, 1/1, 1st Flour Maradana Road, Punchi Borella Colombo - 10 |
| 026-2236183 | 011 3054 904 |

# ஓர் அரிய சந்தர்ப்பம்



கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)

கட்டணம் ரூபா 9500.00

விஷேட வில்லை தேவைப்படின் கட்டணம் ரூபா 15000.00

## குவைத் வைத்தியசாலை புத்தளம்

தொடர்புகளுக்கு: 0322266480, 0777272107, 0773171720

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே

மே 01ஆம் திகதிக்கான பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

# LAW

**LLB (Hons)** From University of Wolverhampton

The BTEC HND in Law delivered by BCAS Campus is awarded by the Edexcel, UK. Major portion of the curriculum is contextualized on existing legal system in Sri Lanka. The student is assessed through Examination( Open and Closed books) , Time Controlled Assessment, scenario based course works , written and viva voce examinations plus presentations.

On successful completion of the HND, the students are accepted for LLB (Hons) top-up which is again delivered locally for the University of Wolverhampton, UK. This degree awarded by the said university has been recognized by the Council of Legal Education, Sri Lanka making way for the students for direct entry to the Sri Lanka Law College.

The flying faculty of the UK University is substantially involved in the delivery process while the assessments and examinations are exclusively conducted by the university itself. This set-up gives the local students a harmonious blend of local and international learning experience as the students enjoy lectures delivered by the flying faculty with the online library facility made available.

## BTEC HND - edexcel

| Semester 1 | Semester 2 | Semester 3 | Semester 4 |
|---|---|---|---|
| + Legal System<br>+ Law of Contract<br>+ Criminal Law<br>+ Law of tort | + Constitutional Law<br>+ Company Law<br>+ Family Law<br>+ Employment Law | + Evidence<br>+ Law of Property<br>+ Human Rights Law<br>+ Interpretation of Statutes | + Commercial Law<br>+ International Law<br>+ Jurisprudence<br>+ Project on Legal Research |

## LLB (Hons) – 3rd Year Structure

| Year Long Modules | Semester 1 | Semester 2 |
|---|---|---|
| + Research Methods & Project<br>+ Equity & Trusts | + International Trade & finance Law<br>+ Counter Terrorism Law Policy & Practice | + Contemporary Issues on European Law<br>+ Law of Criminal Evidence |

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

15 YEARS

Hotline : **077 311 4105**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Colombo Campus :**
32, Dharmarama Road, Colombo 06.
Tel : (+94) 11 250 1145 , (+94) 11 255 9255
Email : info@bcas.lk www.bcas.lk

**Kandy Campus :**
344, Peradeniya Road, Kandy. Tel : 081 222 4731


**Batti Campus :**
294, 1/4 Trinco Road, Batticalo. Tel : 065 222 8451

**Wayamba Campus :**
103, Dambulla Road, Kurunegala. Tel : 037 2221144

**Jaffna Campus :**
16, Point Pedro Road, Jaffna. Tel : 077 710 2131

மாவனல்லையில்
# MITT
வழங்கும் தமிழ் மொழி மூல தொழில் நுட்பப் பாடநெறிகள்

# வளமான எதிர்காலத்திற்கு தொழிற்கல்வி வாய்ப்பு




**G.C.E. O/L** முடித்து விட்டீர்களா?
தொழில் ஒன்றைக் கற்று
தொழில் வாய்ப்பைப் பெற
இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

இப்பயிற்சி நெறி.........
- கோட்பாடுகள் மற்றும் செயல் முறைகளைக் கொண்டது
- தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களை உள்ளடக்கியுள்ளது.

| Courses | Duration Months |
|---|---|
| Automobile Mechanic | 18 |
| AC & Refrigeration Mechanic | 12 |
| Automobile Electrician | 12 |
| Domestic Electrician (Wiring) | 12 |
| Plumbing / Welding | 6 |
| Mobile Phone Repairing | 2 |

தேவையானோருக்கு விடுதி மற்றும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

ஸகாத் பெறத்தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்



எமது நிறுவனம் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளது. (TVEC PO8/0073)

பதிவுகளுக்கு உங்கள் பெயர், விலாசத்துடன் MITT என Type செய்து 0777 412097 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்

விண்ணப்ப முடிவுத்திகதி **2014 மே 15**

**MAWANELLA INSTITUTE OF TECHNICAL TRAINING**
UDATHENNAWATTA, GANETHENNE, HINGULA, MAWANELLA
TEL: 035 2240944 | 0777 412097 || EMAIL: techmaw@gmail.com
CONDUCT : M.H.M. MUHALIS : 0777 429998

INSIGHT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.